பக்கங்கள் : 24+XII = முப்பத்தாறு.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 01 வியாழக்கிழமை (14.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :139

# குடாநாட்டில் 5,100 வீடுகளை அமைக்க அரசசார்பற்ற நிறுவனங்கள் இணக்கம்!

## அதற்கான உடன்பாடு விரைவில் கைச்சாத்தாகும்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்14

**ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் குடாநாட்டில் மொத்தம் 5,408 வீடுகள் முற்றாக அழிந்தும், சேதமடைந்தும் போயின. இவற்றில் 5,100 வீடுகளை மீள அமைக்கவும், திருத்தி அமைக்கவும் பல அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளன; இணக்கம் தெரிவித்துள்ளன.**

**இந்தப் பணிகளைச் செய்வதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று சம்பந்தப்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் இடையில் விரைவில் கைச்சாத்திடப்படும்.**

**இத்தகவலை யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் உதயனுக்குத் தெரிவித்தார்.**

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் எதுவும் உண்டா என்று கேட்டபோதே அரச அதிபர் இத்தகவலைச் சொன்னார்.

சுனாமியால் 5 ஆயிரத்து 408 வீடுகள் முழுமையாகவும் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன.

இந்த வீடுகளை மீளக்கட்டி உரியவர்களுக்குக் கையளிக்க சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற அமைப்புகளுடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம் -

பத்துக்கு மேற்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் மொத்தம் 5 ஆயிரத்து நூறு வீடுகளை அமைத்துத்தர இணக்கம் தெரிவித்துள்ளன -

அந்த வீடுகள் அமையவிருக்கும் இடங்களை அளவிடும் பணிகளை நகர அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டு வருகின்றது. அந்தப்

(24ஆம் பக்கம் பார்க்க)

## புதுவருடப் பிரார்த்தனை

நேற்றிரவு பிறந்த பார்த்திப வருடத்தை முன்னிட்டு யாழ். நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலுமுள்ள ஆலயங்களில் விசேட பூசைகள் இடம்பெற்றன. ஆங்காங்கே பட்டாசு வெடிச்சத்தங்கள் கேட்டன.

## கைலாசபிள்ளையார் ஆலயத்தில் நாளை பட்டாபிஷேகம்

நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீ சௌபாக்கிய கௌரி மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கும் 10.30 மணிக்கும் இடைப்பட்ட சுபவேளையில் பட்டாபிஷேகமும், இராஜ உபசாரமும் நடைபெறவுள்ளது. (எ)

**உங்கள் அபிமானத்துக்குரிய உதயன் வழமைபோல் நாளையும் வெளிவருவான்.**

## தமிழர் அவலத்தை எடுத்தியம்பும் மேதினப் பேரணிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.14

தமிழ்மக்களின் அவலங்களை எடுத்தியம்பும் வகையில் ஊர்திகள் சகிதம் மாபெரும் மேதினப் பேரணியை இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

"எமது நிலம் எமக்கு வேண்டும்" என்ற கோஷத்துடன் மேதினப் பேரணியை எழுச்சியுடன் இவ்வருடம் நடத்த யாழ்.மாவட்ட எழுச்சிப் பேரவை ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் சகல தரப்புத் தொழிலாளர்களும் பொதுமக்களும் பங்கேற்கும் வகையில் நடத்திய மேதினப் பேரணிகள் போன்று பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் இம்முறை மேதினத்தைக் கொண்டாடு

(24ஆம் பக்கம் பார்க்க)




### திருமலை தோப்பூரில்

## காவலரணைத் தாக்கினர் என்று புலிகள் மீது இராணுவம் புகார்

திருகோணமலை,ஏப்.14

திருகோணமலை மாவட்டத்தில் தோப்பூர் இராணுவக்காவலரண்மீது நேற்றுமுன்தினம் மாலை மோட்டார் தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தினர் என்று திருமலை மாவட்ட இராணுவ அதிகாரி, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார்.

இத்தாக்குதல் 81எம்.எம். மோட்டார் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் -

இத்தாக்குதலில் எவருக்கும் காயமோ, முகாமுக்குச் சேதமோ ஏற்படவில்லை என்றும் -

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பாக கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## படையினர்–புலிகள் சந்திப்புகளில் அரச தரப்பிலிருந்தும் பிரதிநிதிகள்

### கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் கோரிக்கை

மட்டக்களப்பு,ஏப்.14

மட்டக்களப்பில் படை அதிகாரிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே இடம்பெறுகின்ற சந்திப்புகளில் அரச தரப்பில் இருந்தும் குறைந்தது இரண்டு பிரதிநிதிகளாவது கலந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப் புலிகள் கோரிக்கை ஒன்றை முன் வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு தரப்புகளுக்குமிடையில் ஏற்கனவே, நடைபெற்று வந்த இச்சந்திப்புக்கள் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. குறிப்பிட்ட புரிந்துணர்வு ரீதியிலான சந்திப்புகளின் போது ஏற்படும்.

(24ஆம் பக்கம் பார்க்க)

### வழமையான பயிற்சிதான் நடந்தது:

## இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலிகளின் ஷெல் எதுவும் விழவில்லை!

### திருமலைப் பொறுப்பாளர் எழிலன் விளக்கம்

திருகோணமலை,ஏப்.14

எமது காட்டுப்பாட்டுப் பகுதியில் வழமையான மோட்டார் தாக்குதல்பயிற்சி இடம்பெற்றது. ஆனால், எந்த மோட்டார் ஷெல்லும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விழவில்லை. இதை உறுதிப்படுத்தக் கூடிய தகவல்கள் எம்மிடம் உள்ளன.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குத் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தோப்பூர் இராணுவக் காவலரண்மீது மோட்டார் தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர் எனப் படையினர் தெரிவித்த முறைப்பாடு குறித்து கண்காணிப்புக் குழுவி

(24ஆம் பக்கம் பார்க்க)

## 25 பாடசாலைகளைப் புனரமைக்க வெளிநாட்டு அமைப்புகள் இணக்கம்

கொழும்பு,ஏப்.14

சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 11 பாடசாலைகளையும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 14 பாடசாலைகளையும் ஜேர்மன், ஜப்பான் அரசுகளும் சர்வதேச தொண்டர் அமைப்புகளும் புனரமைக்க முன்வந்துள்ளன.

சுனாமி அனர்த்தப் புனரமைப்புச் செயலணி இத்தகவலை வெளியிட்டுள்ளது.

செயலணி இதுதொடர்பாக விடுத்துள்ள அறிக்கையின்படி -

ஆழியவளை சி.சி.தமிழ் மகாவித்தியாலயத்தை ஜப்பான் சர்வதேச கூட்டு ஸ்தாபனம் புனரமைக்கவுள்ளது.

செம்பியன்பற்று றோ.க.தமிழ் கலவன் பாடசாலை, கட்டைக்காடு றோ.க.தமிழ் கலவன் பாடசாலை, மாமுனை ஜி.ரி.எம். பாடசாலை, மணற்காடு ஆர்.சி.தமிழ் கலவன் பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரி வித்தியாலயம், வெற்றிலைக்கேணி ஆர்.சி.தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றை ஜேர்மன் அரசு புனரமைக்கும்.

வல்வை ஆர்.சி.தமிழ் கலவன் பாடசாலை, வல்வை சிவகுருபாடசாலை ஆகியவற்றை

(24ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் யுத்தத்திற்குத் தயாராகின்றனர் பதில் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.14

"விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் யுத்தமொன்றுக்குத் தயாராகி வருகின்றனர். எனவே, அரச படையினர் நிதானமாகவும், பொறுமையுடனும் நடந்து கொள்ளவேண்டும்" - இப்படித் தெரிவித்துள்ளார் பதில் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க.

ஹொரனை நகரில் நேற்றுநடைபெற்ற கூட்டுறவுச் சிக்கன வங்கியின் புதிய கட்டடமொன்றைத் திறந்துவைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

யுத்தமொன்றிற்குச் செல்வது அரசின் நோக்கமல்ல. அமைதி ஒப்பந்தத்தைக் கடைப்பிடித்து அதற்கேற்பவே அரசு செயற்பட்டுவருகிறது. ஆனால், விடுதலைப் புலிகள் அவ்வாறு

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# விண்ணப்பம் அனுப்பும் முடிவு திகதி நீடிப்பு

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் கீழுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்குப் பட்டதாரிகளை ஆள்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி நாளை என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது எதிர்வரும் 21 ஆம் திகதி வரை முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-202)

# கடல்வள ஆசிரியர்களுக்கு!

யாழ்ப்பாணம், ஏப்.14

புதிதாக நியமனம் பெற்று கடமையாற்றும் கடல்வள ஆசிரியர்களுக்கான அவசரக் கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாவலர் வீதியிலுள்ள பிறைற்றன் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் புதிதாக நியமனம் பெற்ற கடல்வள ஆசிரியர்களுக்கான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விண்ணப்பம் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதாக நீர் உயிர்வள ஆசிரியர் சங்கத் தலைவர் கே.பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஒ-202)

# கடனடிப்படையில் சூரிய மின்கலங்கள்

கனடா ரெக் நிறுவன கடன் திட்ட அடிப்படையின் கீழ் பொருண்மிய மதியுரையகத்தினால் முதற்கட்டமாக 10 சூரிய மின்கலங்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

இத்திட்டத்தில் முதற்கட்டமாக 25 சூரிய மின்கலங்கள் வழங்கப்பட்டன. மாதாந்தம் 2000 ரூபா வீதம் 11 மாதங்களில் இதற்கான கடன் தொகை மீளளிக்கப்படவேண்டும். (ஒ)

# நிர்வாகப் பிரச்சினை காரணமாக புலனாய்வு ஸ்தம்பிக்கும் அபாயம்

கொழும்பு,ஏப்.14

நிர்வாகப் பிரச்சினைகளின் எதிரொலியாக இலங்கைப் புலனாய்வுச் சேவையில் ஸ்தம்பித நிலையொன்று ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது எனப் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைப் புலனாய்வுத்துறைக்குப் பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதமே இந்த ஸ்தம்பித நிலைமைக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே, இலங்கைப் புலனாய்வுச் சேவையின் பணிப்பாளராகக் கடமையாற்றிய கே.வி.ரி.சுமணசேகர வெளிநாட்டுப் புலனாய்வுச் சேவையின் தலைவராக மாற்றப்பட்டார்.

இதனால், புலனாய்வுச் சேவையின் பணிப்பாளர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு புதியவர் ஒருவரை நியமிக்கும் நடவடிக்கை இம்மாத இறுதியில் இடம்பெறலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடைப்பட்ட காலப்பகுதியில் உரிய தலைமையில்லாமலுள்ளமை புலனாய்வுத் துறையில் தாக்கத்தை ஏற்படுத்துமென்று சம்பந்தப்பட்ட தரப்பினர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அரச புலனாய்வுத்துறைகளில் இப்படி அடிக்கடி இடம்பெறும் மாற்றங்கள் புலனாய்வுத் துறைக் கட்டமைப்பையே குழப்பியடித்துவிடும் என்று பாதுகாப்புத்துறை ஆலோசகர்கள் கருத்துத் தெரிவித்தனர். (க)

# அமைச்சர்கள் பேரியலும் டக்ளஸும் ஆஸி.பயணத்தை ரத்துச்செய்தனர்

கொழும்பு,ஏப்.14

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகள் தொடர்பான ஆய்வுகளுக்காக ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லவிருந்த இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் அங்கம் வகித்த அமைச்சர்களான பேரியல் அஷ்ரப் மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் பயணத்தை ரத்துச்செய்துள்ளனர். கிழக்கில் உள்ள தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்த விஜயத்தில் தான் சேர்ந்து கொள்ளவில்லையென்று அமைச்சர் பேரியல் அஷ்ரப் தெரிவித்திருக்கிறார்.

தனது பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த விஜயத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இணைந்துகொள்ளவில்லையென்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆஸ்திரேலிய விஜயத்தின்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு தேவையான பாதுகாப்பை வழங்கமுடியும் என்று ஆஸ்திரேலியப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்திருந்தபோதும் அந்த நாடு தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தின்போது தமது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படலாமென்பதால் அமைச்சர் டக்ளஸ் இந்தப் பயணத்தை ரத்துச்செய்தார்என்று சொல்லப்படுகிறது. (க)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.14

காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

இன்று அதிகாலை 5 மணிக்கு அபிஷேகம், பூசைகள் ஆரம்பமாகி நடைபெறும். பிற்பகல் ஒரு மணிக்கு வசந்தமண்டபப் பூசைகள் இடம்பெற்று 4 மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருள்வார். (ஒ-204)

★ ★ ★

கரவெட்டி,ஏப்.14

அல்வாய், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் ஆலயத்தின் பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (ஒ-70-204)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.14

யாழ்ப்பாணம் அத்தியடிப் பிள்ளையார் ஆலயத்தில் தேர்த் திருவிழா இன்று நடைபெறவுள்ளது. காலை 8.15 மணிக்கு வசந்தமண்டபப் பூசைகள் இடம்பெற்று, பிள்ளையார் தேரில் எழுந்தருள்வார். (ஒ-204)

★ ★ ★

நல்லூர்,ஏப்.14

நெழுவினி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

இந்தியாவிலிருந்து எடுத்துவரப்பட்ட பஞ்சமுக விநாயகர் விக்கிரகம் முதன்முறையாக தேரில் ஆரோகணிக்கப்படும் என ஆலய அறங்காவல் சபைத் தலைவர் இ.கந்தையா தெரிவித்தார். (ஒ-111-204)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.14

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலய பார்த்திப வருடப் பெருந்திருவிழா இன்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளன. இதில் எதிர்வரும் 24 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 25 ஆம் திகதி தீர்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ஒ-203)

# வின்சன்ட்டின் இரட்டைச்சதத்தால் முதல் இன்னிங்ஸில் 522 ஓட்டங்களைக் குவித்தது நியூஸிலாந்து அணி

## பதிலளித்தாடும் இலங்கை ஒரு விக்கெட் இழப்புக்கு 10 ஓட்டங்கள்

வின்சன்ட்டின் இரட்டைச்சதத்தால் முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 522 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் தனது ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது நியூஸிலாந்து. பதிலளித்தாடும் இலங்கை அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவின் போது 2 ஆவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டினை இழந்து 10 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் நேப்பியரில் நடைபெறுகிறது. இரண்டாம் நாள் ஆட்ட நேரமுடிவின்போது நியூஸிலாந்து முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் நடந்தது. களத்தில் அரைச்சதங்களுடன் வின்சன்ட், பிளமிங் இருந்தனர்.

ஆட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்தில் பிளமிங் வெளியேறினார். அவருக்கடுத்து களமிறங்கிய மெக்குலம் ஓட்டம் எதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார். எனினும், வின்சன்ட் பின் வந்த பந்துவீச்சாளர்களுடன் இணைந்து அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி இரட்டைச் சதமடித்தார். மில்ஸ், வைஸ்மன் ஆகிய இருவரும் களத்தில் நின்று வின்சன்ட்டுக்கு பக்கபலமாக இருந்தனர்.

இறுதியில் 9 விக்கெட்டுக்களை இழந்து 522 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் தனது ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது நியூஸிலாந்து.

விளையாட்டு

அணி சார்பாக வின்சன்ட் 224 ஓட்டங்களையும், பிளமிங் 88 ஓட்டங்களையும், வைஸ்மன் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும் பெற்றனர். இதன்படி இலங்கை அணியைவிட 311 ஓட்டங்களால் நியூஸிலாந்து முன்னிலையில் இருந்தது.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக வாஸ் 6 விக்கெட்டுக்களையும் மலிங்க 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது இரண்டாவது இன்னிங்


இரட்டைச்சதம் அடித்த களிப்பில் வின்சன்ட்

ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஒரு விக்கெட்டினை இழந்து 10 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது போதிய வெளிச்சமின்மை காணப்பட்டது. இதனால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

ஜயசூரிய 2 ஓட்டங்களில் மார்டினின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அத்தபத்து 5 ஓட்டங்களுடனும் மஹரூப் ஒரு ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர்.

இன்று ஆட்டத்தின் நான்காம் நாளாகும். (க-3)

# கங்குலிக்கு ஆறு ஆட்டங்களில் விளையாடத்தடை

## பந்துவீசுவதற்கு அதிகநேரம் எடுத்துக்கொண்டதால்

பாகிஸ்தானுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடந்த 4 ஆவது ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் இந்திய அணி பந்துவீச அதிக நேரம் எடுத்துக்கொண்டதற்காக அணித் தலைவர் கங்குலிக்கு 6 ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதை எதிர்த்து மேன்முறையீடு செய்யப் போவதாக இந்தியக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி தொடரில் மீதமுள்ள இரு ஆட்டங்களிலும் கங்குலி விளையாடமாட்டார். இதையடுத்து ராகுல் டிராவிட் தலைவர் பொறுப்பை வகிப்பார். ஷேவாக் உபதலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அகமதாபாத்தில் நடைபெற்ற இந்த ஆட்டம் 48 ஓவர்களைக் கொண்டதாக மாற்றப்பட்டது. குறித்த நேரத்துக்குள், 48 ஓவர்களை இந்திய அணி வீசிமுடிக்கவில்லை. 3 ஓவர்களை வீச இந்திய அணி கூடுதல் நேரம் எடுத்துக்கொண்டது. தொடர்ந்து 2 ஆட்டங்களில் இம்மாதிரி நடைபெற்றதால் தான், அணியின் தலைவர் என்ற முறையில் கங்குலிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜாம்ஷெட்பூரில் நடைபெற்ற ஆட்டத்திலும் இந்திய அணி பந்துவீச அதிகநேரம் எடுத்துக்கொண்டது. இதையடுத்து கங்குலியின் ஊதியத்திலிருந்து 70 சதவீதத்தை அபராதமாகக் கட்டவேண்டும் என உத்தரவிடப்பட்டது. போட்டி நடுவர் கிரிஸ் பிரட்டிடம் கங்குலி தவறையும் ஒப்புக்கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கங்குலிக்கு விதிக்கப்பட்டுள்ள 6 ஆட்டங்கள் தடையை ஆட்சேபித்து மேன்முறையீடு செய்யப்போவதாக இந்தியக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

"சர்வதேசக் கிரிக்கெட் சபையிடமிருந்து அதிகாரபூர்வமான அறிக்கையைப் பெற்றதும் முறைப்படி நிச்சயம் முறையீடு செய்வோம். அதற்கு வழிமுறை உள்ளது" - என கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் ரன்பீர் சிங் மகேந்திரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 5 ஆவது மற்றும் 6 ஆவது ஆட்டங்களுக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் தமிழக வீரர் ஸ்ரீராம் சுழற்பந்துவீச்சாளர் கும்ளே ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். (க-3)




# மக்காயா நித்தினியின் நேர்த்தியான பந்து வீச்சு; தென்னாபிரிக்கா 8 விக்கெட்டுக்களால் வெற்றி

மக்காயா நித்தினியின் நேர்த்தியான பந்துவீச்சால் மேற்கிந்திய அணியுடனான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் 8 விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்கா அபார வெற்றியடைந்தது. எனவே, 4 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில்1-0 என்ற முன்னிலையை தென்னாபிரிக்கா பெற்றது.

5விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் செவ்வாய்க்கிழமை நடந்த இறுதி நாள் ஆட்டத்தில் தனது 2ஆவது இன்னிங்ஸைத் தொடர்ந்த மேற்கிந்திய அணி 194 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இறுதிநாள் ஆட்டத்தில் மேற்கிந்திய அணி 24 ஓட்டங்களுக்கு எஞ்சிய 5 விக்கெட்டுக்களையும் மிக விரைவாக இழந்தமை குறிப்பிடத்தக்கது. அணி சார்பாக ராம்நரேஷ் சர்வான் ஒருவரே நிலையாக ஆடி சதமடித்தார். இவர் கடைசிவரை ஆட்டமிழக்காமல் 107 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன்படி தென்னாபிரிக்க அணியைவிட 143 ஓட்டங்களால் மேற்கிந்திய அணி முன்னிலையில் இருந்தது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக மக்காயா நித்தினி இந்த இன்னிங்ஸிலும் துல்லியமாகப் பந்துவீசி 37 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். தவிர போஜே 2 விக்கெட்டுக்களையும் நெல் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

வெற்றி இலக்காக 144 ஓட்டங்களைப்பெற வேண்டும் என்ற நிலையில் 2 ஆவது இன்னிங்ஸில் பதிலளித்தாடிய தென்னாபிரிக்கா 2 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. இதன்படி இந்த ஆட்டத்தில் தென்னா


வெற்றிக்கு வழிசமைத்த நித்தினி

பிரிக்கா 8விக்கெட்டுக்களால் வெற்றியடைந்தது.

அந்த அணி சார்பாக வில்லியர்ஸ் 62 ஓட்டங்களையும் ஸ்மித் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பவல், கிங் ஆகியோர் தலா ஒருவிக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இரு இன்னிங்ஸிலும் நேர்த்தியாகப் பந்துவீசி 13 விக்கெட்டுக்களை வீழ்த்திய மக்காயா நித்தினி ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார். (க-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# பார்த்திப வருடத்தில் தமிழரின் பிரதிக்ஞை

எக்கணமும் தரியாது காலச்சக்கரம் உருண்டோடிக் கொண்டிருக்கிறது. கால தேவனின் இடையறா அசைவியக்கத்தில் பழையன கழிதலும், புதியன புகுதலும் உலக நியதி; தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம்; யதார்த்தம்.

அந்த வகையில், தாரண வருடம் வாடிவிழ, பார்த்திப வருடம் மொட்டவிழ்கின்றது.

பங்குனியாள் தன் பணிமுடித்து விடைபெற, சித்திரைப் பொன்னாளைச் சீர்கொண்டு அழைக்கும் காலமிது.

மழைக்காலமும் முன்பனி - பின்பனிக் காலமும் முடிந்து வசந்தருது பரிமளிக்கும் இளவேனில் வேளையில் சித்திரைப் பொன்னாளின் தலைவாசலில் பார்த்திப(ன்) பிறந்திருக்கிறான்.

இளவேனில் காலத்தில் இயற்கையே பூத்துக்குலுங்கி, மலர்களை வாரிச்சொரிந்து மணம்பரப்ப, தாவரவர்க்கங்கள் பச்சைப் புத்தாடை போர்த்துப் புதுத்தோற்றத்தோடு புத்தெழுச்சியும், புதுக்கோலமும் காட்டும் புத்தூக்கக் காலமன்றோ இது?

அந்தப் புத்தூக்கமும், புத்தெழுச்சியும் கொள்ளும் மன ஆர்வத்தில் நாம் இருக்கின்றோமா? புத்தாண்டு பிறந்த இந்த வேளையிலே நம்மை நாமே கேட்கவேண்டிய கேள்வி இதுதான்.

காலச்சக்கரத்தை அறுபது வருடங்கள் கொண்ட தொகுதியாகப் பிரித்தான் தமிழன். அதில் பத்தொன்பதாவது வருடமே இப்போது பிறந்துள்ள பார்த்திப ஆண்டாகும்.

ஒவ்வோர் ஆண்டையும் ஆறு ருதுக்களாகவும், இரண்டு அயனங்களாகவும் வகுத்தான் தமிழன்.

சூரியன் மேடராசியில் சஞ்சரிக்கும் போது சித்திரை பிறக்கின்றது. அத்துடன் இது உத்தராயணம், சூரியன் வடக்கே செல்லும் காலம்.

மற்றையது சூரியன் தெற்கே நகர்வது. இது தட்சராயணம் எனப்படுகின்றது. ஆண்டின் பிற்பகுதியில் வருவது.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த இந்துக்களின் - தமிழர்களின் - ஆகமங்களும் சோதிட நூல்களும் வானியலை இவ்வாறு கண்டறிந்து வகுத்திருப்பதை நவீன விஞ்ஞானம் மெச்சுகின்றது.

இந்தச்சித்திரையிலே தமிழரின் புதுவருடம் பிறக்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை இதுவே சிங்களவரின் - பௌத்தர்களின் - புதுவருடமும்கூட. அதனால், இலங்கைத் தீவின் தேசிய நிகழ்வாக தமிழ் - சிங்களப் புதுவருடம் அமைகின்றது.

இந்தத் தீவில் காலங்காலமாகத் தனித்துவமான பண்பாட்டுக் கோலங்களோடு, தனித்தனி இனத்துக்குரிய அடையாளங்களோடு தனித்தனித் தாயகங்கள் என்று குறிப்பிடக்கூடிய தொடர்ச்சியான பாரம்பரிய பிரதேசங்களோடு வாழும் இரு பூர்வீக இனங்களின் தேசியக் கொண்டாட்டங்கள் சங்கமிக்கும் நிகழ்வு இந்த வருடப் பிறப்புநாள்.

இரண்டு இனங்களுமே தமது பண்பாடுகளை - கலாசாரங்களை - கிராமியக் கலைகளை - வெளிப்படுத்தி நினைவுகூரும் வகையில் இந்தப் புதுவருடத்தைக் கொண்டாடி மகிழும்.

ஆனால் ஈழத்தமிழர்களைப் பொறுத்த வரை ஒரு குறை.

இந்தப் புதுவருடத்தை பௌத்த, சிங்களவர்கள் கொண்டாடும் அதே மனமகிழ்வோடு - நிறைவோடு - கொண்டாட முடியாத இனமாக நாம் இன்னும் இருக்கின்றோமே என்பதுதான் அந்த மனநெருடல்.

அந்நிய தேசத்தவரின் ஆக்கிரமிப்பினால் நாம் இழந்த சுயாதிபத்தியம் - இறைமை - தனியாட்சி - இன்று கைமாறிப் பேரினவாதத்திடம் அடிமைப்பட்டுக் கிடக்கின்றது. சுயகௌரவத்துடனும், சுயநிர்ணய உரிமையுடனும் வாழ வேண்டும் என்ற தமிழினத்தின் நியாயமான அபிலாஷை நிறைவேறாமலேயே பகற்கனவாய் இழுபடுகின்றது. உரிமைக்கான வேள்வியில் உயிர்களையும், உடல்களையும், உதிரத்தையும், உடைமைகளையும் ஆகுதியாகச் செலுத்திய தமிழினம். அதனால்பட்ட வேதனைகளிலிருந்து இன்னும் மீளவில்லை. போதாக்குறைக்கு ஆழிப்பெண்ணாள் தாரண வருடத்தில் தமிழர்தம் தொழில் வளம் கொழிக்கும் கரையோரப் பிரதேசத்தைப் பதம் பார்த்ததால் ஏற்பட்ட வடு நீங்காக் கொடுமையாக நெஞ்சை வாட்டுகின்றது.

இவற்றுக்கு மத்தியில் தான் புதுவருடப் பிறப்பை எதிர்கொள்கின்றான் தமிழன்.

தன் இனம் இழந்த மண்ணை - உரிமையை - ஆட்சி அதிகாரத்தை - இறைமையை - சுயாதிபத்தியத்தை - கௌரவத்துடன் கூடிய வாழ்வை - பெறுவதற்காகத் துடித்துக் கொண்டிருக்கும் தமிழினத்துக்கு இத்தகைய தேசிய நாள்கள் வெறும் கொண்டாட்டங்களுக்கு உரியவை மட்டும் அன்று. அதற்கு அப்பால் தமது இலக்குக்கான சரியான பயணத்தில் தேசியத்தை வலியுறுத்தி புத்துணர்ச்சி ஊட்டும் - புத்தெழுச்சி தரும் - புத்தூக்கம் ஏற்படுத்தும் - உத்வேக நாள்களாகவும் அவை அமைகின்றன.

தேசியத் திருநாளான புதுவருடம் தமிழ் தேசத்தின் திருநாளும் கூட என்பதை மனதில் நிறுத்தி, பிறக்கும் புத்தாண்டில் தமிழ்த்தேசத்தின் உறுதிக்காக உழைப்போம் எனப் பிரதிக்ஞை செய்வதே தமிழர் தம் புதுவருடக் கருத்தாக நிலைக்க வேண்டும். இன்று மனதில் இருத்தும் பிரதிக்ஞையை நடைமுறையாக்க உழைக்கவும் உளங்கொள்வோமாக.

# இந்திய உறவைச் சீரமைப்பதில் விடுதலைப் புலிகள் நாட்டம்

## புலனாய்வு இணையத்தளம் தகவல்

புதுடில்லி, ஏப்.14

இந்தியாவுடனான உறவைச் சீரமைப்பதில் புலிகள் நாட்டம் கொண்டுள்ளனர் என்று அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டுத் திரும்பிய இந்தியப் புலனாய்வு இணையத்தளம் ஒன்றில் செய்தி வெளியிட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் திகதியிடப்பட்ட பதிப்பில், வி.கே.சசிகுமார் என்ற செய்தியாளர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மூன்று வாரம் தங்கியிருந்து நான்கு பக்க கட்டுரை எழுதியுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சசிகுமாரின் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு-

புலிகள் ஏற்கனவே ஒரு தேசியத்தை அடைந்துவிட்டார்கள். ஆழிப்பேரலை அனர்த்தத்துக்குப் பிறகு புலிகளின் தேசத்தை சர்வதேச அரசுகளும் ஓரளவுக்கு அங்கீகரித்துவிட்டன.

புலிகளைச் சேர்க்காமல் நிவாரணப் பணி என்றால், காசு கொடுக்கமாட்டோம் என்று பல நாடுகள் அறிவித்துள்ளன. இது புலிகளுக்குப் புத்துணர்ச்சியைக் கொடுத்துள்ளது.

ஆழிப்பேரலை ஏற்பட்ட 20 நிமிடங்களுக்குள் ஈழப்பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிவாரண வேலைகளில் ஈடுபட்டது. இதிலிருந்து புலிகள் வெறும் பயங்கரவாத அமைப்பல்ல. மக்கள் நலனை முன்வைக்கும் முழுமையான அரசமைப்பு என்பது புலனாகிறது.

தமிழீழ நீதிமன்றம் 1993 ஆம் ஆண்டு புலிகளால் ஆரம்பிக்கப்பட்டது. அது இப்பொழுது முழுமையானதோர் அமைப்பாக விளங்குகிறது. முழுமையான உள்நாட்டுக் காவல்துறையும் புலிகளின் பகுதியில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகள் - இந்திய உறவு பற்றி அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விவரங்கள் வருமாறு:-

இந்திய அரசுத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்காக 2002 ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலக அதிகாரிகளில் ஒருவரான வண.கருணாரட்ணம் அடிகளார் புதுடில்லி சென்றிருந்தார். இந்திய-பாகிஸ்தான் உறவில் முறுகல் நிலை தீவிரமாக இருந்த காலம் அது. அதனால், திட்டமிட்டபடி சந்திப்புக் கைகூடவில்லை என்று விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியாவின் நலனுக்கு பங்கம் விளைவிக்கக் கூடிய எந்தக்காரியத்தையும் விடுதலைப் புலிகள் செய்யமாட்டார்கள். அதே போல், தமிழ் மக்களின் நலனுக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய எந்த வேலையையும் இந்தியா செய்யக்கூடாது என்று தமிழக கட்சிகளுக்கூடாக இந்திய அரசுடன் ஓர் உறுதிமொழி செய்து கொள்ளப்பட்டுள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# பருவம் தப்பிய மழையால் விவசாயிகளுக்குக் கவலை

வலி.தெற்கு, ஏப்.14

குடாநாட்டில் பருவம் தவறிப் பெய்துவரும் மழையால் புகையிலை மற்றும் கரட், லீக்ஸ் போன்ற மரக்கறிப் பயிர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். வலிகாமத்தில் உள்ள புன்னாலைக்கட்டுவன் பகுதியில் பயிரிடுவதற்குத் தயாராக இருந்த கரட், லீக்ஸ் போன்ற பயிர்கள் மழைகாரணமாக அழுகி முற்றாக அழிந்துள்ளன. குடாநாட்டில் ஏற்கனவே புகையிலைச் செய்கை பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

இணுவில், தாவடி, மருதனார்மடம், பருத்தித்துறை, வியாபாரிமூலை, நெல்லியடி மற்றும் சரவணை, நாரந்தனை, கரம்பொன் போன்ற பல இடங்களிலும் இம்முறை புகையிலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

புகையிலை அறுவடை செய்து அவற்றை காயவிடுவதற்கு வேண்டிய வெயில் இல்லாமையாலும் பதப்படுத்தப்பட்ட புகையிலைகள் மழையில் நனைவதாலும் பழுதடையும் நிலையில் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு, வலிகாமம் மேற்கு ஆகிய பகுதிகளில் இம்முறை மேற்கொள்ளப்பட்டுள்ள உழுந்து, பயறு, எள்ளு போன்ற சிறுதானிய பயிர்களுக்கு இம்மழை பெரிதும் உதவியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ஒ-152)

# வங்கிகளின் சுபநேர கருமங்கள்

புத்தாண்டு தின சுபநேரக்கொடுக்கல் வாங்கல்களுக்காக இலங்கை வங்கியின் சகல கிளைகளும் இன்று வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து முற்பகல் 11 மணி வரை செயற்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-202)

★ ★ ★

கொமர்ஷல் வங்கியின் சகல கிளைகளும் புத்தாண்டுதின கொடுக்கல் வாங்கல்களுக்காக நாளை காலை 7.30 மணிமுதல் திறந்திருக்கும். வாடிக்கையாளர்கள் தமது வங்கிக்கருமங்களை சுபநேரத்தில் ஆரம்பிக்கலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-204)

★ ★ ★

புத்தாண்டு தினத்தில் சுபநேரக் கொடுக்கல் வாங்கல்களை வாடிக்கையாளர்கள் மேற்கொள்வதற்காக மக்கள் வங்கியின் சகல கிளைகளும் இன்று காலை 7.30 மணி முதல் செயற்படவுள்ளன.

வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு

# தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு விரைவில்

## வணிகர் கழகம் துரித நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.14

யாழ். மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்று இருக்கும் இளைஞர், யுவதிகளுக்குத் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையை யாழ். வணிகர் கழகம் மேற்கொண்டுவருகிறது.

இத்தகவலை வணிகர் கழகத்தின் தலைவர் ஆர்.ஜெயராசா உதயனுக்குத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது

யாழ். மாவட்டத்தில் வேலை வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளுக்குத் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை வழங்குவதற்குக் கடந்த ஆண்டு வணிகர் கழகம் விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. இதன் பிரகாரம் ஆயிரத்து 719 விண்ணப்பங்கள் கிடைத்தன. அதில் அநேகமானவை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த இளைஞர், யுவதிகளின் விண்ணப்பங்கள் ஆகும். இவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பங்கள் தரம்பிரிக்கப்பட்டு பொருத்தமான நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 910 பேரின் விண்ணப்பங்கள் தரம் பிரிக்கப்பட்டு யாழ். மாவட்டத்திலுள்ள பிரபல தனியார் நிறுவனங்களிடம் வழங்கப்பட்டுள்ளன. எனவே, உரியவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு கல்வித்தகைமைக் கேற்ற வேலைகள் வழங்கப்படவுள்ளது என்றார். (ஒ-13)

# மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.14

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு சக்தி எவ்.எம் மற்றும் சக்தி ரி.வி நடத்தும் மாட்டுவண்டிச்சவாரி எதிர்வரும் 17ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு நீர்வேலி சவாரித்திடலில் நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் போட்டி தினத்தன்று போட்டி நடைபெறும் இடத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-202)

**நாளை**

*சித்திரை 02*
*வெள்ளிக்கிழமை*
*15.04.2005*
திதி : *ஷப்தமி முழுவதும்*
நட்சத்திரம் : *திருவாதிரை*
*முன்இரவு 07.06 வரை*
*சுபநேரம் : 06.04 - 07.34*
*ராகுகாலம் : [illegible]*
*[illegible]*

# அனைத்து தொண்டர் ஆசிரியரும் உள்ளீர்க்கப்படவேண்டும்

## தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

காரைதீவு, ஏப்.14

கஷ்டம் மற்றும் அதிகஷ்டப் பாடசாலைகள் என்று மட்டுப்படுத்தாமல் அனைத்துப் பாடசாலைகளிலும் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றியோரை நிரந்தரமாக உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல்லை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. அத்துடன், திருத்தப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை சுற்று நிருபத்தையும் வெளியிட வேண்டும் எனவும் அச்சங்கம் வலியுறுத்தியுள்ளது.

ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர்களை உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்க முன்வந்தமைக்கு அமைச்சுக்கு நன்றி கூறியுள்ள ஆசிரியர்சங்கம், கடமை நிறைவேற்று அதிபர்கள் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும் நிரந்தரமாக உள்ளீர்க்க துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் கோரியுள்ளது. (ஒ-84)

புத்தாண்டையொட்டி

# பயனுள்ள நல்ல புத்தகங்களை பிள்ளைகளுக்குப் பரிசளியுங்கள்

## பெற்றோர்களுக்கு அறிவுறுத்து

புத்தாண்டையொட்டி பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குக் கல்வியில் ஆர்வமூட்டும் புத்தகங்களை வாங்கிப் பரிசளிக்கும்படி கோரும் சுற்றுநிருபத்தை கல்வியமைச்சு பாடசாலைகளுக்கு அனுப்பிவைத்துள்ளது.

விடுமுறைக் காலத்தில் மாணவர்கள் இப்புத்தகங்களைப் படிப்பதுடன் இரண்டாம் தவணைத் தொடக்கத்தில் வகுப்பாசிரியரிடம் அப்புத்தகங்களை ஒப்படைக்கும்படி தபால் மூலம் பெற்றோர்களுக்கு அறிவுறுத்தும்படி பாடசாலை அதிபர்களுக்கு அந்தச் சுற்றுநிருபம் அறிவுறுத்துகின்றது.

பாடசாலை நூலகங்கள் போதிய நூல்கள் இன்றிக் காணப்படுகின்றன. இத்தகைய செயற்பாட்டின் மூலம் பாடசாலை நூலகங்கள் ஓரளவுக்கு ஏனும் பயனுடைய நூல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையில் இத்திட்டத்தைச் செயற்படுத்துவதாக அறியமுடிகின்றது. (ஒ-86)

**உதயவாக்கு**

நாம் எந்தச் செயல்களைச் செய்யலாம் என்று முடிவுசெய்வோம். நாம் செய்யும் செயல்கள் நம்மை இத்தகையவர் என்று முடிவுசெய்யும்.

- வெர்னீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.வணிகர் கழகத்தினர் மருந்துப்பொருள்கள் கையளிப்பு

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்களை யாழ்.வணிகர் கழகத்தினர் வழங்கியுள்ளனர்.

வணிகர் கழகத்தலைவர் ஆர்.ஜெயராசா தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் ஆஸ்பத்திரிப் பொறுப்பதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகனிடம் கையளித்தனர். 50 பிளாஸ்ரிக் பாய்கள், 50 படுக்கை விரிப்புகள், 150 இரத்தப் பரிசோதனைத் தகடுகள், பற்றரி ஆகியவற்றை வழங்கினர். (3-117)

## கேரதீவுக் கடலில் மீன்பிடிக்க அனுமதிக்குமாறு கோரி மகஜர்

தென்மராட்சி,ஏப்.14

அதிபாதுகாப்பு வலயத்தில் உள்ள கேரதீவுக் கடலில் 24 மணி நேரமும் மீன்பிடிக்கவும் -

தணங்கிளப்பு வீதியூடாகக் கேரதீவுக்குச் செல்லும் வீதியைத் திறந்து விடக் கோரியும் - ஜே/301, ஜே/302, ஜே/303 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர் சங்கத்தினர் நேற்றுமுன்தினம் பிரதேச செயலரிடம் மகஜர் கையளித்தனர்.

சுமார் ஐந்து வருடங்களுக்கு மேலாக அதி உயர் பாதுகாப்பு வலயமாக இப்பகுதி இருப்பதால் கேரதீவுக் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டபல தொழிலாளர்கள் தமது தொழில்களை இழந்துள்ளதாகவும் -

இக்கடலில் மீன்பிடிக்க அனுமதி பெறுத்தராவிடின் நிறுத்தப்பட்ட மீனவர் நிவாரண விநியோகத்தை மீண்டும் வழங்குமாறும் - மகஜரில் குறிப்பிட்டுள்ளனர். (3-117)

## மனையியல் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.14

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவு மாதர் அபிவிருத்தி நிலையத்தின் தையல், மனையியல் கண்காட்சி எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் கலந்து கொள்ளவுள்ளார். (3-7)

## மிதிவெடி அகற்றியவர் காயமடைந்தார்

யாழ்ப்பாணம்,ஏப்.14

மிதிவெடி அகற்றும் பணியாளர் ஒருவர் மிதிவெடி அகற்றிய சமயம் அது வெடித்ததில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை சிறுப்பிட்டிப் பகுதியிலுள்ள நிலப்பரப்பு ஒன்றில் மிதிவெடி அகற்றிக்கொண்டிருந்தபோது மிதிவெடி வெடித்ததாக கூறப்பட்டது.

இதன்போது 'ஹலோ ட்ரஸ்ட்' மிதிவெடி அகற்றும் நிறுவனத்தில் மிதிவெடி அகற்றும் பணியாளரான இ.ரவீந்திரன் (வயது-31) என்பவரே காயமடைந்தவராவார்.

முகத்திலும் உடம்புப் பகுதியிலும் பலத்த காயமடைந்த இவர், யாழ்.ஆஸ்பத்திரியின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (3-7)

## புலமைப் பரிசில் விடைகள் நாளை

கடந்த செவ்வாய்க்கிழமை வெளியான கல்விச்சுடரில் பிரசுரமான புலமைப்பரிசில் பரீட்சை வினாக்களின் விடைகள் நாளைய உதயனில் வெளியாகும்.


இனிய தமிழ் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஆங்கிலம் கற்க வேண்டுமா?

இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழி
E.L.I. யின் தபால் மூலம் பாடநெறிகள்

இலவச Dialog G.S.M. தொடர்பை வெல்லுங்கள்

* இலவச Dialog Gsm தொடர்பு
* தொலைபேசி பதிவை உள்ளடக்கிய கிடெக் ஒன்று
இலவச 30 day's Easy Way English புத்தகம்
என்பன அனைத்து மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 0777-220002, 802849



கலை வளம் பெருக பாராட்டி வாழ்த்துகின்றோம்

நகைச்சுவைக் கலைஞர்
திருவளர் அருளானந்தம் சந்திரகுமார்
(யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி நூலக உதவியாளரும் ஊழியர் சங்கத் தலைவரும்)



நாடக அரங்கில்
நகைச்சுவை வேடம்
கோயில் திருவிழாவில்
குதிரை ஆட்டம்
விளையாட்டு மைதானத்தில்
விநோத ஆடை ஆட்டம்


போன்ற கலை வடிவங்களில் மிகத் திறமை வாய்ந்த அரியாலையூர் அ.சந்திரகுமார் அவர்கள் ரசிகர்களால் போற்றப்பட்டு அவ்வூர் மக்களால் பாரம்பரியமாகக் கொண்டாடப்படும் சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாவில் இன்று 14.04.2005 தலைசிறந்த நகைச்சுவைக் கலைஞராகக் கௌரவிக்கப்படுகின்றார். அவரை நாமும் முழு மனநிறைவோடு அவரது கலைச்சேவை மேன்மேலும் சிறப்புற்று வளர வாழ்த்துகின்றோம்.

- அதிபர், உப அதிபர்,
பிராந்திய பிரதிப்பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர் சங்கம்,
தொழில்நுட்பக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

(44063) (39-14-15-45)



அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!



தேனீர்க்கடை உரிமையாளர்களே!
அரிசி ஆலை உரிமையாளர்களே!
முதலீட்டாளர்களே!
உங்களுக்கொரு நற்செய்தி!
+ அரிசி + மிளகாய் + கோப்பி + உழுந்து
மிருதுவாக அரைப்பதற்கு
இன்றே நாடுங்கள்! நம்பிக்கையான இடம்!!
உலகப்பிரசித்தி பெற்ற கெனடி, நவின், றெக்ஸ், அமுதா இலச்சினை (பிராண்ட்) 8HP, 25HP வரையான டீசல் என்ஜின்களும் உண்டு.
+ வசதி குறைந்த முதலீட்டாளர்களுக்கு 60% வரையான வங்கிக்கடன் அல்லது இலகு தவணை முறையில் செலுத்தக்கூடிய வசதி செய்து தரப்படும்.
+ இலங்கைக்கான இறக்குமதியாளர்களும் விநியோகத்தர்களும் நாங்களே!

ஆல் சிலோன் டிஸ்டிபியூட்டர்ஸ் இன்வெஸ்மன் லிமிட்டட்
இல.2, சென் லூசியா வீதி, கொழும்பு- 12
☎ 0112 434674

பெரிய இயந்திரம் ஒரு நாளுக்கு 20 தொன் நெல் குற்றக் கூடியது

சமுத்திரா றேட்ஸ் லிமிட்டட்
117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
021 222 2938

(C/41798) (56-34-18)





Sumeet மிக்ஷர் கிரைண்டர்

விற்பனையும் மறுசீரமைப்புச் சேவையும்
சுமீட் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற முகவர்
ஸ்ரீ துஷிகன் எலக்றிக்கல் சென்ரர்
385, K.K.S வீதி, யாழ்ப்பாணம். [சிவன்கோயில் அருகில்]
எந்த நிலையிலும் உள்ள எந்த ரகமான பழைய மிக்ஷியானாலும் எம்மிடம் தந்து சிறப்பு விலைக்கழிவுடன் புதிய சுமீட் பெற்றுக்கொள்ளலாம்.
மறுசீரமைப்புக்கு அசலான சுமீட் உதிரிப்பாகங்களை மட்டுமே உபயோகிக்கிறோம்.

விற்பனையாளர்:

தமிழ்ப்பூங்கா எலக்றிக்கல்,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

இராசம்ஸ்,
கண்டிவீதி, சாவகச்சேரி.

(44121) (39-14-15-45)



உ
ஆத்மஜோதி
ஆத்மீக சஞ்சிகை வெளியீட்டு விழா
இடம்: நல்லூர் நாவலர் மணிமண்டபம்
காலம்: 16.04.2005 சனிக்கிழமை மாலை 4.00 மணி

தலைவர்
சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்
(உதவிப் பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்)

வெளியீட்டுரை
திரு.கு.சரவணபவானந்தன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், தீவக வலயம்)

ஆசியுரை
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீன முதல்வர்)

வாழ்த்துரை
கவிமாமணி மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்
(ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி)

வரவேற்புரை
சிவநேயர் இ.தவகோபால் J.P.
(மில்க்வைற் அதிபர்)

நயப்புரை
சு.செல்லத்துரை (ஓய்வுபெற்ற அதிபர்)

நன்றியுரை
நா.முருகையா (நூல் பதிப்பாளர்)

(44083) (39-14-15-45)



யாழ்.அத்தியடிப் பிள்ளையார் ஆலய
மஹோற்சவ குருவின் ஆசிகள்



இன்று மலர்கின்ற புதிய சித்திரை வருடப் பிறப்பாகிய பார்த்திப வருஷ நன்னாளில் அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகப் பெருமான் மக்களின் இடர் களைந்து நல்வாழ்க்கைக்குத் தேவையென விளங்குகின்ற சந்தோஷத்தையும் நிம்மதியையும் சாந்தி , சமாதானத்தையும் அருளுகின்ற அற்புத வித்தக நாயகராகத் தனது அழகிய சித்திர ரதத்தில் எழுந்தருளியிருக்கின்றார். இந்த நர்த்தன விநாயகரின் இரதோற்சவத்தைக் கண்டு தரிசித்து அவரின் அருட்கடாட்சத்தைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ இந்த பார்த்திப வருஷம் அமைய வேண்டும் என எம்பெருமானை வணங்கி நல்லாசிகள் கூறி வாழ்த்துகின்றேன்.

அத்தியடி,
யாழ்ப்பாணம்.

'வேதாகமோத்தம ஆச்சார்ய சாரதா'
சிவாச்சாரியமணி சிவஸ்ரீ
நா.யோகீஸ்வரக் குருக்கள்

(44114) (39-14-15-45)



நீங்காத நினைவு
16 ஆம் ஆண்டு

S.T.சந்திரகுமார்
கிராமசேவையாளர்
(கரம்பொன்)
அழிப்பு: 1989.04.14



உமது நினைவாக
கண்ணீர் சிந்தும்

அம்மா: செ.பாக்கியம்,
அக்கா:
S.T.சகுந்தலாதேவி.

17/03, மருதடி லேன்,
யாழ்ப்பாணம்.

(43940) (39-14-15-45)



இப்பொழுது இலங்கையில்



சாரங்கள்
பெனியன்கள்
உள்ளாடைகள்
கைக்குட்டைகள்

Lungies (Sarongs)
Vests
Briefs
Kerchiefs

Direct
Importers
Wholesalers
& Retailers

SOLE DISTRIBUTORS
OCEANICK IMPEX
192, Main Street, Colombo-11.
Tel: 2336720, 2327168 Wholesale: 2384131
Fax: 2326961 E-mail: oceanick192@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்புமலர்



## இன்பம் பயக்கும் இனிய ஆண்டாகுக!

இன்று பார்த்திப ஆண்டு பிறந்திருக்கின்றது. இன்று பிறந்துள்ள புத்தாண்டானது ஈழம் வாழ் மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் அமைதியையும் சுபீட்சத்தையும்அள்ளித்தர வேண்டுமென எல்லாம்வல்ல நல்லைக்கந்தனின் பாதாரவிந்தங்களைப் பணிந்து அருளாசி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இத்தனை நாளும் பட்ட துன்பங்களும் துயரங்களும் நம்மை விட்டு விலகி பழையன கழிந்து எந்நாளும் இன்பமே பயக்கக்கூடிய இனிய நல்வாழ்வை எமக்கு இறைவன் அருளவேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

நாட்டில் மங்களகரமாக மக்கள் மனமகிழ்வுடன் வாழ்வதற்கு புத்துணர்ச்சியும் புத்துயிரும் ஊட்டும் வகையில் ஆதவன் தனது கிரணங்களைப் பரப்பிக்கொண்டு கிழக்குவானிலே உதயமாகிவிட்டான். இனியாவது நாங்கள் துன்பம் இல்லாத இன்பமான வாழ்வு வாழவேண்டுமென்ற ஓர் எதிர்பார்ப்பு எல்லோர் இதயங்களிலும் அடிநாதமாக ஒலிப்பது நமக்குக் கேட்கிறது.

அனைவரது முகங்களிலும் இனி நல்வாழ்வு வாழலாம் என்ற நம்பிக்கைக் கீற்றுப் படர்ந்து ஆதவனின் கதிரொளி பட்டு அது ஒளிவீசிப் பிரகாசிப்பது போல் நமக்குத் தெரிகிறது. உதயசூரியன் ஒளிக்கதிர்களை அள்ளித் தெறித்து வானில் உதயமாகி வரும்போது அது இன்னமும் மேலும் உறுதியாகின்றது.

ஆகவே, இன்றைய புத்தாண்டு மக்கள் வாழ்வில் மனமகிழ்ச்சியையும் மகோன்னதமான அமைதிநிறைந்த சமாதான நல்லுறவையும் நல்கவேண்டுமென உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு.*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.



## சாந்தி சமத்துவம் நிலைக்கட்டும்!

தாரண வருடம் முடிவடைந்து பார்த்திப வருடம் பிறக்கின்றது. தாரண என்பதன் பொருள் சுகதுக்கங்களைத் தாண்டி வைப்பது. அறுபது வருடங்களின் சுற்றில் சில வருடங்களுக்குப் பொருள் உண்டு. சில வருடங்களுக்கு பொருள் இல்லை. அந்த வகையில் தாரண வருடம் எந்த நூற்றாண்டிலும் சந்தித்திராத சுனாமி அலை நம் மக்களின் உயிர், உடைமைகளை எல்லாம் பறித்துவிட்டது. அத்துடன் நூறு கோடி மக்களின் ஆசீர்வதித்தற்குரியவரான பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் நித்திய அமைதி அடைந்தது எல்லாம் இந்த தாரண வருடத்தில் தான். எனவே சுகதுக்கங்களை தாண்டி வைப்பதில் பிந்தியதான துயரசம்பவங்களை தந்தது.

எனவே, இன்று பிறக்கும் புதிய பார்த்திப ஆண்டிலாவது சமாதானம், நீதி, சாந்தி, சுதந்திரம், சமத்துவம் யாவும் எம்மண்ணில் வாழும் மக்களுக்கும், சகல ஜீவராசிகளுக்கும்கிட்ட எல்லாம்வல்ல வல்வை நகரின் காவல் தெய்வமாக விளங்குகின்ற அந்த ஆதிபராசக்தியை வேண்டிப் பிரார்த்தித்து எனது சார்பிலும் எமது அகில உலக சைவக் குருமார் சம்மேளனம் சார்பிலும் உள்ளார்ந்த ஆசிகளைக் கூறி அமைகின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"
"சர்வே ஜனகா சுகினோ பவந்து"

**சிவாச்சாரிய பீடாதிபதி, அகில உலக சைவக் குருமார் சம்மேளனம், (வேதாரணிய குரு பரம்பரை சைவக்குமார் அர்ச்சகர்களின் நிறுவகம்),**
**பிரதமகுரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்,** (J.P).



## ஆர்த்திகள் நீங்கட்டும்!

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்பது திருமந்திரம். சச்சிதானந்த மயமாக விளங்கும் இறைவனைச் சைவம் சதாசிவனாகவும், வைஷ்ணவம் விஷ்ணுவாகவும், சாக்தம் சக்தியாகவும், காணாபத்தியம் கணபதியாகவும், கௌமாரம் முருகனாகவும், வேதாந்தம் பிரம்மமாகவும், இஸ்லாம் அல்லாவாகவும், கிறிஸ்தவம் பரமபிதாவாகவும், பௌத்தர்கள் புத்தராக வும் வழிபடுகின்றார்கள்.

பெயர்கள் வேறுபடினும் தெய்வம் ஒன்றே என்பதை மதங்கள் யாவும் ஒப்புக்கொள்கின்றன.

"யம் சைவா: ஸமுசதே சிவ இதிப் பிரஹ்மேதி வேதாந்திநோ
பௌத்தா புத்த இதிப் பிரம்மாண படல: கர்தேஹி நையாயிகா
அர்ஹன்னித்யத ஜைன சாஸன ரதாகர் மேதி மீமாஸ்கா
ஸோ அயம்வோ வித்தானு வாஞ்சித பலம் திரைலோக்ய நாதோஹரி"

சமயங்கள் மக்களை ஒருநிலைப்படுத்தி மனிதநேயத்துடன் வாழ வழி வகுப்பனவாகும். பிறந்திருக்கும் புத்தாண்டு தமிழ் - சிங்களப் புத்தாண்டாகும். பஞ்சசீலக் கொள்கை பௌத்தமதமும், இந்துதர்மங்களை வாழ்க்கைநெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளை இந்து மதமும் வலியுறுத்துகின்றன. இருவேறுபட்ட மக்களை சமய இலட்சியங்கள் மூலம் ஒருமைப்படுத்தும் புத்தாண்டுப் பண்டிகை எதிர்காலத்தில் மக்களை எதிர்கொள்ளும் சமூக சமய அரசியல் பிரச்சினைகளை சுமுகநிலையில் தீர்ந்து மக்கள் யாவரும் 'பார்த்திப' ஆண்டில் ஆர்த்திகள் அகன்று கலை, கலாசாரம், சுதந்திரத்துடன் நல்வாழ்வு வாழப் பார்வதி பரமேஸ்வரனைப் பிரார்த்தித்து ஆசிகூறி அமைகின்றேன்.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

வேதாகம கிரியா பானு
சிவஸ்ரீ **சோ.இ.பிரணதார்த்திஹரக்குருக்கள்**
பார்வதி பரமேஸ்வரன் கோயில்
பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

# புதுமை, உற்சாகம், ஒற்றுமை- இவற்றைப் பிரதிபலித்து புதிய அனுபவங்களைச் சேர்க்கும் புத்தாண்டு நிகழ்வுகள்



உலகில் தமிழர் மரபு தொன்மையானதும், அறாத் தொடர்புடன் பேணப்பட்டு வருவதுமாகும். அத்தகைய மரபுக் கூற்றுகளுள் பண்பாடு தழுவியவை ஏராளம். தமிழர்களின் பண்பாட்டு அடித்தளமானது பலம் மிக்கது. அதனாற்றான் எத்தனையோ இடர்கள் ஏற்பட்ட போதெல்லாம் அவற்றுள் வெந்தும் சாம்பராகாது, 'பீனிக்ஸ்' பறவை போன்று மீண்டும் மிடுக்குடன் வளரும் தன்மையுடன் தமிழ்ப்பண்பாடு விளங்குகிறது. நிலைத்து நிற்கின்ற தமிழர் பண்பாட்டு அம்சங்களில் ஒன்றாகச் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம் காணப்படுகின்றது. பேரளவில் இது இந்துத் தமிழர்களின் பண்டிகையானாலும், ஈழத்தில் சிங்கள – பௌத்தர்களினதும் சைவத்தமிழர்களினதும் ஒருமித்த தேசியத் திருநாளாகப் போற்றப்படுகிறது.

கிறிஸ்தவப் புத்தாண்டைச் சனவரி மாதம் முதற் தேதியில் பிறப்பதாகக் கருதுவதைப் போன்று, தெலுங்குப் புத்தாண்டு, மலையாளப் புத்தாண்டு, குஜராத்திப் புத்தாண்டு என்றவாறு ஒவ்வொரு மொழிபேசுவோருக்கும் புத்தாண்டு அல்லது புதுவருடம் பிறக்கின்ற நாள் பற்றிய வேறுபாடுகள் உள. அவரவர் தங்கள் பண்பாட்டு மரபில் புத்தாண்டைக் கொண்டாடுவர்.

இந்தியாவில் தமிழர்கள் மத்தியிலும், இலங்கையில் சிங்களவர், தமிழர் ஆகியோரிடையேயும் சித்திரைப் புத்தாண்டு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அதனுடன் உலகெங்கிலும் வாழும் இந்துத் தமிழர்களும் இதைக் கொண்டாடத் தவறுவதில்லை. உலகத் தமிழர்களிடையே தீபாவளி, தைப்பொங்கல், சித்திரைப் புதுவருடப்பிறப்பு ஆகிய மூன்றுமே மிகவும் ஆகர்சிப்பு வாய்ந்த பண்டிகைகளாகும்.

தமிழ் வருடங்களின் மரபானது, 'பிரபவ' வருடத்தில் தொடங்கி 'அசஷய' வருடம் ஈறாக அறுபது வருடங்கள் கொண்ட சுற்றுவட்டத்தையுடையதாகவும் இவை தொடர்ச்சியாக நிகழ்பவையாகவும் கருதப்படுகிறது. தற்போது நாம் கூறுகின்ற இந்த அறுபது வருடப் பெயர்களும் வடமொழி சார்ந்தவையாகவே விளங்குகின்றன. இவற்றுக்கான தமிழ்ப்பெயர்கள் ஒரு காலத்தில் இருந்திருக்க வேண்டும். வடமொழியின் அதிகரித்த செல்வாக்கினால் தமிழ்ப்பெயர்கள் மறைந்து, வடமொழி வருடப்பெயர்கள் நிலை கொண்டுவிட்டன.

தமிழர்களைப் பொறுத்தவரையில் பன்னிரு இராசிகளுள் முதலாவதான மேட இராசியில் சூரியன் பிரவேசிக்கும் நாளே புதுவருடப்பிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சூரியனைப் பூமி உட்பட ஏனைய கோள்கள் சுற்றுவதைப் போலவே, சூரியனும் சுழல்கின்றமையை விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும், சோதிடமும் ஏற்றுக் கொள்கின்றன. அந்த நிலையில் நாள், வாரம், மாதம், வருடம், நட்சத்திரம், இராசி, திதி, கிரகங்கள் போன்றன இந்து மரபுக்குரியவையாகவும், பெரும்பாலான தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவையாகவும் கருதமுடிகிறது.

## வளரும் தமிழும் வாழும் தமிழர்களும் தலைநிமிர பார்த்திப ஆண்டே வழிசெய்!

உலகமாந்தரிடையே சமய வழிபாட்டு மரபானது இயற்கை வழிபாட்டின் ஆரம்பத்துடனேயே நெறிப்பட்டு வளர்ந்தது. அவற்றுள்ளும் சூரிய வழிபாடு முதன்மை பெற்றதாகும். தமிழரிடையேயும் சூரியவழிபாடு வலுவானது. தைப்பொங்கல் மாத்திரமன்றி சித்திரைப் புத்தாண்டு சூரிய வழிபாட்டுக்கு முதன்மை தருவதாகும். இந்து மதப் பிரிவுகள் ஆறினுள் சூரியனை முதன்மைப் படுத்தும் வழிபாட்டுமுறையாகச் "சௌரம்" அமைந்துள்ளது. சிவபெருமானின் அட்டமூர்த்தங்களுள் ஒன்றாகச் சூரியன் இருப்பதால் சைவமும் அதனுடன் நெருங்கிய சமயமாகும். அறுவகைச் சமயங்களையும் இணைக்கின்ற நாணாகச் சூரியவணக்கம் திகழ்கிறது எனலாம். "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் காவிரிநாடன் திகிரிபோல் பொன்கோட்டுமேரு வலந் திரிதலான்" எனச் சிலப்பதிகாரக் காப்பியம் ஞாயிறைப் போற்றுகிறது.

### வசந்த காலத்துக்கு வரவுகூறும்

தமிழர்கள் ஒருவருட காலத்தினைப் பருவ மாறுதல்களுக்கேற்ப இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி எனச் சித்திரையில் தொடங்கி பங்குனி வரையில் தலா இரண்டுமாதங்களாகப் பகுத்துவைத்தனர். சங்க இலக்கியங்கள் முதற்கொண்டு தமிழிலக்கியங்கள் இவற்றைக் கூறுவனவாகும். இவற்றுள் இளவேனிற் காலமே வசந்தகாலமாகும். இலைகள் உதிர்ந்தபின் தளிர்கள் தோன்றிச் செழித்துத் தாவரங்கள் பூத்துக் குலுங்கும் மன்மதனுக்குரிய மகிழ்ச்சியான காலமாகும். தமிழ்ப் புத்தாண்டு பிறப்பதும் இக்காலத்திலேயேயாகும்.!

60 வருடச் சுற்றோட்டத்தில் பத்தொன்பதாவது வருடமாகிய "பார்த்திப" வருடமானது, ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி இரவு பிறக்கிறது. புதுவருடத்தை முன்னிட்ட விஷீபுண்ணிய காலத்தில் (அதாவது புதுவருடப்பிறப்பன்று) தலையில் கடப்பமிலையும் காலில் வேப்பிலையும் வைத்து மருத்துநீர் தேய்த்து ஒவ்வொருவரும் முழுகுதல் வேண்டும். வெள்ளை, சிவப்பு நிறப்பட்டாடை அல்லது அதே நிறக்கரையுடைய புத்தாடை அணிதல் நல்லதாகும்.

தாழம்பூ, மாதுளம்பூ, தாமரைப்பூ, துளசி, வில்வம், அறுகு, பால், கோமயம், கோசலம், கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், மஞ்சள், சுக்கு, திற்பலி ஆகியவற்றைச் சுத்தமான நீரில் இட்டுக் காய்ச்சிய கஷாயமே மருத்துநீராகும். ஆலயங்களிலேயே மருத்துநீர் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுவது வழமை.

இப்புண்ணிய புதுவருடத்தில், இல்ல வழிபாடு, இறை வழிபாடு, இதயவழிபாடு ஆகிய மூன்றும் பெருமைபெறும். வீடுகள் சுத்தஞ் செய்யப்பட்டு பழையவற்றை நீக்கிப் புதியனவற்றால் அணிசெய்யப்படும். புதுவருடத்தன்று காலையில் சூரியனுக்குப் பொங்கலிடுவதும் தமிழர் பண்பாடாகும். புத்தாடை அணிதல், ஆலய வழிபாடு, உறவினருடன் விருந்துபசாரம், பெரியோரிடம் ஆசிபெறல், பிதிர்களுக்குப் படையல், ஆலய விழாக்கள் எனப் பல்வேறு நடவடிக்கைகள், புதுவருடத்தன்று மேற்கொள்வதைக் காணலாம்.

புதுமை, உற்சாகம், ஒற்றுமை என்ற தத்துவங்கள் இக்கொண்டாட்டத்தினூடு பொருள் நிறைந்தவையாக விளங்குகின்றன.

இலங்கையில் இனங்களுக்கிடையே சமாதானத்தை மேம்படுத்த சிங்கள – தமிழ் இனத்தவர் இணைந்து கொண்டாடும் சித்திரைப் புதுவருடப்பிறப்பினைப் பயன்படுத்திக்கொள்ளமுடியும்.

புதுவருடம் பிறந்த பின்னர் பெரியவர்களிடம் "கைவிசேஷம்" பெற்றுக்கொள்வதும் புத்தாண்டுடன் இணைந்ததொரு சடங்காகும். நல்லவர் கையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் அல்லது பொருள் அவ்வருடம் முழுவதிலும் தமது வாழ்வை வளப்படுத்தும் என்பது இதன் நம்பிக்கைப் பொருளாகும். எனவே, ஆண்டுதோறும் வருகின்ற சித்திரைப் புத்தாண்டு தானென்றாலும் ஒவ்வோராண்டும் புதிய நல்ல அனுபவங் களை எமக்குச் சேர்ப்பதுடன் பழைய துயர அனுபவங்களைக் களையவும் நாம் இறைவனை வேண்டுகின் றோம்.

வளரும் தமிழும், வாழும் தமிழரும் உலகில் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழுவதற்கு மலருகின்ற பார்த்திப வருடம் வகைசெய்ய வேண்டும். உலக மாந்தரனைவரும் உய்வுபெற உதவவேண்டும். இயற்கையை மிஞ்சிய இறைசக்தி அதற்குத் துணைசெய்யுமென நம்பிக்கை கொள்வோமாக.

**கலாநிதி செ.திருநாவுக்கரசு**
அதிதி எழுத்தாளர்





**எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்களது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!**

**இசைநாத வெள்ளத்தில் மூழ்கித் திளைக்க அன்புடன் அழைக்கின்றோம்.**

புதுவருடத்தை முன்னிட்டு புத்தம் புதிய வெளியீடுகள்

- ★ **சமஸ்கிருதம்** 1.ஆசீர்வாதம் 2. வேதபாராயணம் 3.ஸ்தோஸ்திரம் 4.சந்தியாவந்தனம் 5.சமஸ்கிருத படிப்பிற்கான CDகள்
- ★ **தேவாரங்கள்** புராணங்கள், திருப்புகழ், திருவாசகங்கள், புதிய பக்திப் பாடல்கள்
- ★ சிறுவர்களுக்கான புதிய தமிழ் நீதிக் கதைகள்
- ★ குழந்தைகளுக்கான தமிழ், ஆங்கில வழிகாட்டி
- ★ கர்நாடக சங்கீதம் ஆரம்பத்தில் இருந்து கற்பதற்கான CDகள்
- ★ பரத நாட்டியம் கற்பதற்கான வீடியோ CDகள்
- ★ தமிழ்த் திரைப்பட கதை வசனங்கள் ஓடியோ CDயில்
- ★ புதிய கர்நாடக CDக்கள்

**உங்களது இசை ஆவல்களைப் பூர்த்தி செய்வதற்கு வாருங்கள் இசை உலகுக்கு!**

**பலாலி வீதி தபாற்பெட்டிச்சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**
**T.P:021 222 6554**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்புமலர்

**பார்த்திப வருடப் பாவாய்**
**பார்சிறக்கவும் வளம் பெருகவும்**
**தமிழர் எம் உரிமை கைவரவும்**
**வழிசெய மனங்கொண்டு உழைத்திடு!**

அன்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எம்மினிய புதுவருட
நல்வாழ்த்துக்கள்
**Prop.: S.Siva**
New Ragams Padducholai
Specialist in
Salvar, Saree, Shirting & Suiting.
நியூ
**ராகம்ஸ்** பட்டுச்சோலை
No.24, 7,8, Modern Market
inside, Jaffna. T.P. 222 7179
(C/41767)

---

இன்றைய புதுவருட
நன்னாளில் அனைவருக்கும்
எமது நல்வாழ்த்துக்கள்!

நவீன டிசைன்களிலான
எழில் மிகு ஆடைகளை
எண்ணம் போல்
தெரிவு செய்திட இன்றே
நாடுங்கள்:-

## லைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரிவீதி,(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம். ☎ 2381
(C/41995)

---

இன்று மலர்ந்துள்ள இனிய புத்தாண்டில்
எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும்
சீரோடுஞ் சிறப்போடும் நன்றே வாழ எங்கள் நல்வாழ்த்துக்கள்!

கடும் வெயிலில் நடந்து களைத்துவிட்டீர்களா!
உங்கள் களைப்பைப் போக்கி புத்துணர்ச்சி அளிக்க
காத்திருக்கின்றார்கள்.

இன்றே விஜயஞ்செய்து பாருங்கள்!
## கல்யாணி கிறீம் ஹவுஸ்
ஸ்தாபனத்தார்
73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(C/41794)

---

ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
அன்பு கலந்த புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்!

அழகிய நவீன
டிசைன்களிலான
தங்கநகைகள் தரமாகச்
செய்து பெற்றுக்கொள்ள
சிறந்த இடம்:

## ஸ்ரீமாரி நகைமாடம்
49(187), கே.கே. எஸ் வீதி, (சத்திரத்துச்
சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம்.
(C/41773)

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது சித்திரைப் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்!

சுபமுகூர்த்தப்
பட்டுப்புடைவைகளுக்கு
முதல்தரப் புடைவை
ஸ்தாபனங்கள்

## ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை
(உட்புறம்), யாழ்ப்பாணம்.
T.P.: 5571

## நல்லி சில்க்ஸ்
121/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 5573

எமது இரு ஸ்தாபனங்களுக்கும் யாழ்.நகரில் வேறு எந்தவொரு
கிளையும் இல்லை என்பதை அறியத் தருகின்றோம்.

---

**Perfect Reception Quality**
From
**Space Link** TM

## High Gain C-Band & Ku-Band Dish antennas

Serving thousands of satisfied Customers all over the country with world class Dish Antennas

Space Link high gain Dish Antennas are :
- Digitally friendly as they eliminate picture freezing problem.
- Accurately Designed resulting in high efficiency and extra Gain.
- Extra Strong to deliver crystal clear picture even in adverse weather condition.
- Easy to assemble.
- Best Value for money.
- Readily available through nation-wide Dealer Network.

Improve C/N Ratio of the System

செய்மதி தொலைக் காட்சித்துறையில் இலங்கையில் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களை வென்றெடுத்துள்ள Sats - Tech நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் செய்மதித் தொலைக்காட்சி உபகரணங்களை வழங்கி வருகின்றது.

'Ku' band DISH சிஸ்டம் Rs. 12.500/= மட்டுமே
8'C' band DISH சிஸ்டம் Rs. 19.999/= மட்டுமே
8'C' band & Ku band சிஸ்டம் Rs. 22,000/= மட்டுமே

மற்றும் அனைத்துக் கேபிள் TV இதற்குரிய உபகரணங்களும் மிகக் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

- ஒரு வருட உத்தரவாதம்
- விற்பனைக்குப் பிந்திய சேவை
- Free Channel up dating
- **Free Software up dating**
- இலவசத் தொழில்நுட்ப ஆலோசனைகள்
- தெளிவான காட்சி
- துள்ளியமான ஒலி

PLEASE CONTACT US FOR YOUR ENQUIRIES

## SATS- TECH ENGINEER's
(National Video Center)
182, K.K.S. Road, Kokuvil (Near Kulapitty Church)
Jaffna.
Tel.:- (021) 222 5908, 0777 71 0785
(C/41741)

---

நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது
புதுவருட நல்வாழ்த்துக்கள்
உரித்தாகுக!

அசல் 22 கரட் தங்கநகைகளை
ஒழுங்கு, உத்தரவாதத்துடன்
நவீன அழகிய டிசைன்களில்
பெற்றுக்கொள்ள

## அகிலன் நகைமாடம்
240. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
(C/41774)

---

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எம்
இதயங்கனிந்த புதுவருட நல்வாழ்த்துக்கள்!

சுபமுகூர்த்தப்
பட்டுப்புடைவைகள்
★ பட்டுச்சாறி வகைகள்
★ பட்டு வேட்டிகள்
★ பட்டுச் சால்வைகள்

அழகுக்கு அழகூட்டும்
ஆடைவகைகள்
★ பஞ்சாபி ★ சோளிகிற்
★ ஸ்கேட் ★ பிளவ்ஸ்
★ சேட்டிங் ★ சூட்டிங்
அனைத்து வகையான
ஆடைகளின் மகத்தான
தெரிவுகளுக்கு

## மகா சில்க்ஸ்
32, 40A, நவீன சந்தை
(உட்புறம்), யாழ்ப்பாணம்

## பியூட்டி சில்க்ஸ்
60, நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்
(C/41793)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்புமலர்



## புதுவருடப் பிறப்புக் கணிப்பில் தமிழர்களின் விஞ்ஞான அறிவு

உலகெங்கும் உள்ள மக்கள் - இனக் குழுக்கள் ஒவ்வோர் நாளை தங்கள் ஆண்டின் முதனாளாக, வருடப்பிறப்பாக கொண்டாடு கின்றனர். அந்தவகையில், கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த பழங்குடியினரான தமிழர்களும், அவர்களில் ஒரு பகுதியினரான இயக்கர்களில் ஆரியமொழி கலாசார கலப்பால் சிங்களவராக மாறிய மக்கள் கூட்டத்தினரும் சித்திரை முதல் நாளை புத்தாண்டுப் பிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

தமிழ்ப் பஞ்சாங்க கணிப்புக்களின் படி இந்த பார்த்திப வருடப்பிறப்பு அன்று கலியுகம் வருடம் ஐயாயிரத்து நூற்றேழு பிறக்கின்றது. யுகங்கள் நான்காக வகுக்கப்பட்டுள்ளன. அவையாவன, கிரேதயுகம், திரேதயுகம், துவாரக யுகம், கலியுகம் ஆகும். நான்காவது யுகமான கலியுகத்திலேயே நாம் வாழ்கின்றோம். பூமி சுழல காலச்சுழற்சி ஏற்படுகின்றது என்பதையும், அது உருண்டையானது அந்தரத்தில் உள்ளது என்பதையும் 8 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஆய்ந்தறிந்த விஞ்ஞானிகளாகத் தமிழர் விளங்கினர். இதனை தலைச்சங்கத்தின் கடைக்காலத்தில் நிலந்தரு திருவிற்புரவிற் பாண்டியனாகிய மனுவின் அவைக்கழகத்தே நாகவரனும் (சேரனும்) மாபெரும் சிற்பியுமான மயனால் இயற்றப்பட்ட தொல் தமிழிலக்கணமான ஐந்திறத்தில்(ஐந்திரம்)-

"எட்டெட் டியலால் இலங்கி மையம்
திட்பமெட் டெட்டுமாய் நுட்ப மெட்டெட்டுமாய்
காலம் விளக்கும் கணக்கியல் நுண்மை
சீலம் ஐந் தைந்தும் தெளிந்துணர் நெறியின்
ஞாலம் சுழலும் காலமறிந்து
கால நுட்பம் கணித்தறி மக்கள்
கால முணர்மதி நுண்ணியராவரே''

(ஐந்திரம் 131 )

எனக் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான கலை நுட்பம் வாய்ந்த தமிழ் மக்கள் 60 தற்பரை= 1 விநாடி, 60 விநாடி=1 நாளிகை, 60 நாளிகை= 1நாள் எனக் கணித்ததுடன் 60 வருடச்சுற்றையும் அமைத்தனர். அவ் 60 வருடச்சுற்றில் ஒரு வருடமே பார்த்திப வருடமாகும்.

இச்சித்திரை வருடம் இராசிச்சக்கரத்தில் முதல் இராசியாக விளங்கும் மேட ராசியில் சூரியன் பிரவேசிக்கும் வேளையிலே அமைகின்றது.

**இ. அச்சுதபாகன்**

அன்றைய தினம் மதுரை மீது சூரியன் உச்சங்கொடுக்கும் தினமுமாகும்.

சமூக வாழ்வு மேம்பட ஒற்றுமையும், இறைசிந்தையும் அவசியமாகும். புதுவருடப் பிறப்பின்போது மருத்து நீர் தேய்த்து நீராடி புத்தாடை புனைந்து மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றாலும் சுத்தமுடையோராய் ஆலயங் களுக்குச் சென்று இறைவழிபாட்டை தமிழர் மேற்கொள்வர். எச்செயலையும் இறையின் ஆசியுடனேயே மேற்கொள்ளும் அவர்கள், நல்லநேரம் பார்த்து நாள்வேலை, புதுக் கணக்குப் பதிதல், வித்தைகளை கற்க தொடங்கல், ஏர்மங்கலம் போன்ற நிகழ்வுகளைச் செய்வர். ஒற்றுமையும் பாசப்பிணைப்பையும் வலிதாக்க நல்ல நேரங் களில் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று விருந்தும் வழமை கைவிசேடம் என்று பணம் பொருள் என்பவற்றை தெட்சணையாக - கையுறையாக வழங்குவதும் புதுவருடப் பிறப்பன்று நிகழும்.

தமிழர்கள் எழுச்சி உணர்ச்சி பெருகவும் உடல் ஆரோக்கியம் மேம்படவும், தாச்சி, கபடி, போர்த்தேங்காய் அடித்தல், மாட்டு வண்டிச் சவாரி, காளையேற்றம் போன்ற விளையாட்டுக் களையும் விளையாடி மகிழ்வர். சிவபெருமானின் மூத்தகுமாரனும் முதல் வணக்கம் ஏற்பவரும் இறைவனுமான விநாயகர் ஆலயங்கள் பல வற்றில் முதல் மாதமான இச்சித்திரை முதல் நாளில்தேரோட்டம் நடைபெறுவதும் வழக்க மாகும். எனவே, இச்சித்திரை பிறப்பில் இத் தரையில் தமிழர் வாழ்வு சிறக்கவேண்டி விநாயகனை வழுந்தி அமைவோமாக. "குண்டலினி சக்தியினை நின் அருளால் கொண்டெழுப்பி சிரசு எனும்முண்டகத்தே ஆழப்பதித்து அரன் கழலை காணவருள் கணநாதாமூலக்கனலின் முதல்வா முதல் வணக்கம் ஏற்றருளும் இறைவாநின் காயா மலர்ப்பதமே எமக்கு காப்பு"





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்புமலர்

## மனிதமுய்ய மலரும் புத்தாண்டே யருள்வாய்

உண்டுறங்கிய மனையிழந்து
உறவிழந்து ஊரிழந்து
எண்ணரிய இடர் தாங்கி
ஏதிலியாய் நாளுமேங்கி
கண்ணீர் சிந்தி காலத்தை நொந்து
வாழ்வார் மிடி தீரப் புலரும்
பண்புடை பார்த்திப நல்லாண்டே
நாடும் சமாதானத்தைச் சுமந்து வா!

சிற்றறிவு சிறிது மில்லா
சிறப்புறு மாந்தர் தோன்ற
நற்குடியிற் பிறந்து நல்லோராய்
நன்னெறிசெல்லயீங்கு
கற்றுணர்ந்து காலத்தோ டொழுகும்
கண்ணியம் மிக்க குலம் வாழ
மாற்ற மொன்றாய் 'மனித' முய்ய
மலரும் புத்தாண்டே யருள்வாய்

************ - கந்த தியாகராசா



இனிய புத்தாண்டு நன்னாளில் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள்!
ஓடர் நகைகள் அசல் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்துகொடுப்பவர்கள்
நியு, விதுஷன் நகைமாடம்
இல.6, கஸ்தூரியார் வீதி, (C/41770)
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2903


அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்!
பார்வையில் பழுதுண்டா?
பயம் எதற்கு? நீங்கள் பொங்கிடும்
பார்வையைப் பெற்றிட---
பற்களில் பழுதுண்டா? விழுந்து விட்டனவா? முன்பைவிட உறுதியான அழகான வெண்சங்குப் பற்களைக் கட்டிட இளைய தலைமுறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திட
எரிக்கணேஷ்
கட்டுப்பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு.
யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்
மூக்குக் கண்ணாடி அகமும், பல்கட்டுமிடமும்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 2486
கிளைகள்
பழைய பொலீஸ் நிலையம் முன்பாக இல.80, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்
இன்றைய நவநாகரிக நாரீமணிகள் விரும்பும் நவீன மோஸ்தர்களிலான புடைவைத்துனுசுகள் சேட், றெடிமேட் ஆடை அனைத்துக்கும்
ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
கிளை: "யோகாஸ்"
இல.18A, மின்சார நிலையவீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
021-222 5679, 021-222 3918
யாழ் கொழும்பு
சுகமான பயணத்திற்கு
யோகாஸ் ரவல்ஸ்
Booking: T.P.House 060 221 3454
T.P.: 0777-273799, 0777-252166
0777-222 476


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம்மினிய புதுவருட நல்வாழ்த்துக்கள்!
❖ திருமணப் பட்டுப் புடைவைகள்
❖ சேட்டிங், சூட்டிங்
❖ சிறுவர்களுக்கான றெடிமேட் ஆடைகள் அனைத்திற்கும்
KS கைராசி சில்க்ஸ்
63, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 4590678
(C/42135)

செந்தா சூ பலஸ்
இல.54- நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 077- 6136075
அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
Bata
Imported Items
DSI
(C/41759)
செந்தா சூ பலஸ் & பான்சி ஹவுஸ்
பஸ் நிலையம், பருத்தித்துறை. தொ.பே: 077- 6136075.


உ
விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ! நமசிவாய
நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
மண்ணில் என்றும் மங்காத புகழ், நுண்வினைத்திறன் மிக்க எங்கள் நகைகள்.
சிறி நகையகம்
(C/41771)
392, கண்டி வீதி, மாம்பழம் சந்தி, யாழ்ப்பாணம்.
போன்: 077 6701343


அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்!
அனைத்து வகை சைவ, அசைவ உணவுகளுக்கு
மூன்று நட்சத்திர உணவகம்
Three Star Hotel
சுவையின் சங்கமம்
வீட்டுச்சாப்பாடு...
ஹோட்டலில்
(C\41747)
இல.162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 7125
யாழ்.போன்சொப்
10, நவீன சந்தை (மேல் மாடி), யாழ்ப்பாணம். தொ.பே. 0777 111460


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்புமலர்

## நிரந்தர சமாதானமே புதுவருட வேண்டுதல்

'அரிது அரிது மானிடர்ாதல் அரிது' என்று ஔவையாரால் போற்றி ஏற்றப்பட்ட இந்த கிடைத்தற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற நாம், வையத்தில் வாழ்வாங்கு வாழத் தலைப்படாமல் அவமே காலத்தைப் போக்குகின்ற ஒரு மானிட சமூகமாக தற்போது மாறி வருகின்றோம்.

'தமிழர்கள்' என்ற இறுமாப்போடு மிகவும் பண்புள்ள ஒரு சமூகக் கட்டமைப்பாகத் திகழ்ந்த நமது ஈழத்துத் தமிழ்ச் சமூகம், தற்போது சமுதாயத்தினால் ஏற்றுக் கொள்ள முடியாதது எனப் புறந்தள்ளிய கொலை, களவு, பாலியல் வல்லுறவு போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவது கவலைக் குரியது. குறிப்பாக, இளைஞர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபடுவது வேதனைக் குரிய செய்தியாகும் .

கடந்த பல வருடங்களாக நமது நாட்டில் 'போர்' என்ற பெயரில் ஒரு கொடிய அரக்கன் கோரத் தாண்டவமாடியதால், நமது மக்கள் தமது வீடுகளை, விளை நிலங்களை மற்றும் கல்விகற்ற பாடசாலைகள் அனைத்தையும் இழந்தநிலையில் ஏதிலி களாகப் பிறர் மனைகளிலும், அகதி முகாம்களிலும் தஞ்சம் புகுந்து மிகவும் சிக்கல் நிறைந்த வாழ்வை எதிர்கொண்டனர். அத்துடன், எத்தனையோ பேர் தமது பிள்ளைகளை, சகோதரர்கள் மற்றும் உற்றார், உறவினர்களை இழந்து மிகுந்த துன்பத்தில் மூழ்கியுள்ளனர். எமது வணக்கத்துக்குரிய பிரசித்தி பெற்ற எத்தனையோ ஆலயங்கள் போரினால் பெரிதும் அழிவுகளைச் சந்தித்தமையும் பின்னர் அவை புனர்நிர் மாணத்துக்கென வழங்கப்பட்ட அரைகுறை நிதியைப் பயன்படுத்தி ஓரளவு புனரமைக்கப்பட்டமை தெரிந்ததே.

பின்பு 2002 ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, நாட்டில் ஓரளவு அமைதி நிலவியபோது, தமிழ் மக்கள் தமக்கு விடிவு ஏற்பட்டுவிட்டது என்று எண்ணினர். ஆனால், இந்த உடன்படிக்கைக்குப் பின்பும் மக்கள் தமது வாழ்வில் எந்தவித முன்னேற்றமுமின்றிப் போரும் சமாதானமும் அற்ற சூழலில் எந்த நேரத்திலும் போர் தொடங்கலாம் என்ற அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறாக, இவர்களின் வாழ்வில் கலக்கமான நிலைமை ஏற்பட்டபோது கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற இயற்கை அனர்த்தம் பொதுமக்களின் சொத்துக்களுக்கும் உடைமைகளையும் பெருஞ் சேதத்தை ஏற்படுத்தியது. போர்ப் பீதியிலும் விட மிகமோசமான பாதிப்பை - உளத் தாக்கத்தை இந்த சுனாமிப் பேரலை ஏற்படுத்தியது.

இன்று பிறக்கின்ற பார்த்திப வருடம் அனைத்து மக்களுக்கும் சுபீட்சமான வாழ்வையும், ஒளிமயமான எதிர்காலத்தையும் வழங்கவேண்டும். நாட்டில் சாந்தியும் சமாதானமும் ஏற்படவேண் டும். இந்த பார்த்திப வருடத்தில் ஏனையவர்கள் மீது பக்தியும் மரியாதையும் கொண்ட ஒரு பண்புள்ள சமூகமாக நமது சமூகம் மாற்றம் பெறவேண்டும். வழிபாடின்றிக் கிடக்கின்ற பிரசித்திபெற்ற ஆலயங்களில் மீண்டும் வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டு, மக்கள் மத்தியில் இறை நம்பிக்கை ஏற்படுத்தப்படவேண்டும். தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு நிரந்தர சமாதானம் நிலவ எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுவோமாக.

**ஹரி**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்புமலர்





அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

றேடியோ, கசெற்ஸ், ரீ.வி., வீடியோ
டெக், மின்விசிறிகள்,
கொம்பியூட்டர்கள் மற்றும் மின்சாரப்
பொருள்களைப் பெற்றுக்கொள்ள
விஜயஞ்செய்யுங்கள்

**V.K. இராசரத்தினம்**

95, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2056. (C/41769)

**திருத்திக்கொடுப்பதிலும் விசேஷமான நிறுவனம்.**





*புத்தாண்டே புதுவரலாறு படைக்க வா !*
*பிரிந்த உ றவுகள் இணைந்திட வா !*
*ஏழைகளின் துயரை நீக்கிட வா !*
*ஏழைகளின் வறுமையைப் போக்கிட வா !*
*தமிழரின் அவலவாழ்வை துடைத்திட வா !*
*அடிமை வாழ்வின் இருளை அகற்றிட வா!*
*விழ்ச்சியில்லாத வாழ்வைத் தமிழருக்குக் கொண்டுவா !*
*நல்ல,வல்ல தலைவரை நம்பி வா !*
*ஈழமண்ணுக்கு நல்லதைக்கொண்டுவா !*
*தமிழீழம் மலர்ந்திட வா...!*

யோ.யூட்நிமலன்,
காந்தரூபன் அறிவுச்சோலை.




எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
அசல் 22 கரட் உத்தரவாதத்துடன் புத்தம் புதிய நவீன
டிசைன்களிலான அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த இடம்:

**விஷ்ணு ஜுவல்லரி**

181, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (வின்சர் தியேட்டர் முன்பாக) (c/42132)





**பூரணி நகைமாடம்**

நல்லதோர் காலம் நயமாய் வரும் சித்திரைப் புத்தாண்டே எல்லோர் வீட்டிலும் கனியவைப்பாய் அமைதிதனை! அனைவருக்கும் எம்மினிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளைச் செய்து பெற்றுக்கொள்ள

தங்கப்பவுண் நகை வியாபாரம் (வின்சர் தியேட்டர் அருகில்)
1/5, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 3121

ஓடர் நகைகள் குறித்த
தவணையில் உத்தரவாதத்துடன்
22 கரட்டில் செய்துகொடுக்கப்படும்




(C/41770)



இன்று பிறந்துள்ள சித்திரைப் புத்தாண்டு அனைவருக்கும் நன்மைகளை அளித்திட வாழ்த்துகின்றோம்!

இளைஞர், யுவதிகளின் கனவுகளை நனவாக்கும்

## இளம் பருவத்தினரின் சேமிப்புக்கணக்கு




- ஒரு லட்சம் ரூபா வரை சுகாதாரக் காப்புறுதி
- முதல் குழந்தைக்கு ரண் கெகுளு கணக்கு
- உயர் கல்விக்கான புலமைப்பரிசில்
- உயர் வட்டி வீதம்
- திருமண நாளில் ஒரு பவுண் தங்கப்பரிசு
- ரூபா. 5 லட்சம் வரை ஆயுள் காப்புறுதி
- ***VISA Electron & Credit Card***
- வங்கிக் கடன் வசதி

**BOC**

ඔබේ විශ්වසනීය බැංකුව
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி
**The Bank You Can Trust**

இளம் பருவத்திற்கு அன்புடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்புமலர்




சித்திரைத்தோழி
சுனாமிப்பேரலைகள்
பண்ணிய அனர்த்தங்களால்,
சோர்ந்து நிற்போருக்கு,
மகிழ்வூட்ட வருக.

ஓ! பார்த்திப நங்கையே !
பாரம்மா ! சமாதானமுமே
தள்ளாடிக்கொண்டு தானே
நிலையான சமாதானத்துக்காய்
நீ எழுந்து வருக !
தோழி! தீமைகள் நீங்கிட,
நமக்கு நலங்கள் பெருகிட,
(பா) க்களும் புஷ்பங்களும்,
பொங்கல்களும் நின் பாதங்களுக்கே.
நீயாவது அருளிட வருகவே.

மீசாலையூர் கமலா.


Dialog kit

இன்று பிறந்துள்ள புத்தாண்டில் அனைவருக்கும்
எமது நல்வாழ்த்துக்கள்!

more Mobitel

தொலைத்தொடர்பு சேவையில் மேலும் பல சேவைகள்
அங்கீகாரம் பெற்ற முகவர்

Doller Card

SLT Passport

Calling Card

சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும்
இணைப்புக்களையும் (Connection)
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்
சகல தபால் அலுவலக சேவைகள் துரித தபால் சேவைகள்
உள்நாட்டு வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகள்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்தில் இருந்தும்
ஒரு சில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும்
இன்னும் பலசேவைகளையும்
ஒருகூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

SRI MURUGAN
Telecommunication & Agency Post Office
303, K.K.S. Road, Jaffna
T.P.No:-021-222 2670, 5392 Fax No: 021 -222 3214, 3435
Hot Line: 0777 427182 E.mail: del-smskr@eureka.lk

(C/41757)





அன்பர்கள் அனைவருக்கும் புதுவருட நல்வாழ்த்துக்கள்!
அசல் தங்க நகைகளுக்கு நம்பிக்கையாக நாடுமிடம்:

சிறி மீனாட்சி தங்க மாளிகை

(C/41753) 187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.தொ.பே:222 6109





அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இன்றைய புத்தாண்டு நன்னாளில்
குதூகலமான நல்வாழ்த்துக்கள்!




WESTERN UNION
MONEY TRANSFER


* FAX
* LOCAL CALL
* IDD
* INTERNET
* E-MAIL
* PHOTOSTAT
* LAMINATION

குமார்
முகவர்-தபால் நிலையம்
133/3, மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம். ☎7727


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்புமலர்

## பார்த்திப ஆண்டே இப்பாவிகட்கு அமைதி தா!



வீட்டுடன் சொத்துக்கள் இழந்தவர் ஒருபால்
மாட்டுடன் கன்றினை மறந்தவர் ஒருபால்
தோட்டங்கள் துரவுகள் துறந்தவர் ஒருபால்
தேட்டங்கள் அனைத்தையும் தொலைத்தவர் ஒருபால்

ஆர்ப்பரித்த கடலால் அனைத்தையும் இழந்தோம் நாம்
வார்த்தைகளே இல்லை வதை படும் நிலை சொல்ல
நேர்த்திகள் பல செய்து நெஞ்சார வேண்டுகின்றோம்
பார்த்திப ஆண்டே இப்பாவிகட்(கு)கமைதியைத்தா

கவிமணி அன்னை தாஸன்
உரும்பிராய்



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்புமலர்

அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
இணையற்ற டிசைன்களில் என்னம்போல் தெரிவுசெய்திட நாடுங்கள்:
அங்கலின் ரெக்ஸ்ரைல்ஸ்
இல.55, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3145, 0777 031382
(C/41752)

## வசந்தங்கள் சுமந்து... வா புத்தாண்டே!

பூவிழி சிமிட்டி வரும் புத்தாண்டு
புதுமைகள் பூத்திட்ட புத்தாண்டு
பாவலர் பாடிட புத்தாண்டு
பாரினில் உதித்திட்ட புத்தாண்டு

வளங்கள் செழித்திட புத்தாண்டு
வறுமை ஒழிந்திட புத்தாண்டு
மனங்கள் மகிழ்ந்திட புத்தாண்டு
மக்கள் உய்ந்திட புத்தாண்டு

கலகம் ஓய்ந்திட புத்தாண்டு
நிலவும் பகை தீர்ந்திட புத்தாண்டு
நிறையும் சாந்தியில் புத்தாண்டு
நிம்மதி நிலைத்திட புத்தாண்டு

சீர் தங்கிட புத்தாண்டு
சிறப்புக்கள் உதித்திட புத்தாண்டு
வசந்தங்கள் வாழ்த்திட
வாராயோ இத்தரையில் நிலையாக ...

- க.நாகேஸ்வரா

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
புதிது புதிதாக பல்வகையான மின்சார இலத்திரனியல்
பொருள்களையும் மற்றும் தங்கள் மனங்கள் அன்பளிப்புப்
பொருள்களையும் பல்வகை கைக்கடிகாரங்கள், மணிக்கூடு
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:
யாழ்ரன் மல்ரி சென்ரர்
இல.46, 48, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 6330
(C/41763)

அன்பர்கள், நண்பர்கள்,
ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
நல்ல தரமான நல்ல ரகமான
உறுதிமிக்க மின்
உபகரணங்களுக்கும்,
தளபாடங்களுக்கும் நாடுங்கள்:
ரொக் எலக்ரோனிக் பேணிச்சர் மார்க்
316, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(சி/41760)

SRI KARUMARI NAKAIAHAM
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எம்மினிய புதுவருட நல்வாழ்த்துக்கள்!
ஓடர் நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்துகொடுக்கப்படும்.
சிறி கருமாரி நகையகம்
205/6, ராஜா தியேட்டர் கட்டடம், கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே:5385 (C/42137)
205/6, Rajah Theatre Building
Kasthuriar Road, Jaffna.

இன்றைய அறிமுகம்! நாளைய நாகரிகம்!
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தமது
இனிய புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது!
மகாராசி சில்க்ஸ்
- சேட்டிங், சூட்டிங்
- சோளிகிற்
- சேட்ஸ் - சோட்ஸ்
- கவுண்
- சல்வார்கிற்
- இந்தியன் சாறிகள்
- பேபி சூட்
மற்றும் சிறுவர், சிறுமியர்களுக்கு ஏற்ற றெடிமேற் ஆடை
வகைகளுக்கு இன்றே விஜயஞ்செய்யுங்கள் (C/42131)
59, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம். தொ.பே. 0777 286247

நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது புதுவருட
வாழ்த்துக்கள்!
அசல் 22 கரட்டில் குறித்த
தவணையில் நம்பிக்கையுடன்
செய்துபெற்றிட யாழ்.தலைநகரில்
தலைசிறந்த ஸ்தாபனம்
நியூ நிறஞ்சனாஸ் நகைமாளிகை
(C\41762)
83/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 071 - 2270458, 077 - 6070679
(E.S. பேரம்பலம் முன்பாக)

எல்லோர் வாழ்விலும் அமைதி நிலைபெற
அனைவருக்கும் எம்மினிய
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
நவீன அழகிய தங்க
ஆபரணங்களுக்கு சிறந்த
ஸ்தாபனம்
சிறி சிவாஞ்சனா நகையகம்
இல.149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 5481
உரிமையாளர்: சி.சிவமூர்த்தி
(C\42134)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம்மினிய
புதுவருட நல்வாழ்த்துக்கள்!
Vinayakar pudavaiakam
- முகூர்த்தப் பட்டுப்புடைவைகள்
- சல்வார்ஸ் ட்ரெஸ் மற்றீரியல்ஸ்
- மற்றும் றெடிமேட் ஆடைவகைகளுக்கு
விநாயகர் புடைவையகம்
62A, 63A, நவீன சந்தை உட்புறம்
யாழ்ப்பாணம்.
(C/42136)

அன்பர்கள், நண்பர்கள்,
ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எம்மினிய புதுவருட
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
★ சுபமுகூர்த்தப் பட்டுப்
புடைவைகளா?
பட்டுவேட்டிகளா? அல்லது நீங்கள்
விரும்பும் ஏனைய புடைவை
வகைகளா?
★ எது வேண்டுமோ
அனைத்தையும் உங்கள் எண்ணம்
போல் தெரிவுசெய்திட நாடுங்கள்
(C/42139)
சீமாட்டி புடைவைக்கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
மங்கை சில்க்ஸ்
15, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்புமலர்

## சாந்தி, சமாதானம், சந்தோசம் இவை மூன்றும் இன்று வேண்டும்

என்
பிறப்போடு கூடவே
நகர்ந்து வருகிறது
கொடிய யுத்தமும்
போலிச் சமாதானமும்

வானத்தில்
சூரியன் உதித்தாலும்
எங்கள் மனவெளிகளில்
இன்னும்
வெளிச்சம் இல்லை.

இன்று விடியும்
நாளை விடியும் – என
நாம் ஏங்கும் போது

இடையிடையே
நம்பிக்கைக் கீற்றுப் போல
புத்தாண்டே –நீ
வந்துபோகிறாய்

அப்போது
மருத்து நீர் தேய்த்துக்
குளிக்கிறோம்
புத்தாடை அணிகிறோம்
இறைவனின் பாதங்களில்
மலர் தூவித் தொழுகின்றோம்
அதைவிட,
விருந்தோம்பி மகிழ்கின்றோம்

மறுநாள்
இவை எல்லாவற்றையும்
மறுவருடம் வரை
நினைவில் இருந்து
அழுத்துக்கொள்கிறோம்
புத்தாடைகளைக்கூட
கழற்றி விடுகிறோம்.
ஏமாற்றத்தை மட்டும்
மனதில் அணிந்தபடி.

இன்னும்
தீளப்போவது
ஏமாற்றமா ? –இல்லை
சாந்தி, சமாதானம்,
சந்தோசமா?

– சுயர்சன்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது புத்தாண்டு
வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது ஊர்திகள்
சுத்திகரிப்பு நிலையத்தில்
எவ்வகையான
வாகனங்களானாலும்
குறித்த நேரத்தில் தாமதமின்றி
சுத்திகரித்துக் கொடுக்கின்றோம்.

சீர்கண்ணன்
ஊர்தி சுத்திகரிப்பு நிலையம்
15ஆவது தூரக்கல் அருகில்,
முல்லைத்தீவு பரந்தன், நெடுஞ்சாலை விசுவமடு.
(C-41789) (54-

அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு
வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

- உந்துருளிகளின் உருதிகள் - துவிச்சக்கரவண்டி உருதிகள், நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் பம்பியின் உருதிகள்.
- பலசரக்கு வகைகள் (பல்பொருள்கள்)
- வீட்டுப் பாவனைப் பொருள்கள்
- பிளாஸ்ரிக் கதிரை வகைகள்
- எரிபொருள் வகைகள் எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

சின்னக்கண்ணன்
உருதிகள் பல்பொருள்கள்
வாணிபம்
முல்லைத்தீவு - பரந்தன் நெடுஞ்சாலை,
விசுவமடு சந்தி, விசுவமடு.
(C-41790) (54-

இனிய சித்திரைப் புத்தாண்டில் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள்.
அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய
சிறந்த இடம்
ஸ்ரீ வாணி
நகை மாடம்
இல.173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:3225
(C-41783) (54-

வாடிக்கையாளர்கள், அன்பர்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.
இக்காலத்தின் தேவைக்கேற்ற புதிய டிசைன்களில் உருவாக்கம் செய்த
- புடைவை வகைகள்,
- பாதணிகள்,
- அன்பளிப்புப் பொருள்கள்,
- அலங்காரப் பொருள்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இறை அம்மன்
புடைவை அகம்
பரந்தன் - முல்லை நெடுஞ்சாலை விசுமடுச்சந்தி, விசுவமடு.
(C-41788) (54-

அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
றேடியோ 2 in 1 Set's HI-FI A Amplifiers's,
T.V. Deck மற்றும் அனைத்து விதமான
எலக்ரோனிக் சாதனங்களையும் சிறந்த
முறையில் திருத்திப் பெற்றிட
நீங்கள் நாடவேண்டிய
ஸ்தாபனம்.
T. C. ELECTRONICS
254, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் சினிமா
முன்பாக), யாழ்ப்பாணம்.
(C-41777) (54-

இதயங்கள் தோறும் இன்பம் பொங்கிட அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம்மினிய
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
என்றென்றும் உங்கள்
சேலைகளின் சோலை
இளவரசி
சேலைச்சோலை
7, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2503
(C-42126) (54-

அன்பர்கள்,நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
புத்தாண்டு நல் வாழ்த்துக்கள் !
புடைவைத்தினுசுகள்,கூறைச்சேலைகள், பஞ்சாபி, ஸ்கேட்
அன்பிளவுஸ், சேட்டிங், சூட்டிங்ஸ், சேட், டெனீம், ஜீன்ஸ்,
T - சேட், (ரெமேட்) மற்றும் அனைத்து வகையான
ஆடைத் தெரிவுகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்
சிவா
ரெக்ஸ்ரைல்ஸ்
ECHO LAMP SPIRAL
ENERGY RATING
ஏகவிநியோகஸ்தர்கள்
சிவா ரெக்ஸ்ரைல்ஸ்
இல.27, பெரியகடை,யாழ்ப்பாணம்
தொ.பே 021 222 2463, 021 222 5724
(C-41758) (54-

அன்பர்கள்,நண்பர்கள், அபிமானிகள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
அழகுக்கு அழகு செய்யும் லக்சுமி கரமான
தங்க நகைகளுக்கு நம்பிக்கையும் நாணயமும்
நிறைந்த நம்பகரமான ஸ்தாபனம்
ஸ்ரீ லக்சுமி
ஜுவல்லர்ஸ்
உரிமையாளர்
N. ரமேஸ்
220A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0777 - 038772
(C-41775) (54-

புதுமணம் வீசும் புதுவருட நன்னாளில் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
பலசரக்கு மற்றும்
மிக்ஷர் தயாரிக்கும்
பொருள்கள்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெறுவதற்கு
ஜெகன் களஞ்சியம்
இல. 285, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P:- 222 5035
(C-41780) (54-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்புமலர்

## நேர்த்தியான வாழ்வு இன்றைய அவசியதேவை பார்த்திப வருடம் அதனை நிறைவுசெய்யுமா?

'ஆற்றில் போட்டாலும் அளவறிந்து போடு' என்பது ஆன்றோர் வாக்கு. ஆம்! இந்த அளவு எது? இதற்கு விடையாக நாம் நீள அளவு, கனஅளவு, நிறை அளவு, காலஅளவு எனப் பார்க்கலாம். இதிலே இன்றைய வருடப்பிறப்பு காலஅளவாக இருப்பதை ஊன்றிக் கவனிப்பவர்கள் உணர்வர்.

மனிதன் பிறக்கிறான், இறக்கிறான், இவ னது செயல்கள், அனுபவங்கள், எச்சங்கள் அனைத்தும் காலப்பகுதியினுள்ளேயே அடங்குகிறது. தமிழனின் கால வாய்ப்பாட்டைப் பாருங்கள்.

60 தற்பரை = 1 விநாடி
60 விநாடி = 1 நாழிகை
60 நாழிகை = 1 நாள்
365 நாள் 15 நாழிகை = 1 வருடம்

**ஆங்கிலேயர் காலவாய்ப்பாடு**

60 செக்கன் = 1 நிமிடம்
60 நிமிடம் = 1 மணித்தியாலம்
24 மணித்தியாலம் = 1 நாள்
365 1/4 நாள் = 1 வருடம்

ஆக அடிப்படையில் எந்தமாற்றமும் இல்லை. ஆங்கிலேயரது விஞ்ஞானத்திற்கும் தமிழரின் மெஞ்ஞானத்திற்கும் குறிப்பாகச் சைவக் கோட்பாட்டிற்கும் எந்தவித வித்தியாசமு மில்லை.

ஆம் அந்த அடிப்படை தான் என்ன? சூரியன் உதிப்புத் தொடக்கம் மறுநாள் சூரிய மறைவு வரையான காலம் எமக்கு ஒருநாள். இது ஏனையோருக்கு நள்ளிரவு 12.00 மணி தொடக்கம் அடுத்தநாள் நள்ளிரவு 12.00 மணிவரை அமைகிறது. காலக்கணிப்பு சூரியனின் அடிப்படையே. இவனது இயக்கமே பிரபஞ்ச இயக்கமாகும். இவனின் இயக்கத்தில் சிறு மாறுபாடு ஏற்பட்டாலும் பல சுனாமி கள் எங்களைப் பாழ் படுத்திவிடும்.

ஆக, ஒரு நாளின் கூறுகள் நாடி, விநாடிகள், நாளின் சேர்க்கைகள் கிழமை, மாதம், வருடம். இம்மொத்த காலத்திற்கு ஆத்மீக விளக்கம் கொடுத்து அருமையாகக் கணித்து அழகாக எம்மை ஆற்றுப்படுத்தியுள்ள அற்புத ஔட தம் பஞ்சாங்கம். ஆம், 1.வாரம், 2.திதி, 3.கர ணம், 4. நட்சத்திரம், 5.யோகம் இவை ஐந் தும் பஞ்ச அங்கங்களாகி எம்மைப் பக்குவமாக வாழ எதிர்வுகூறும் சாத்திரக்கலையா கின்றது.

இதன் அடிப்படையிலேயே இன்று இந்துக்களாகிய நாம் புதுவருடம் கொண்டாடுகின்றோம். இதனைப் பஞ்சாங்கமொழியில் சொன்னால் இன்று சூரியன் மீனராசியை விட்டு விலகி மேடராசியில் பிரவேசிக்கின்றான்.

அதனையும் எம்முன்னோர்கள் ஆனந்த தொடக்கம் பிரமாதீச என அழகான அறுபது வருடங்களாக்கிப் பெயரிட்டுள்ளனர்.

### அழிவுகள் பலவும் தந்த தாரண வருடம்

இன்று இதில் தாரணத்தாள் போய் பார்த்திப என்னும் புதுமாது பாரினை எட்டிப் பார்க்கிறாள். தாரணத்தாள் தந்த துயரங்கள் அப்பப்பா! நினைக்கவே பயங்கரமாக இருக்கிறது. பயிரழிவு, உயிரழிவு, சொத்தழிவு, போதாக்குறைக்கு அருட்தந்தை இரண்டாவது சின்னப்பரையும் இழந்து நிற்கிறோம்.

மொத்தத்தில் அழிவு, அழிவு, அழிவே.

அதுமட்டுமல்ல, வாழ்க்கையில் நாம் கேள்விப்படாத சுனாமி என்ற சொல்லை உலகோரைப் பாவிக்க வைத்தவளும் இவளே. அது மட்டுமல்ல சுனாமி எங்கேயும் எப்பொழுதும் வரும் என்ற பயப்பீதியும் வேறு. சுனாமி வந்தது அழிந்தோம், அழிவோம் என்ற நிலை யில் மனித மனம் இதிலிருந்து தப்ப எதனை நாடுகிறது. ஆம்! எம் மதத்தைச் சார்ந்தாலும் இறை சக்தியே எம்மைக் காப்பாற்றும் என்ற கொள்கையே ஒவ்வொரு மனிதனதும் மனதினதும் அடிநாதமாக இருக்கிறது. இறந்தாலும் பிரார்த்தனை, சுகமாய் இருப் பதற்கும் பிரார்த் தனை, சுகமாய் பிறப்பதற்கும் பிரார்த்தனை யாகங்கள், ஓமங்கள், திருப்பலிகள், ஒப்புக் கொடுத்தல்கள், 'துஆ'க் கள் 'பிரித்'துக்கள் எனப் பத்திரிகைகள் பறை சாற்றுகின்றன.

குறிப்பாக, இன்று இவற்றையெல்லாம் நினைக்கின்றோம். ஏன் இறைவா! இனி வருங்காலத்திலாவது எம்மைச் சாந்தி சமாதானமாக வாழ வழிவகை செய்யப்பா! என வேண்டத் தூண்டும் திருநாள் இது. எம்மை எழுச்சியூட்ட, விழிப்புணர்வூட்ட, உற்சாகமூட்ட எமக்காக எம்முன்னோர்கள் ஏற்படுத்தி வைத்த திருநாள். இந்த நடைமுறையே வருடப் பிறப்பாகும்.

### மனிதம் செத்த மாந்தர்கள்

புத்தாடை, பூசை, புலாஸ்காரம், கைவிசேடம், நாள்வேலை, ஏடுதொடக்கல் எல்லாம் பஞ்சாங்கத்தில் அருமையாக எழுதப்பட் டுள்ளது. அதனை வாசித்து அதன்படி எல்லாம் ஏதோ செய்வோம். ஆனால், மறுநாள் மனிதம் செத்த மாந்தர்களாகி விடுகிறோம்.

வழிபடவந்த வயோதிப மாதின் நகைகள் மிருகத்தனமாகப் பறிப்பு, ஆலயத்தை உடைத்து அம்மனின் நகைதிருட்டு, வீதியில் படுகொலை, அகோரவிபத்து, வீட்டினில் திருட்டு, வல்லுறவு, அநியாயச் சாவுகள் என ஊன்றிப் பாருங்கள். உண்மை தெரியும். மனிதம் செத்து மிருகத்தனம் வளர்வது புரியும். சந்திகளைப் பாருங்கள் அந்தியில் எமது அருமை வாரிசுகள் இந்நாட்டின் முதுகெலும்புகள், எம்மை ஆளும் ராசாக்கள், இந்த நாட்டின் விலை மதிப்பில்லா பொக்கிஷங்கள் ஆம்!

எம் இளைஞர்கள் படும்பாடு
பெரியோரை மதிக்காப் பண்பு
பணத்தாலே வந்த பரிதாப வீம்பு
படிப்பறிவற்ற பாழ்பட்ட நிலை

இவர்களைக் குட்டிச்சுவராக்கத் திட்டமிட்டு வழங்கும் பகட்டான படாடோபம், போதை, புகைப் பொருள்களின் பாவனை. இவற்றால் எம்மை நாமே அழிக்கும் இழிநிலை.

சூழலைப் பாருங்கள் வேலிகளில் மரங்களில்லை, வீதிகளில் நிழல்களில்லை, ஆளுயர மதில்களுடன் அழகுமிகு படலைகள் (Gates) பல்லாண்டு காலம் பாவிக்கும் வேற் படலைகள் மாறி சில்லாண்டில் சிதையும் சிருங்காரப் படலைகள். இவையெல்லாம் தேவையா? இப்படிப் பல கோணத்தில் பல கேள்விகள் கேட்கலாம். சிந்திப்போம்.

ஆக இன்று பிறக்கும் பார்த்திப வருடத்திலாவது இறைவா! நாமெல்லோரும் பெற் றோரை மதித்து பெரியாரைப் போற்றி பிறர் பொருளை அபகரிக்காது, பிறருக்குத் தீங்கு செய்யாது, மனிதத் தன்மையுடன் நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைக்கும் மனப்பக்குவத்தைத்தா? எம் பிழைகளையெல்லாம் மன்னித்து, எம்மை சாந்தியும் சமாதானமுமாக வாழவை. இனியேனும் சுனாமிகளைத் தராதே என்று வேண்டி இன்புற்று வாழ்வோமாக!

●●●●●

**வயவையூரான்**















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*யாழ்.நகரில்!* அரச அங்கீகாரம் பெற்ற முதல்தர விளம்பரதாரர்கள்

ஜோ எகட்டனின்

# செனித் மார்க்கட்டிங் அன் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்

+

கே.எஸ்.ரகுவின்

# ரகுப்பிரியா அட்வடைசிங் சேர்விஸ்!

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை விளம்பரங்களை வித்தியாசமாகத் தருபவர்கள்

அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களை வழங்குகின்றார்கள்.

★ செனித் மார்க்கட்டிங் அன் அட்வடைசிங் சிஸ்டம்

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,

சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 222 7227.

★ ரகுப்பிரியா அட்வடைசிங் சேர்விஸ்

Y.M.C.A.

கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 0777 222 606

நாங்கள் இப்பொழுது இணைந்து மெதுவாக - பலமாக - முன்னேறிக்கொண்டிருக்கின்றோம்



ஒரு

பெண்ணைத் தெய்வமாக்குகிறது

பண்பாடு

ஒரு

பெண்ணைத் தேவதையாக்குகிறது

**செல்லமுத்து புடைவை மாளிகை**

நெல்லியடியில் முழுக்குடும்பத்திற்கும் ஏற்ற

அனைத்துரக ஆடைகளையும் தாம்பிரித்து

தெரிவுசெய்திட இப்பொழுது

ந

வீ

ன

காட்சியறையில் மலர்ந்திருக்கிறது!

## செல்லமுத்து புடைவை மாளிகை

பிரதான வீதி, நெல்லியடி. போன்: 226 3238

*அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்*

சித்திரைப் புத்தாண்டில் சிரித்து மகிழ்ந்திட

வாழ்த்துகின்றார்கள்

## ★ ஈழுவாணி சுயதொழில் நிறுவனம்


## ★ ஈழுவாணி பிலிம்ஸ் நிறுவனம்

என்றும் எப்பொழுதும் உங்களுடன் இணைந்திருக்கின்றோம்.

**இல.111, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.**

கோடைக்கானல் தோட்டம் - இங்கே

கொஞ்சும் பறவைகள் கூட்டம்





## கனி கிறீம் ஹவுஸ்

சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.

★ ஐஸ்கிறீம் வகைகள்

★ நாவுக்குச் சுவை தரும் சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், கனியின் கமகம பீடா சுவைத்து மகிழ்ந்திட

**கனி கிறீம் ஹவுஸ்**

தபாற்பெட்டிச் சந்திக்கு அருகில், பலாலி வீதி. திருநெல்வேலி.

★ கவனியுங்கள்:

சகல வைபவங்களுக்கும் வேண்டிய ஓடர்களும் உடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களை

வழங்குகின்றார் அழகுக் கலை ஆசிரியை செல்வி குயின்ரா அவர்கள்

தொடர்புகளுக்கு



## குயின்ஸ் ஹோம் சயன்ஸ் அக்கடமி அன் பியூட்டி சென்ரர்



இல.167, குருசோ வீதி, பெரிய கோயிலுக்கு அருகில், யாழ்ப்பாணம்.

போன்: 0777 6159488

**மணப்பெண் அலங்காரம் முதல் நவீன அழகுக் கலை அனைத்தையும் முழுமையாகக் கற்பித்துத் தருகின்றார்.**

இசையால் வசமாகும் இதயங்களுக்கு இனிய சித்திரைப் புத்தாண்டு

வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்கள்

## ஐங்கரன் இசைக்குழுவினர்



இப்பொழுது நவீனமயப்படுத்தப்பட்ட இசைக்கருவிகளுடன் ...

புதிய இசைவடிவங்களுடன் வடபுலமெங்கும் வலம் வருகின்றார்கள்!

**ஐங்கரன் இசைக்குழுவினர்**

மணிக்கூண்டு வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(43928) **விளம்பர இணைப்பாளர்: ரகுப்பிரியா அட்வடைசிங் சேர்விஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு...

( 19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீபாவளி, கார்த்திகைத் தீபம் என்பவை இந்த வகையில் அடங்கும் பண்டிகைகளாகும். இவற்றுள் இந்நாட்டுத் தமிழ் மக்களால் பக்தி சிரத்தையுடனும், அதேவேளை சமுதாய ஒன்றிணைவு, பரஸ்பர சிநேகபான்மை ஆகிய பண்புகளைக் கட்டிக்காத்துப் பேணும் வகையிலும் அமைந்த முக்கிய இந்துப் பண்டிகையே புத்தாண்டுப் பண்டிகையாகும்.

இந்துக்கள் இப்புதுவருட தினத்தன்று மருத்துநீர் வைத்துத் தோய்ந்து புத்தாடை அணிவதும், ஆலய தரிசனம் மற்றும் பெரியோரைப் பணிந்து கௌரவிக்கும் வகையிலமையும் கைவிசேஷம் வழங்குதல், பெறுதல் என்பனவும் ஆண்டாண்டு காலமாகத் தொடர்ந்து கடைக்கொள்ளப்பட்டுவரும் வழக்கங்களாகும். இன்றும், நம்மில் அநேகர் அந் நடைமுறைகளை உரிய வகையில் பயபக்தியோடு கடைப்பிடித்து வருகின்றனர்.

அறுபது ஆண்டுகள் மாறிமாறிவரும் காலக் கணிப்பீட்டு முறையிலமைந்த தமிழ் ஆண்டுகளின் பெயர்ப்பட்டியல் காலத்தால் மிகத் தொன்மை வாய்ந்தது.

24 மணித்தியாலங்களைக் கொண்டது ஒரு நாளாகும் என்ற அடிப்படை விதியைக் கொண்டு உருவான காலக் கணிப்பீட்டின் அடிப்படையில் நாள், வாரம், மாதம் என்பன பரிணமித்து ஈற்றில் பூரணமான ஓராண்டாக மலர்கிறது. அந்த வகையில் தாரண வருடம் நேற்றுடன் முடிவடைந்து இன்று பார்த்திப ஆண்டு புதிய ஆண்டாக மலர்கின்றது.

ஆரம்பத்தில் மத நம்பிக்கைக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதத்தில் இந்துக்களால் கொண்டாடப்பட்டு வந்த இப்புத்தாண்டுக் கொண்டாட்டம் காலப்போக்கில் அவர்தம் கலாசார விழுமியங்களை நினைவு கூரவும், பாரம்பரிய கலாசார வெளிப்பாடுகளை அரங்கேற்றவும் வாய்ப்பளிக்கும் முக்கிய கொண்டாட்டமாக மாற்றமுற்றதென்னமோ கால ஓட்டத்தின் செயற்பாடாகும். அந்த வகையில் தத்தமது சமூகரீதியில் மற்றும் பிரதேச ரீதியில் பொதுமக்கள் ஒன்றுகூடி தத்தமது கலை, இலக்கிய வெளிப்பாடுகளை வெளிக் கொணரும் ஒரு சந்தர்ப்பமாக இந்நாட்களில் புத்தாண்டுக்கொண்டாட்டம் மாற்றம் கண்டுள்ளது.

நமது நாட்டின் பெரும்பான்மை இனத்தவரில் பௌத்த மதத்தைப் பின்பற்றுவோர் மத அடிப்படையில் பெரும்பான்மையினராவர். பௌத்த மதத்தினரும் தமது புத்தாண்டாக சித்திரை மாதத்து முதலாம் நாளையே கொண்டாடி வருவது சகலரும் அறிந்த தொன்றே. அந்த வகையில் அண்மைய சில தசாப்த காலமாக இப்புத்தாண்டை இந்நாட்டின் இருபெரும் மதப்பிரிவினரான இந்துக்களும் பௌத்தர்களும் ஒன்றுசேரக் கொண்டாடிவரும் வழக்கத்தால் இது ஒரு தேசியக் கொண்டாட்டம் என்ற விதத்தில் கருதப்பட்டு வருகின்றது. மத ரீதியிலமைந்த இப்புத்தாண்டுக் கொண்டாட்டம் காலப்போக்கில் இனங்களுக்கிடையே ஒற்றுமையையும் அன்னியோன்யத்தையும் உருவாக்குவதற்கான முயற்சி என்ற வகையில் அரசியல் வாதிகளால் திசைமாற்றப் பட்டுள்ளது.

ஆயினும், இவ்விரு இனத்தவரும் புத்தாண்டை ஒன்றுசேரக் கொண்டாடக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி தம்மிடையேயான சந்தேகங்களையும் அவநம்பிக்கைகளையும் களைய சந்தர்ப்பம் வாய்த்துள்ளபோதிலும் செயலளவிலோ, சிந்தனையிலோ இம் முயற்சி பயனளிப்பதாக அமையவில்லை.

இருந்தபோதிலும் இப்புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் இவ்விரு மதப்பிரிவினரும் தத்தமது இனத்தின் கலாசார பாரம்பரியங்களுக்கமைந்த விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலாசார நிகழ்வுகளை ஏற்பாடு செய்து கொண்டாடி மகிழ்கின்றனர்.


மேற்குலக நாடுகளில் முற்றுமுழுதாக கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுவோர் வாழ்வதாலும், உலகின் ஏனைய பெரும்பாலான நாடுகளில் கணிசமான அளவு கிறிஸ்தவ மதத்தினர் வாழ்வதாலும் கிறிஸ்துநாதரின் பிறப்பை மையமாகக் கொண்டு கணிக்கப்படும் ஆங்கிலப் புத்தாண்டே இன்று உலகில் முக்கியத்துவம் மிக்க கால நடைமுறையாகக் கணிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்துக்கள் ஆண்டாண்டு காலமாக தம் வழக்கிலிருந்து வரும் இன, மத ரீதியான புத்தாண்டைக் கொண்டாடி வருகின்றனர்.

''பழையன கழிதலும் புதியன புகுதலும்'' என்பதற்கிணங்க இந்துக்கள் தத்தமது மதக்கோட்பாடுகளுக்கமைந்த, தனித்துவமும், பாரம்பரியமும் மிக்க பழக்க வழக்கங்

( 22 ஆம் பக்கம் பார்க்க)




அனைவரின் பசியையும் போக்கும்...



அனைவரின் பாரம்பரியங்களையும் பாதுகாக்கும்...



அனைவருக்கும் நீரினை வழங்கும்...



அனைவரின் ஆசைகளையும் நிறைவேற்றும்...

...இனிய புத்தாண்டை வரவேற்போம்!

S-lon
என்றும் முன்னணியில்

S-lon
இல்லம்

Rediffusion | DYR 731/04/05


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றும் இன்றும் என்றும்...
யாழ் நகரில்
தமக்கென
தனியிடம்
வகித்துவரும்




**சுப்பஸோ**

இப்பொழுது

**ரவி டிஜிற்றல் A-1 கலர் லாப் அன்**
**சுப்பஸோ வீடியோ, ஓடியோ சென்றர்**

என்னும் இணை நிறுவனத்தில் Frontier 350 டிஜிற்றல் இயந்திரத்தின் மூலம் உங்கள் புகைப்பட சுருள்கள், CD, Floppy, M.O.Disk, Zip ஆகியவற்றில் இருந்து 3R அளவு முதல் 10X15 அளவு வரை தேவைக்கு ஏற்றவகையில் சிறந்த முறையில் நன்கு பயிற்றுவிக்கப்பட்டவர்கள் மூலம் பிரதி ஆக்கம் செய்து பெற்றுக் கொள்ளவும் மற்றும் சிறந்த முறையில் டிஜிற்றல் Camara மூலம் உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள நிகழ்ச்சிகளை வீடியோ படம் பிடித்திடவும் சிறந்த முறையில் ஓடியோ ஒலிப் பதிவு செய்வதற்கு யாழ் நகரில்

**சுப்பஸோ**

இலங்கையில் முதன்முறை அறிமுகமான Frontier 570 டிஜிற்றல் இயந்திரம் மூலம் கொழும்பில் சிறந்த முறையில் பிரதி ஆக்கம் செய்து பெற்றிட




கொழும்பில்
**சுப்பஸோ டிஜிற்றல் கலர் லாப்**
206, ஜெம்பட்டா வீதி,
கொழும்பு - 13
தொ.பே: 011 4618370

யாழ். நகரில்
**ரவி டிஜிற்றல் A-1 கலர் லாப்**
அன் சுப்பஸோ வீடியோ, ஒடியோ சென்றர்
149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2082


# தமிழர்களுக்கு பெரும்....

( 19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள், நடைமுறைகள் என்பவற்றிலிருந்து காலம், சூழ்நிலை என்பவற்றின் தாக்கங்களுக்கமைய மாறிவரும் இன்றைய நிலையில் உலகெங்கிலும் பரந்து வாழும் இந்துக்கள் இப்புத்தாண்டு விடயத்தில் மட்டும் கண்ணும் கருத்துமாக மிக அக்கறையுடன் வேதிய முறைகளுக்கமைந்த கணிப்பீடுகளுக்கு மதிப்பளித்து ஏற்று இந்து மத தர்மத்தில் குறிப்பிடப்படுள்ள வகையில் ஒழுகி வருவதைக் காணமுடிகிறது.

அந்த வகையில் இந்து மதம் எந்த இடர் வரினும் இன்னும் ஆண்டாண்டு காலத்துக்கு நிலைத்து நின்று அவனியில் தர்மத்தை நிலை நிறுத்தும் என்பது உறுதியாகிறது.

அந்த வகையில் கடந்துபோன ஆண்டில் சந்தித்த தோல்விகள், துயரங்கள், சிரமங்கள் நீங்கி இப்புத்தாண்டிலாவது வாழ்க்கையில் அமைதியும் வெற்றியும் கிட்டவேண்டுமென்ற எதிர்பார்ப்புடனும், நம்பிக்கையுடனும் ஒவ்வொரு இந்துவும் ஆண்டவனிடம் வேண்டுவது அவசியமாகும்.

மனச்சோர்வுடன் வாழும் தமிழ் மக்களுக்கு இன்று உதயமாகும். 'பார்த்தீப' வருடம் வெறும் நம்பிக்கையையும், உற்சாகத்தையும் ஊட்டும் ஆண்டாக அமையாது, இந்நாட்டின் தமிழ் மக்களது சொந்த வாழ்விலும், அரசியலரங்கிலும் மதிப்பையும் வெற்றியையும் நிம்மதியையும் அளிக்கும் ஆண்டாக அமைய வேண்டுமென ஆண்டவனை பிரார்த்திப்போமாக. அடுத்து வரும் விபய ஆண்டு ஈழத் தமிழினம் உலக நாடுகள் மத்தியில் தலைநிமிர்ந்து நிம்மதியும், மகிழ்ச்சியும் கொண்ட இனமாக வாழ ஆண்டவன் அருள் வேண்டிப் பிரர்த்திப்போமாக.


## சித்திரையோ இ(து)ன்பத்தில்

சிறையிலே நித்திரையில்
இருந்து சமாதான சின்னங்கள்
இன்று சுதந்திரமாக
சிறகடித்து பறக்கும் வேளையில்
நாமெல்லாம் சித்திரையாளை
வரவேற்பதில் சந்தோசந்தான்
ஆனால்
எந்த பாவமும் அறியாத
சிறுவர்கள் தொடக்கம்
பெரியவர்கள் வரை
வேறுபாடு ஏதும் பார்க்காமல்
அலை வடிவில்
ஆயிரக்கணக்கான பேரை
கொலை செய்ய வந்த
பேரலை வந்து சென்றதால்
துக்கத்திலும் துயரத்திலும்
துன்ப பட்ட நிலையில்
அனைவரும் வாழும்
இந்த நேரத்தில்
நாமெல்லாம்
சித்திரையாளை
சந்தோசமாக
எப்படி வரவேற்பது.

ந.துரைராசசிங்கம்,
கோட்டைக்கல்லாறு - 1


"சோலைக் குயில் கூவும் ஒலி
காற்றினிலே குலாவும், இருளகலும்
ஒளியினிலே முகமலரும் அதாலே

மேள தாளம் மணி ஒலிக்க
புதுவருடம் இதோ பார்
உங்கள் நலம் சௌபாக்கியம்
அதுவேயெம் மன வாஞ்சை"



கொமர்ஷல் வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு நிம்மதியும் பெருமையும் தரும் ஆண்டாக 'பார்த்திப' மலரட்டும்!

இன்று பார்த்திப ஆண்டு பிறக்கின்றது கடந்துபோன தாரண வருடம் ஆரம்பித்த வேளையில் எத்தனை எதிர்பார்ப்புகளுடன் அதனை வரவேற்றோமோ, அதேவித எதிர்பார்ப்புடன் இந்தப் புதிய ஆண்டையும் ஈழத்தமிழ் மக்கள் நம்பிக்கையோடும் ஆவலோடும் வரவேற்கின்றனர்.

கடந்துபோன 'தாரண' ஆண்டு ஈழத்தமிழினத்தின் எதிர்பார்ப்பெதனையும் வழங்க முயன்ற ஆண்டாக அமையவில்லை; அந்தவகையில் இன்று உதயமாகும் புத்தாண்டாவது அவர்களது தனிப்பட்ட சொந்த வாழ்க்கையிலும் சரி, சமூக பொருளாதார மற்றும் அரசியல் மட்ட வாழ்விலும் சரி, சுபீட்சத்தையும், அமைதியையும், சமாதானத்தையும் உருவாக்கும் ஆண்டாக அமைய வேண்டுமென்ற பிரார்த்தனையுடன் புத்தாண்டை வரவேற்போம்.

இந்துக்கள் அனைவரும் மறுபிறப்பில் நம்பிக்கை கொண்டவர்கள். அந்த மறுபிறப்பு அவரவரின் கர்மபலனை ஒட்டியே அமைகிறது என்பது இந்து மத நம்பிக்கை.

**வியெஸ்ரி**

கர்ம பலனினின்றும் யாரும் தப்பித்துக் கொள்ள இயலாது. 'முற்பகலில் செய்யும் வினையின் விளைவு பிற்பகலில் வாய்த்தே தீரும்' — என கர்ம வினைக்கு ராமகிருஷ்ண பரமஹம்சர் விளக்கம் அருளியுள்ளார்.

மறுபிறவி என ஒன்று உண்டு என்பதாலும், கடந்த பிறவியில் செய்த கர்ம வினைகளின் பலனை இப்பிறவியில் அனுபவித்தே தீரவேண்டும் என்பதாலும், மனிதர்கள் இப்பிறவியிலாவது நல்லதைச் செய்து அடுத்த பிறவி சுகமானதாக அமைய வழி செய்து கொள்ள வேண்டும் என்பதே இந்து மத தத்துவ விளக்கமாகும்.

இந்த வகையில் அமைவனவே இந்துப் பண்டிகைகளாகும். இந்துப் பண்டிகைகள் அனைத்தும் அர்த்தத்துடன் உருவாக்கப்பட்டவை; அதனை உணரத் தவறும்போது அவை வெறும் சடங்குகளாகி மாறிவிடுகின்றன.

### சமூகப் பார்வை நிறைந்த பண்டிகைகள்


இந்துக்களால் கொண்டாடப்படும் ஆலயத் திருவிழாக்கள் ஆனாலும் சரி, இல்லங்களில் கொண்டாடப்படும் பண்டிகைகள் ஆனாலும் சரி அவற்றில் ஆத்மீக உணர்வுகளுக்கு மேலாக ஒரு சமூகப் பார்வையும் காணப்படுவதை உணரமுடியும்.

இந்து மதம் இறுக்கமான கோட்பாடுகளின் மீது உருவான மதமல்ல. அது சமுதாய பரிணாம வளர்ச்சியோடு வளர்ந்து வருமொரு மதமாகும்.

சமுதாயப் பொறுப்புணர்ச்சியை மையமாகக் கொண்டே ஓர் இந்துவின் வாழ்க்கை உருவாக்கப்படுகிறது. இந்து ஆலய வழிபாட்டு முறைகளும் சரி, இந்து மத நெறிகளும் சரி, மனிதர்கள் அனைவரையும் எந்த வித வேறுபாடுகளுமின்றி உயர்த்துகின்ற நோக்கம் கொண்டவையாகவே அமைந்துள்ளன.

தமிழர்தம் நாகரிகம் திருக்கோயிலை மையமாகக் கொண்டு அமையினும், விரதங்களாகவன்றி இறைவழிபாட்டுடன் கூடிய பண்பாட்டு — வெளிப்பாடுகளாய் அமையும் பண்டிகைகள் தமிழ் மக்களால் நீள் நெடுங்காலமாய் கடைக்கொள்ளப்பட்டு வருபவை. புதுவருடப்பிறப்பு, ஆடிப்பிறப்பு

( 21 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு...

( 19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீபாவளி, கார்த்திகைத் தீபம் என்பவை இந்த வகையில் அடங்கும் பண்டிகைகளாகும். இவற்றுள் இந்நாட்டுத் தமிழ் மக்களால் பக்தி சிரத்தையுடனும், அதேவேளை சமுதாய ஒன்றிணைவு, பரஸ்பர சிநேகபான்மை ஆகிய பண்புகளைக் கட்டிக்காத்துப் பேணும் வகையிலும் அமைந்த முக்கிய இந்துப் பண்டிகையே புத்தாண்டுப் பண்டிகையாகும்.

இந்துக்கள் இப்புதுவருட தினத்தன்று மருத்துநீர் வைத்துத் தோய்ந்து புத்தாடை அணிவதும், ஆலய தரிசனம் மற்றும் பெரியோரைப் பணிந்து கௌரவிக்கும் வகையிலமையும் கைவிசேஷம் வழங்குதல், பெறுதல் என்பனவும் ஆண்டாண்டு காலமாகத் தொடர்ந்து கடைக்கொள்ளப்பட்டுவரும் வழக்கங்களாகும். இன்றும், நம்மில் அநேகர் அந் நடைமுறைகளை உரிய வகையில் பயபக்தியோடு கடைப்பிடித்து வருகின்றனர்.

அறுபது ஆண்டுகள் மாறிமாறிவரும் காலக் கணிப்பீட்டு முறையிலமைந்த தமிழ் ஆண்டுகளின் பெயர்ப்பட்டியல் காலத்தால் மிகத் தொன்மை வாய்ந்தது.

24 மணித்தியாலங்களைக் கொண்டது ஒரு நாளாகும் என்ற அடிப்படை விதியைக் கொண்டு உருவான காலக் கணிப்பீட்டின் அடிப்படையில் நாள், வாரம், மாதம் என்பன பரிணமித்து ஈற்றில் பூரணமான ஓராண்டாக மலர்கிறது. அந்த வகையில் தாரண வருடம் நேற்றுடன் முடிவடைந்து இன்று பார்த்திப ஆண்டு புதிய ஆண்டாக மலர்கின்றது.

ஆரம்பத்தில் மத நம்பிக்கைக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதத்தில் இந்துக்களால் கொண்டாடப்பட்டு வந்த இப்புத்தாண்டுக் கொண்டாட்டம் காலப்போக்கில் அவர் தம் கலாசார விழுமியங்களை நினைவு கூரவும், பாரம்பரிய கலாசார வெளிப்பாடுகளை அரங்கேற்றவும் வாய்ப்பளிக்கும் முக்கிய கொண்டாட்டமாக மாற்றமுற்றதென்னமோ கால ஓட்டத்தின் செயற்பாடாகும். அந்த வகையில் தத்தமது சமூகரீதியில் மற்றும் பிரதேச ரீதியில் பொதுமக்கள் ஒன்றுகூடி தத்தமது கலை, இலக்கிய வெளிப்பாடுகளை வெளிக்கொணரும் ஒரு சந்தர்ப்பமாக இந்நாட்களில் புத்தாண்டுக்கொண்டாட்டம் மாற்றம் கண்டுள்ளது.

நமது நாட்டின் பெரும்பான்மை இனத்தவரில் பௌத்த மதத்தைப் பின்பற்றுவோர் மத அடிப்படையில் பெரும்பான்மையினராவர். பௌத்த மதத்தினரும் தமது புத்தாண்டாக சித்திரை மாதத்து முதலாம் நாளையே கொண்டாடி வருவது சகலரும் அறிந்த தொன்றே. அந்த வகையில் அண்மைய சில தசாப்த காலமாக இப்புத்தாண்டை இந்நாட்டின் இருபெரும் மதப்பிரிவினரான இந்துக்களும் பௌத்தர்களும் ஒன்றுசேரக் கொண்டாடிவரும் வழக்கத்தால் இது ஒரு தேசியக் கொண்டாட்டம் என்ற விதத்தில் கருதப்பட்டு வருகின்றது. மத ரீதியிலமைந்த இப்புத்தாண்டுக் கொண்டாட்டம் காலப்போக்கில் இனங்களுக்கிடையே ஒற்றுமையையும் அன்னியோன்யத்தையும் உருவாக்குவதற்கான முயற்சி என்ற வகையில் அரசியல் வாதிகளால் திசைமாற்றப் பட்டுள்ளது.

ஆயினும், இவ்விரு இனத்தவரும் புத்தாண்டை ஒன்றுசேரக் கொண்டாடக் கிடைத்த வாய்பைப் பயன்படுத்தி தம்மிடையேயான சந்தேகங்களையும் அவநம்பிக்கைகளையும் களைய சந்தர்ப்பம் வாய்த்துள்ளபோதிலும் செயலளவிலோ, சிந்தனையிலோ இம் முயற்சி பயனளிப்பதாக அமையவில்லை.

இருந்தபோதிலும் இப்புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் இவ்விரு மதப்பிரிவினரும் தத்தமது இனத்தின் கலாசார பாரம்பரியங்களுக்கமைந்த விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலாசார நிகழ்வுகளை ஏற்பாடு செய்து கொண்டாடி மகிழ்கின்றனர்.

மேற்குலக நாடுகளில் முற்றுமுழுதாக கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுவோர் வாழ்வதாலும், உலகின் ஏனைய பெரும்பாலான நாடுகளில் கணிசமான அளவு கிறிஸ்தவ மதத்தினர் வாழ்வதாலும் கிறிஸ்துநாதரின் பிறப்பை மையமாகக் கொண்டு கணிக்கப்படும் ஆங்கிலப் புத்தாண்டே இன்று உலகில் முக்கியத்துவம் மிக்க கால நடைமுறையாகக் கணிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்துக்கள் ஆண்டாண்டு காலமாக தம் வழக்கிலிருந்து வரும் இன, மத ரீதியான புத்தாண்டைக் கொண்டாடி வருகின்றனர்.

''பழையன கழிதலும் புதியன புகுதலும்'' என்பதற்கிணங்க இந்துக்கள் தத்தமது மதக்கோட்பாடுகளுக்கமைந்த, தனித்துவமும், பாரம்பரியமும் மிக்க பழக்க வழக்கங்

( 22 ஆம் பக்கம் பார்க்க)




அனைவரின் பசியையும் போக்கும்...



அனைவரின் பாரம்பரியங்களையும் பாதுகாக்கும்...



அனைவருக்கும் நீரினை வழங்கும்...



அனைவரின் ஆசைகளையும் நிறைவேற்றும்...

...இனிய புத்தாண்டை வரவேற்போம்!

S-lon

என்றும் முன்னணியில்

S-lon இல்லம்

Rediffusion DYR 73/04/05


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனப் பாரத்துடன் பிறக்கும் பார்த்திப ஆண்டு மக்களுக்கு மனோ தைரியத்தைத் தரவேண்டும்

தாரணவருடம் தரணியில் தாங்கொணா வேதனைகளையும் சோதனைகளையும் விட்டுச்சென்றுள்ளது. நொடிப்பொழுதில் 30 ஆயிரம் பேரை இழந்ததும் அத்தாரண வருடத்தில் தான். பல கோடி ரூபா சேதங்கள் விளைந்ததும் அவ்வருடத்தில்தான். அதனால் லட்சக் கணக்கானோர் முகாம்களில் ஏதிலிகளாகக் காலங் கடத்துகின்றனர். இன்னும் நிரந்தரம் என்று சொல்வதற்கு ஒரு வீடுதானும் இல்லாத நிலையில் நடைப்பிணமாக அலைகின்றனர் அவர்கள்.

இந்நிலையில், புதிய வருடமாம் பார்த்திப வருடம் உலகில் ஜனனித்துள்ளது. இதன் முன் ஏகப்பட்ட எதிர்பார்ப்புகள் நிறைந்துள்ளன. பாரம் அதிகம். இப்பாரத்தை இப்பார்த்திப வருடம் எப்படி முன்கொண்டு செல்லும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

100மீற்றர், 200மீற்றர் கடலோரப் பாதுகாப்பு வலயத்தினுள் (Buffer Zone) உள்ள மக்களுக்கான நிரந்தரமான வீடுகள் 500 சதுர அடிப்பரப்பில் அமைத்துக்கொடுக்கப்படும் என்று அரசு கூறியுள்ளது. கூறி 3 மாதம் கடந்தும் ஒரு வீடுதானும் எழுப்பப்படவில்லையென்பது ஏதிலிகளின் ஏக்கமாகும்.

அதாவது, இடைத்தங்கல் முகாம்களே (Transit Camps) நிரந்தர அமைவிடமாகப் போகின்றன. குறைந்தது இருவருடகாலம் செல்லும் இந்நிலை மாற.

எனவே, பிறந்திருக்கின்ற பார்த்திப வருடத்தில் பாதுகாப்பு வலயத்துள் வாழ்ந்த அனைவருக்கும் நிரந்தர இல்லிடம் அமையுமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இதைவிட, அதற்கு அப்பால் வீடு வாசல் இழந்தவர்களுக்கு வழங்கப்படும் என்று கூறிய வீடமைப்பு நிவாரண நிதி புத்தாண்டு பிறந் தும் வழங்கப்பட்டு முடியவில்லையென்பது வேதனைக்குரியது.

வங்கிகளால் வழங்கப்பட வேண்டிய இந்நன்கொடை தொடர்பான நடைமுறை விதிகள் நாளுக்கு நாள் மாறுபாடடைவதே தாமதத்திற்குக் காரணமெனக் கூறப்படுகின்றது.



பிரதேச செயலர் மட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தொழில்நுட்ப அதிகாரி, அப்பகுதி கிராமசேவை உத்தியோகத்தர் உள்ளிட்ட பலர் உள்ளனர். அக்குழு சேதமதிப்பீட்டை மதிப்பிட்டு அப்பகுதியின் பொது இடங்களில் பெயர் விவரங்களை வெளியிடும். ஆட்சேபிப்பவர்கள் மனு முறைப்பாடு செய்யலாம்.

அதன் பின்பு கொடுப்பனவிற்குப் பிரதேச செயலர் சிபார்சு செய்வார். வங்கி அவர்களுக்கு அதனை வழங்கும். இந்நடை முறை ஏலவே கூறப்பட்டது. அதனிடையே, வங்கிகளூடாகப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு தொகைமதிப்பீடு புள்ளி விவரத் திணைக்களத்தின் சேதமதிப்பீட்டு விவரப் பட்டியலுடன் ஒப்புநோக்கி பிரஸ்தாப கொடுப்பனவை வழங்குமாறும் உத்தரவு ஒன்று வந்துள்ளதாம்.

கொடுப்பனவை அரசியலாக்க பிரதேச ரீதியாக அரசியல்வாதிகளும் பிரித்தொதுக்கப்பட்டனர். அதன்படி, அமைச்சர் அதாவுல்லா முந்திக்கொண்டு அக்கரைப்பற்றில் முதற்கட்டக் கொடுப்பனவை வழங்கி அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

அவரது ஆளுமை, ஏனைய பிரதேசங்களுக்கு ஒதுக்கப்பட்ட அரசியல்வாதிகளுக்கு வரவில்லை என்பதற்கு அப்பால் அந்த மக்களுக்குப் பிரஸ்தாப கொடுப்பனவு இவ்வருடம் பிறக்கும் வரை வழங்கப்படவில்லை.

இக்கொடுப்பனவு பகுதிபகுதியாக வழங்கப்படும். முதற்கட்டக் கொடுப்பனவில் ஒருபகுதி வீடமைப்புப் பணியைச் செய்துகாட்டினால் அடுத்த கட்டப் பணிக்கு அடுத்த கொடுப்பனவு வழங்கப்படும்.

இங்கு பிரச்சினை என்னவென்றால் கடற்கரையிலிருந்து 300 மீற்றர் தூரம் வரையிலான பிரதேசம் கடலோரப் பாதுகாப்புச் சட்டத்திற்கு( Coastal Construction Aef) உரியவை. கடற்கரையிலிருந்து ஒரு மைல் தூரப் பரப்பு (UDA) என அழைக்கப்படும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் வருபவை.

இந்த இருதரப்பினரதும் அனுமதி (Permisson) இல்லாமல் அப்பகுதிக்குள் எந்தக் கட்டுமான வேலைகளோ புனருத்தாரண வேலைகளோ செய்யமுடியாது என்பது சட்டமாகும்.

இந்நிலையில், அனுமதி பெற்று முதற்கட்டத் திருத்த வேலைசெய்ய எத்தனை மாதங்கள் எடுக்கும்? என்பது ஒருபுறம். மறுபுறம் இந்த 50 ஆயிரம் ரூபா எதற்குக் காணும்? மொத்த 2½ லட்சரூபாகூடப் போதாது எனக் கூறப்படுகிறது. குறைந்தது 5 லட்சம் ரூபா வீடமைப்பதற்கு வழங்கப்பட வேண்டுமென மக்கள் கேட்கின்றனர். எனவே, இந்த வீடமைப்பு நிதி பெரும்பாலும் முதலாம் கட்டத்தோடு நின்றுவிடும் சாத்தியம் நிலவுகிறது. பார்த்திப வருடத்தில் பாதிவேலையைக் கூடப் பூர்த்திசெய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலையே தோன்றுமெனலாம்.

சரி, 200 மீற்றருக்கு அப்பாலும் மக்கள் செல்ல தற்போது அஞ்சுவதாகத் தெரிகிறது. ஏனெனில், அண்மைக் காலமாக சுனாமிப் பீதி கூடிவருகின்றது. 100 மீற்றரே வேண்டாம் எனக் கூறும் அதே மக்கள் 300 ஆவது மீற்றருக்குள் சென்று குடியேறத் தயங்குவதை எப்படி, எந்தவகையில் பார்ப்பது என்பது தெரியாத புதிராகவுள்ளது.

அரசின் அடுத்த கட்ட 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு கூட நிறுத்தப்படும் அபாயமிருப்பதாகச் செய்திகள் வெளிவந்தும் சம்பந்தப்பட்டவர்கள் அச்செய்தியை மறுக்கவில்லை. இது எதனை உணர்த்துகின்றது?

அடுத்து, அழிந்த 281 பாடசாலைகளை மீளப் புதிய இடத்தில் நிர்மாணிப்பது தொடர்பில் காட்டப்படும் நியாயமான நடைமுறைத் தாமதங்கள் கல்வியில் பாரிய வீழ்க்காட்டைத் தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை. பார்த்திப வருடம் இதற்குப் போதாது.

**வி.ரி.சகாதேவராஜா**

வைத்தியசாலைகள், ஆலயங்கள், பொது ஸ்தாபனங்கள், மீள்புனருத்தாரணம் செய்வதும் அவசியமாகிறது. அனைத்தும் ஆமை வேகத்தில் நகர்வதாகக் கூறப்படுகிறது. அரசியலும் நிர்வாகமும் சீராகச் செல்ல வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது.

அரசியலாளர்கள் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி ஊடகங்களில் ஊடாடுவதை விடுத்து, மக்களை, தேசத்தைக் கட்டியெழுப்ப பொதுவேலைத்திட்டத்தின் அடிப்படையில் செயற்படவேண்டும்.

தாரணவருடம் விட்டுச்சென்ற தாங்கொணாத பாரத்தைத் தனியே சுமக்கப் பார்த்திப வருடம் போதாது. சிலவேளை பார்த்திய வருடமும் இன்னும் பல பாரங்களை மேலும் சுமக்க வேண்டி நேரிடலாம்.

பூகம்ப வலயத்துள் இலங்கைத் தீவு ஈர்க்கப்பட்டிருப்பதால் இயற்கை அனர்த்தத்திற்குக் குறைவிருக்காது எனக் கூறப்படுகின்றது.

எனவே, பிறந்த பார்த்திப வருடம் பாரத்தைக் குறைக்காவிட்டாலும் மக்களிடையே எதிர்காலம் பற்றிய மனோநம்பிக்கையை ஊட்டக் கூடிய தைரியத்தை வழங்கவேண்டும் என்பதே எம்மவரின் எதிர்பார்ப்பு ஆகும். ★

## முன்னோர் வழி நடப்போம்

"பார்த்திப" எனும் பெயருடைய புதிய வருடம் உதயமாகியுள்ளது. பிரபவ முதல் அக்ஷய வரையுள்ள அறுபது சுற்றுவட்டத்தில் இது பத்தொன்பதாவது வருடமாகும்.

தமக்கென சிறப்பான பாரம்பரியங்களைக் கொண்ட சைவத்தமிழ் மக்கள் சித்திரைப் புத்தாண்டை வருடம் தோறும் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்கின்றனர். புத்தாண்டு பிறக்கும் நேரத்தில் இறை வழிபாடாற்றலும் தான, தர்மம் புரிதலும் பெற்றோர், குரு, பெரியோரை வணங்கி ஆசிபெறுதலும் சுபநேரத்தில் கருமங்களை ஆற்றுவதும் இன்சுவை பண்டங்களைப் பரிமாறிகொள்வதும் காலங்காலமாகக் கைக்கொள்ளப்பட்டு வருகின்ற வழக்கங்களாகும். இவை எமது உறவுகளை மேம்பாடடையச் செய்வதுடன், சமூக ஒற்றுமையையும் நல்லொழுக்கத்தையும் ஏற்படுத்துகின்றன. முன்னோர் வகுத்த வழியில் நாம் நடப்போம். எமது மன எண்ணங்களும் சிந்தனைகளும் உயர் வானவையாக இருக்கும்வரை எமக்குத் துன்பமில்லை.

உதயமாகியுள்ள இப்புத்தாண்டு அனைவருக்கும் அமைதியையும் மகிழ்ச்சியையும் சுபீட்சத்தையும் வழங்கவேண்டுமென ஸ்ரீதேவி, பூமிதேவி சமேத வேங்கடேச வரதராஜப் பெருமாளைப் பிரார்த்தித்து எமது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றோம்.

*இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.*

**ஸ்ரீவத்ஸ வ.இராஜேஸ்வரக் குருக்கள்**
பிரதமகுரு,
ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்,
வண்ணை - யாழ்ப்பாணம்.

## தொண்டுக்கு முதன்மை கொடுப்போம்



அன்பர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக் கூறுவதில் ஆனந்தமடைகிறேன். இன்று பிறக்கும் பார்த்திப வருடம் அனைத்து மக்கள் வாழ்விலும் ஆறுதலையும் அமைதியையும் தரவேண்டுமென இறைஞ்சுகிறேன். இப்புதிய ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் நாம், இறைவழிபாட்டிற்கும் இனிய தொண்டுகளிற்கும் முதன்மை கொடுத்துச் செயற்படுவோமென அனைவரும் உறுதிகொள்ளுங்கள். எமது நாட்டில் மக்கள் அனைவரும் அச்சமின்றி, நிறைவாக வாழ இவ்வாண்டில் நிரந்தர சமாதானம் உருவாக வேண்டுமெனப் பிரார்த்தனை செய்வோம். இயற்கை அன்னையின் ஆசியும் அரவணைப்பும் என்றும் எமக்குண்டு. இயற்கை எம்மோடு பகைத்துக்கொள்ளாமல் இருப்பதற்கு நல்ல அறங்களை நாளும் பொழுதும் நாம் ஆற்ற முற்பட வேண்டும். இளைய சமுதாயம் ஆத்மீகத்திலும் அறிவியல் சார்ந்த விடயங்களிலும் அறப் பணிகளிலும் முன்னின்று உழைக்கவேண்டும். புதிய ஆண்டிலே புதிய சிந்தனைகளோடு அனைவரும் புத்தெழுச்சி பெற்று சீரோடும் சிறப்போடும் வாழ எல்லாம் வல்ல அன்னை ஈஸ்வரியைப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

சிவத்தமிழ் செல்வி, கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர்,
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## உறுதி தழைத்திட உழைப்போம்

இனிய புத்தாண்டை இன்முகத்துடன் வரவேற்போம். கடந்த ஆண்டில் நாம் சாதித்த சாதனைகளை நினைந்து பெருமைகொள்வோம். கடந்த ஆண்டில் நாம் விட்ட தவறுகளை நினைந்து புதிய ஆண்டில் அந்தத் தவறுகள் தொடராது நல்வழி நோக்கிச் செல்ல முயல் வோம். இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட அச்சத்தை மறப்போம். இயற்கை அன்னையே இடரின்றி நாம் வாழ இனிய அருள் தா' எனப் பிரார்த்தனை செய்வோம். புதிய ஆண்டு பிறக்கும் வேளையில் உண்ண உணவும் உடுக்க உடையும் உறங்குவதற்கு இருப்பிட மும் உறவாட நல்ல உறவினரும் தந்த இறை வனுக்கு நன்றி சொல்லி வணங்குவோம். போரின் அனர்த்தங்களினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் இடம் பெயர்ந்து அல்ல லுறும் மக்கள் தம் இருப்பிடங்களுக்குச் சென்று நிம்மதியாக, நிரந்தரமாக வாழ அனைவரும் பிரார்த்தனை செய்வோம்.



புதிய ஆண்டில் ஒவ்வொரு மனிதனும் ஆக்கபூர்வமான திட்டங்களை அகத்திலே இருத்தி அவற்றை நிறைவாக்க முன்வர வேண்டும். உலகளாவிய ரீதியில் ஈழத்தமிழர்கள் 'இன்று உன்னத நிலைபெற்று வருகின்றனர். ஈழத்தமிழரிடையே ஒற்றுமை உறுதி, தழைத்தோங்கிட நாம் அனைவரும் உழைத்திட வேண்டும்.

"*உள்ளுவது எல்லாம் உயர்வு ள்ளல் மற்று அது தள்ளினும் தள்ளாமை நீர்த்து*" என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கமைய உயர்ந்த எண்ணங்களோடு புதிய ஆண்டை அனைவரும் வரவேற்போம். அனைவர் வாழ்விலும் இன்பம் சூழ அன்புடன் வாழ்த்துவோம்.

**ஆறு.திருமுருகன்.**

## எல்லோரும் இன்புற பணியாற்றுவோம்

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" வருட நியதியாகும். சென்ற தாரண வருடத்திலே சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினால் பாதிப்படைந்த மக்களிற்காகவும், மதப்பெரியார்களிற்காகவும் பிரார்த்தனை செய்து பார்த்திப என்ற பகவான் நாமத்துடன் பிறக்கின்ற புதுவருடத்தினை நாம் வரவேற்போம். எல்லோரும் மிகவும் அமைதியான முறை யிலே இறைவனைப் பிரார்த்தனை செய்வோம். நற்காரியங்கள் பல நடக்க பெரியோர்களை வணங்குவோம். நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவி எல்லோரும் இன்புற்றிருக்க பணியாற்றுவோமாக!

அனைத்து மக்களுக்கும் எமது நல்லாசிகள்.

**பரமேஸ்வர மனோகர சிவாச்சாரியார்**
தலைவர்,
(சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்)

## கொடுமைகள்

அடி பிடி தடியொடு
கெடுபிடி மிகைபட
குடி வெறி கொடுமையால்
கெடுதிகள் விளைந்திட
வடிவினர் அணி நகை
வழிபறித்திடர்பட
கடிதினில் இளைஞர்கள்
காடையர் ஆகிட
விடியுமுன் பல கடை
வீணர்கள் உடைத்திட
துடித்திடபல உயிர்
சுனாமியும் பறித்திட
முடிந்தது மறைந்தது
முழுமையாய் ஆண்டொன்று
விழுந்ததும் புலர்ந்தது
வியத்தகு பார்த்திப ஆண்டது
முடிந்திடக் கொடுமைகள்
முகிழ்ந்திடப் புதுயுகம்

– விகடகவி

## சாயி சிந்தனை

### உண்மையான அன்பு



இறைவன் குணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர். அதனால் அன்பிற்கும் குணங்கள் எதுவும் கிடையாது. ஆனால், இந்நாளில் துரதிர்ஷ்டவசமாக அன்பைச் சில குணங்களுடன் இணைத்துப் பார்ப்பதால், பந்தங்களுக்கும் வெறுப்புக்கும் இடம் ஏற்படுகிறது. நாம் எவரிடமும் பிரதிபலன் கருதி அன்பு செலுத்தக் கூடாது. பயனை எதிர்நோக்கி அன்பு காட்டுவது என்பது ஒரு வியாபாரத்தைப் போன்றது. அன்புக்கு, வியாபாரத்துடன் எந்தச் சம்பந்தமும் கிடையாது. அன்பு என்பது கொடுப்பது, வாங்குவது என்றெல்லாம் இணைத்துப் பார்ப்பது அல்ல. எதிர்பாராது சரணாகதியாவது தான் அன்பு.

இத்தகைய புனிதமான அன்பைப்பெற வேண்டுமானால், உங்கள் எண்ணங்கள் புனிதமானவைகளாக மாறவேண்டும்! திசையறிகருவியின் முள் எப்போதும் வடக்குத் திசையையே [illegible]ருப்பதைப்போல மனிதனுடைய அன்பு- அவன் எந்த நிலையில் இருந்தாலும் - கடவுளை நோக்கித் திருப்பப்பட வேண்டும். அதுதான் உண்மையான அன்பு!

*- ஆதாரம் சனாதன சாரதி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட இடைவேளையின் பின்னர்

யாழ். மண்ணனில்

வண்டிச் சவாரி

புத்தாண்டைக் கொண்டாட
உங்கள்
சக்தி FM, சக்தி T.V. நடத்தும்

# மாட்டுவண்டிச் சவாரி

இம்மாதம் 17 ஆம் திகதி யாழ்ப்பாணம் நீர்வேலி சவாரித்திடலில் மாலை 2.00 மணிக்கு சவாரிக்குத் தயாராகுங்கள்.
இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் போட்டி தினத்தன்று போட்டி நடைபெறும் இடத்திற்கு வருகைதரவும். மேலதிக விவரங்களுக்கு:
இல.03, நவீன சந்தை மேல்புறம், யாழ்ப்பாணம்.

உத்தியோகபூர்வ நாளிதழ்:
உதயன்

(C/42307)(50-14)



# இன்று யாழ்ப்பாணத்தில் ஸப்தஸ்வரா

ஸப்த சுரங்களின் சங்கமம்

இன்று (14.04.2005)

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

மானிப்பாய் றோட்டறக்ட் கழகத்தின் ஆதரவில்
யாழ்.மாவட்டத்தில் வதியும் வசதிகள் குறைந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படும் "ஸப்தஸ்வரா" குழுவினரின்

## மாபெரும் இசைநிகழ்ச்சி



புதுவருட நாள் மாலை 3.00 மணிக்கு
நடைபெறவுள்ளது! ஆர்வலர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மானிப்பாய் றோட்டறக்ட்
கழகத்தினர். (C/42245)(53)

CELEBRATE ROTARY



## வீடு விற்பனைக்கு

M.S. லேன், கோண்டாவில் கிழக்கு (குமரகோட்ட வைரவர் கோயில் அருகில்), கோண்டாவிலில் சகல வசதியும் கொண்ட வீடு நான்கு பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு.
பார்வையிடும் நேரம்
காலை 8.30 - பிற்பகல் 2.30 மணி வரை.
தொடர்பு: 077 6118860.

(21-17-45) (44093)


## கண்ணீர் அஞ்சலி

எமது நலன்புரிக் கழக உறுப்பினர்
திரு.சு.ஜெயக்குமார் அவர்களது அன்புத் தகப்பனார்
**சுப்பிரமணியம் கதிரவேற்பிள்ளை** காலமானார்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரது துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக் கழகம்.
மாவட்ட செயலகம். யாழ்ப்பாணம்.

(42284)(21-17-45)

## அறிவித்தல்

**வடக்கு - கிழக்கு மாகாண சபை**
**மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு**

**வடக்கு – கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் கீழுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல் - 2005**

மேற்படி பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2005. 04. 15ஆம் திகதியிலிருந்து 2005. 04. 21ஆம் திகதி வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகிறேன்.

வே.பொ.பாலசிங்கம், செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு வடக்கு - கிழக்கு மாகாணம்.

(சி-42287)(21-17-45)


## திருமணக்கார் வாடகைக்கு

எம்மிடம் குளிரூட்டப்பட்ட திருமணக் கார் வாடகைக்கு உண்டு. வாராந்த வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு:
**சிவா வீடியோ லைபிறறி**
முடமாவடி,
திருநெல்வேலி.
T.P.: 222 7152

(44173)(42-16)


## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை




**அமரர் சந்தியா அருளப்பு** **திருமதி அருளப்பு கிளாரம்மா**

*இவர்களின் ஆத்ம சாந்திக்காக 15.04.2005 வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு (புதியநேரம்) யாழ்.அடைக்கல அன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.*

64/1, B ஸ்ரேஷன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (44068) (39-21-17-45)

- என் சிலி மகாராஜா
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் காசிப்பிள்ளை வைரமுத்து**
(Retired Chief Pharmacist,
யாழ்.போதனா வைத்தியசாலை)

மண்ணகம் 10.01.1942 — விண்ணகம் 27.03.2004

திதி: 14.04.2005

அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய்
பாசத்தின் இருப்பிடமாய், உற்றார். உறவினர் மற்றோர்
அனைவரையும் அன்புடன் அரவணைத்த எங்கள் அன்புத் தெய்வம்
அணையாத தீபமாய் ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
எம் அனைவர் மனதிலும் நின் புன்முறுவல் பூத்த முகத்துடன்
என்றும் அழியாது நிற்பது உறுதி.

84/1A மானிப்பாய் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

பாசமுடன்:
மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

(44200) (21-17-45-32)


அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் இன்றைய புத்தாண்டு தினத்தில் சித்திரத்தேரில் ஆரோகணிக்கும் வாரிவளவு கற்பக விநாயகர் அருளுடன் சிறப்புற்று வாழ வாழ்த்துகின்றோம்.

★ கட்டடப்பொருள்கள் ★ பெயின்ற் வகைகள்

போன்றவற்றை நிதான விலையில் ஓரிடமாகப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்:



# கஜமுகன் ஹாட்வெயர்ஸ்

PEPSI

(PEPSI, MIRINDA, 7UP போன்றவற்றின் ஏக விநியோகஸ்தர்கள்)
(CALTEX 2T) ஒயிலுக்கான யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்
147,149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No. 021 222 2833, 021 222 7144

(C\41800)(51)




ESP & CO 50 YEARS




அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் இன்று சித்திரைப்புத்தாண்டில் சித்திரத்தேரில் ஆரோகணித்து வரும் வாரிவளவு கற்பக விநாயகர் அருள்பெற்றுச் சிறப்புற்றுத் திகழ வாழ்த்துகின்றோம்.

★ புத்தம் புதிய சைக்கிள்கள் லுமாலா, கீறோ - வேண்டிய மொடல்களில் - பெரியோர் முதல் சிறியோருக்கும் ஏற்றவை - ★ T.V. டெக் வகைகள் ★ அவற்றின் உதிரிப்பாகங்கள் ★ றேடியோ வகைகள் ★ அன்ரனா வகைகள் அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் யாழ்.நகரில் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்


# இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
# E.S.P. And Co.

50,52,54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:021 222 2988,021 222 3096 FAX:021 222 2368

(C/42285)(50-45-36)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ்தரிப்பிடம் சேதம்

வலி.தென்மேற்கு,ஏப்.14

சண்டிலிப்பாய் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பிரதான வீதியில் கட்டுடையில் கடந்த பல வருடகாலமாக இருந்து வந்த பஸ்தரிப்பு நிலையம் கடந்த இருமாத காலமாக பலத்த சேதமடைந்து காணப்படுகிறது. (எ-135)

## கொடியேற்றம்

வலி.தென்மேற்கு,ஏப்.14

பெரியவிளான் வடசேரி விக்கினேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. (எ-135)


ராஜா யாழ்ப்பாணம்
சித்திரைப் புதுவருட வாழ்த்துகள்!
இன்று முதல் குதூகல ஆரம்பம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
கமலஹாசன், மனிஷா கொய்ராலா நாசர் நடித்த
மும்பை X பிரஸ் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(C41381)(29-16-17)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சித்திரைப் புதுவருட வாழ்த்துகள்!
சரத்குமார், நமிதா, வடிவேல் நடித்த ஏய் (ரீல்ஸ்)
கா.நேரம்: 11.00, 2.45, விசேட காட்சி 6.00, 9.00 (பு.நே)
தனுஷ், ஸ்ரீதேவி நடித்த தேவதையைக் கண்டேன்
(C41377)(29-16-17)

மனோகரா யாழ்ப்பாணம்
இன்றுமுதல் சித்திரைப் புதுவருட வாழ்த்துகள்
விஜய், ஹரினி, வடிவேல் நடித்த
சச்சின்
காட்சி நேரம்:
10.30 a.m., 2.30.p.m.,6.30p.m.,9.30 p.m
(C42204)

லக்ஷ்மி இணுவில்
சித்திரைப் புதுவருட வாழ்த்துகள்
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், விவேக் நடித்த
ஜூட் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00. 3.00, 7.00. (பு.நே.)
(C48864)(29-16-17)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
புதுவருட வெளியீடாக பல வருடங்களின் பின் சுப்பர் ஸ்டாரின் ஒரு புதிய படைப்பான
ரஜினி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசா நடித்த
காட்சிகள: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
விசேட காட்சிகள: 10.00, 1.00, (பு.நே.)
சந்திரமுகி (ரீல்ஸ்)
(C41380)(29-16-17)

விக்னா கல்வி நிறுவனம்
O/L DAY CLASS
பிரிவு - 3 9.00-2.30
ஆரம்பம்: 15.04.2005
★ பிரிவு 2இற்கான அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது.
★ பிரிவு 4 மிக விரைவில்.
இவ் வருடமும் பிரிவு 6 மட்டுமே.
(44117)(38-16-18)

கணக்கீடு
A/L 2007 புதிய பிரிவு
ஆரம்பம்: 16.04.2005 4 p.m.
A/L 2006 பங்குடமை
ஆரம்பம்: 16.04.2005 3 p.m.
A/L 2005 காசுப்பாய்ச்சல் கூற்று
ஆரம்பம்: 16.04.2005 5 p.m.
ஆசிரியர்: S.தவா
B.Com. (Hons) [Acc.spl.]
NEW SCIENCE COLLEGE JAFFNA.
(44182)(38-16-18)

IIS
கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
16-04-2005
18-04-2005 } பகல் 10.00 மணி
அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வார இறுதிப் பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன என்பதை அறியத்தருகிறோம்.
இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.
(சி-42180)(33-16-17-34)

எம்முடன் இணைவோர் உயர்கல்வி பெறுவர்
விக்னா கல்வி நிறுவனம்
பிரிவு 2
2007
கலை, வர்த்தகப் பிரிவு
கலைப் பிரிவு 8.30 மணி
வர்த்தகப் பிரிவு 10.30 மணி
ஆரம்பம்: 16-04-2005 (சனி)
★ பிரிவு 1 இற்கான அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு நல்வாழ்த்துகள்!
நவீன டிசைன்களிலான அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம்
துயா நகைப்பூங்கா
213C, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 5846
(சி.42298)(42-16-11-38)

நாதன்ஸ் சினிமா ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
குளிரூட்டப்பட்டது.
இரண்டாவது வெற்றிவாரம்.
தாவடிமைந்தன் ஜெய்ஆகாஷ், பிரணதி, நாசர், தாமு, வையாபுரி நடித்த
குருதேவா (ரீல்ஸ்)
காதல் பாதி மோதல் பாதி
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(C41186)(22-11-45)

பார்த்திப வருடத்தின் இராசிகளுக்குரிய பலன்கள் நாளைய உதயனில் வெளிவரும்

D.C.M.
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்தி - இந்து குருகுலம் முன்பாக)
A/L - 2007 பிரிவு 02
கலை, வர்த்தகம்
ஆரம்பம் :16 ஏப்ரல் 2005 – சனி
கலை – காலை 7.00 மணி
வர்த்தகம் – காலை 11.00 மணி
பொருளியல் – வரதராஜன்
கணக்கீடு – பாலவாசன்
வணிகக்கல்வி – உமாகாந்த்
தமிழ் – தமிழீந்திரன்
இந்துநாகரீகம் – ஸ்ரீஸ்
அளவையியல் – சுதன்
புவியியல் – குமரன்
ஆங்கிலம் – நிஷாந்தன்
குறிப்பு : 01. சகல பாடங்களும் ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்.
02. பிரிவு 01 ற்கு மேலதிக அனுமதி வழங்கப்பட மாட்டாது.
D.C.M. இயக்குநர் S. வரதராஜன்

பிரத்தியேக வகுப்புகள்
புவியியல்
A/L 2007
N.S. சங்கர்
B.A.(Hons)Geog.
ஆரம்பம்:
15-04-2005 வெள்ளி 2.00 P.M..
மயிலணி - சிவன்கோயில் முன், சுன்னாகம்.
குறிப்பு: அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.
(44207)(11-38-16)

நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்
O/L DAY CLASS
ஆரம்பம்:
15-04-2005
வெள்ளி.
8 மணி
(49163)

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்


| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 671 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 12-4-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4413500 - 4428865 |


லக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள்
02 12 29 36
ஜக்பொட் பரிசு
ரூபா.40,91,250/-
வெல்லப்படவில்லை
இந்த வெல்லப்பட்டுள்ளது
ரூபா. 10,00,000/-


| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,38,342 | 10/- | 33,83,420/- |
| 2.இலக்கங்கள் | 31,120 | 20/- | 6,22,400/- |
| 1.இல + லக்கினம் | 30,974 | 30/- | 9,29,220/- |
| 2.இல + லக்கினம் | 2,833 | 100/- | 2,83,300/- |
| 3.இலக்கங்கள் | 811 | 500/- | 4,05,500/- |
| 3.இல + லக்கினம் | 81 | 5,000/- | 4,05,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இலக்கங்கள் | 01 | 40,90,250/- | 40,90,250/- |
| மொத்தம் | 4,04,170 | - | 1,471,340/- |


மொத்த பரிசுத் தொகை ரூபா. 1,14,71,340/-
தொடர் இல. 4428866 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2005 ஏப்ரல் 19 ஆம் திகதி வெல்லப்பட்டுள்ளது செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்
வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்
4414343-4-68
4416310-7-49
4424805-6-37
4422112-4-23
4424526-7-44

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துகள்.


NORTH EAST TECHNOLOGIES (PVT)LTD
NO.34, SADDANATHAR ROAD,
NALLUR, JAFFNA.
T.P.: 021-2223786 & 0777-70849
(சி-42295)(11-38-16)

MATHS CENTRE
M.M.V. Road - Nelliady
புதுவருட நாள் நேர வகுப்புகள்
Gr. 4, 5, 6, 7, 8 , 9, 10, 11, 12
15-04-2005 வெள்ளி
7.45 a.m. (ப.நே.)
A/L - 2006, 2007
(பழைய, புதிய)
ஆரம்பம்:
15-04-2005
வெள்ளி 12.10 pm. (ப.நே.)
(சி-42308)(11-38-16)

IIS இன் இதயங்கனிந்த புதுவருட வாழ்த்துகள்
மாணவர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள், ஏனைய அனைவருக்கும் எமது இதயங்கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதில் IIS நிறுவனம் பெருமகிழ்ச்சி அடைகின்றது.
இப்புத்தாண்டு; அனைவருக்கும் ஓர் ஒளிமயமான ஆண்டாக அமையவேண்டும் என எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
இயக்குநர், முகாமையாளர்கள்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
IIS Group
யாழ்ப்பாணம். (சி.42312)(35-16-18-38)


# மரண அறிவித்தல்

## திருமதி பராசக்தி வேலுப்பிள்ளை



நெடுந்தீவு கிழக்கு, 12ஆம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும் 61, மருதடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி வேலுப்பிள்ளை அவர்கள் 13-04-2005 புதன் கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதர் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியினரின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (ஸ்தாபக அதிபர், யா/நெடுந்தீவு ஸ்ரீஸ்கந்தா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற இசை ஆசிரியர்), ராஜலிங்கம் (கணனிப் பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கனகசபை, குமாரசாமி, முருகேசு கந்தையா மற்றும் சபாபதிப்பிள்ளை (நெடுந்தீவு), சோமசுந்தரம் (ஸ்கந்தபுரம்), கார்த்திகேசு (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரஸ்வதி (ஓய்வுபெற்ற தாதி உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை), சிவஜோதி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் பாமினி (லண்டன்), குமுதினி (லண்டன்), தமிழ்மாறன் (லண்டன்), பன்னீர்ச்செல்வன் (ஆசிரியர், யா/மண்கும்பான் அ.த.க.பாடசாலை, வேலணை), சாந்தினி (லண்டன்), செல்வா (லண்டன்), கரன் (லண்டன்), நீனா (லண்டன்), பிறவின் (லண்டன்), கிருஷ்ணா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், அபிரா (லண்டன்), மயூரா (லண்டன்), மதி[illegible] (லண்டன்), அஸ்விினி (லண்டன), கபீன் (லண்டன்), கலைவாணன் (லண்டன்), லினோஷ் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, செம்மணி இந்துமயானத்துக்குப் பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
வே.சுந்தரலிங்கம (மகன்),
சு.பன்னீர்ச்செல்வம் (பேரன் - (ஆசிரியர் யா/மண்கும்பான் அ. த. க. பாடசாலை).

61, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

(44216)(26-11-16-38)


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், வர்த்தகப் பெருமக்கள்
அனைவருக்கும் எமது சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துகள் !
★ கால் நூற்றாண்டுகளுக்கு மேலான கடல் - தரை மார்க்க பொதி போக்குவரத்துச் சேவையாளர்களும்,
★ கோழி, விலங்கினங்களின் தரம்வாய்ந்த உணவு விநியோகஸ்தர்களான பிறீமா ஸ்தாபனத்தாரின் வடமாகாண முகவர்களுமாகிய,
பிரகாஸ் போக்குவரத்துச்சேவை
(கொழும்பு - கிளிநொச்சி - யாழ்ப்பாணம்)
455, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்,
T.P: 222 2145 - FAX 222 2958
இல. 221, டாம் வீதி, கொழும்பு -12.
T.P: 011 2543310
- 011 2543309


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கட்சியின் எம்.பிக்கள் பலர் விரைவில் அரசுபக்கம் தாவுவர்?

## புத்தாண்டின் பின்னர் நடக்கும்

கொழும்பு, ஏப்.14

தமிழ் - சிங்கள புதுவருடத்தின் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்றப்பலம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள அதிருப்தியாளர்களான எம்.பிக்கள் சிலர் ஆளும் தரப்புக்குத் தாவுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதுதொடர்பான இரகசியப் பேச்சுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

எதிர்க்கட்சியிலிருந்து எம்.பிக்கள் அரச பக்கம் வந்ததும் அமைச்சரவையை மறுசீரமைப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கட்சி தாவுவது தொடர்பாக தற்போது நடந்து வரும் பேச்சுகள் வெற்றியளிக்கும் பட்சத்தில், சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் - அதாவது இந்த மாத இறுதிக்குள் - இந்த உறுப்பினர்கள் ஆளுங்கட்சியில் இணைவதற்கும் அதற்கு வெகுமதியாக கட்சி தாவுபவர்களுக்கு பெருந்தொகை ஒன்றை வழங்குவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது.

ஏற்கனவே, சித்திரைப் புதுவருடத்திற்குப் பின்னர் அமைச்சரவை மறுசீரமைப்பொன்றை மேற்கொள்ள ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தீர்மானித்திருந்தார். ஐ.தே.க. முக்கியஸ்தர்களின் வருகையை அடுத்து இந்த அமைச்சரவை மறுசீரமைப்பை மேற்கொள்ள ஜனாதிபதி இப்போது தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அனைத்து உறுப்பினர்களையும் ஆளுங்கட்சிக்கு வருமாறு கோரி, இ.தொ.கா. தலைவருடன் ஜனாதிபதி இரகசியப்பேச்சுக்களை நடத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளுங்கட்சியில் இணையவுள்ளமை குறித்து நேற்று உதயனுக்கு கருத்துத் தெரிவித்த தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர் டி.எம். ஜயரட்ண 'இந்தவிடயம் தொடர்பான பேச்சுக்களில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது' எனக் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவது தொடர்பாகச் சில சட்டச்சிக்கல்கள் இருக்கின்றன எனக் குறிப்பிட்ட அமைச்சர், அவை தீர்க்கப்பட்ட பின்னர் எதிர்க்கட்சியிலுள்ள பலர் ஆளுங்கட்சிக்கு வருவார்களென்றும் கூறினார்.

இந்த விவகாரம் தொடர்பாக ஐ.தே.க. அதிருப்தியாளர்கள் பலருடன் தாம் பேச்சுக்களை நடத்தியிருக்கின்றார் எனக்கூறிய அமைச்சர், அவர்களின் பெயர் விவரங்களை வெளியிட மறுத்துவிட்டார்.

ஆனால், ஐ.தே.கவைச் சேர்ந்த 17 பேர் வரையானோர் இவ்வாறு ஆளுங்கட்சியுடன் இணையத் தயாராக இருக்கின்றனர் எனக் கூறினார். (எ-க)

## இருவேறு விபத்துக்கள்: மூவர் படுகாயம்!

யாழ்ப்பாணம் ஏப்.14

நேற்றுப் பிற்பகல் இருவேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துச் சம்பவங்களில் மூவர் படுகாயமடைந்தனர்.

பலாலி வீதி திருநெல்வேலிப் பகுதியில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற பஸ் - மோட்டார்சைக்கிள் விபத்தில் உரும்பிராயைச் சேர்ந்த இராஜதுரை நிருஷா (வயது-25) என்ற யுவதி படுகாயமடைந்தார்.

மானிப்பாய் சந்திப் பகுதியில் 3.30 மணிக்கு இடம்பெற்ற மினிபஸ் - மோட்டார்சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

சங்கானையைச் சேர்ந்தவர்களான கந்தையா சண்முகதாசன் (வயது-59), சிவகுருநாதன் சுகந்தன் (வயது-23) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த மூவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (த-12)

# உத்தேச பொதுக்கட்டமைப்பு இறுதித் தீர்வுக்கு அத்திபாரம்

## புத்தாண்டுச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.14

வடக்கு - கிழக்கு மீள்கட்டுமானத்துக்கு நிதி உதவிபெறுவதற்கான உத்தேச பொதுக்கட்டமைப்பு, நீண்டகாலம் தீர்வு காணப்படாத தேசியப் பிரச்சினைக்கு இறுதித்தீர்வைக் காண்பதற்கான பலமான அத்திபாரமாக அமையும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

புத்தாண்டை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள செய்தியிலே இப்படிக் கூறியுள்ளார்.

அச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சுமார் 40 ஆயிரம் உயிர்களைக் காவு கொண்டும், பல மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துகளை இழந்தும் உள்ள சூழலில் - வித்தியாசமான சூழலில் - புதுவருடத்தைக் கொண்டாடுகின்றோம். ஏக்கத்துடன் காலத்தைக் கழிக்கமுடியாது. நாட்டை மீளக் கட்டி எழுப்பவும் சமாதானம் மூலம் சுபீட்சத்தைக் காணவும் சகலரும் உறுதிகொள்ள வேண்டும். சகல வேறுபாடுகளையும் மறந்து ஒன்றாகச் செயற்படவேண்டும்.

கருமேகத்தில் ஒளிக்கீற்று வந்தது போல் சுனாமி அனர்த்தம் அமைந்துள்ளது. சிங்களவர், தமிழர், பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர் என்ற பேதமின்றி, வேறுபாடின்றி சகலரும் ஒன்றாக உழைக்கவேண்டிய புதிய சூழ்நிலை தோன்றியுள்ளது - என்று ஜனாதிபதி தனது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார். (ஐ-3)

## மருதடியில் இன்று விசேட வழிபாடு

யாழ்ப்பாணம் ஏப்.14

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் பாலஸ்தானம் செய்யப்பட்டிருப்பதையடுத்து, வழமை போன்று புதுவருடத் தினத்தன்று நடைபெறும் தேர்த்திருவிழா இன்று நடைபெறமாட்டாது என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு விசேட பூசை வழிபாடுகள் இன்று நடைபெறுமென்றும் கூறப்பட்டது. (எ)

## 'ஐ' அலைவரிசையில் இன்றே நடனநிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.14

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் 'ஐ' அலைவரிசையில் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் எஸ்.விஜித்தாவின் கிராமிய நடனத் தொகுப்பு நிகழ்ச்சியில் புத்தாண்டு தினமான இன்று பிற்பகல் 4 மணிக்கு செல்வி திருமகள் ராஜேஸ்வரனின் வடிவமைப்பில் தல்வியங்காடு சாயி அபிநய கலைக்கூட மாணவிகள் வழங்கும் நடனம் ஒளிபரப்பாகவிருக்கின்றது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் வைத்து இந்த நிகழ்ச்சி ஒளிப்பதிவு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சி நேற்று இடம்பெறும் என நேற்றைய 'உதயனில்' செய்தி வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

இதேவேளை - இன்றுமுதல் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் 'ஐ' அலைவரிசையை குடாநாட்டு மக்களும் தெளிவாகப் பார்க்கக்கூடிய வகையில் விஸ்தரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (த)

## தவறுதலாகத் துப்பாக்கி வெடித்து 2 இராணுவச் சிப்பாய்கள் காயம்

மட்டக்களப்பு - மயிலம்பாவெளி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அவர் அருகில் இருந்த இரண்டு இராணுவச் சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர் என மயிலம்பாவெளி இராணுவத்தினர் நேற்றுத் தெரிவித்தனர்.

செவ்வாய்க்கிழமை மாலை 6.45 மணியளவில் இராணுவ வீரர் ஒருவர் தனது துப்பாக்கியை துப்புரவு செய்ய முற்பட்டபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (157)



அமைதியும் சமாதானமும் வேண்டி சண்டிலிப்பாய் வடக்கு இரட்டையப்புலம் ஞானவைரவர் ஆலயத்தில் அண்மையில் அஸ்வமேத யாகம் நடத்தப்பட்டது. ஆலய முன்றிலுக்குக் கொண்டுவரப்பட்ட குதிரையையும் அந்தணர்கள் யாகக் கிரியைகளை நடத்துவதையும் படங்களில் காணலாம்.

## புலிகள் யுத்தத்திற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படுகிறார்களில்லை. விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த மீறல்கள் சம்பந்தமாக நாம் ஆயிரத்திற்கும் அதிகமான முறைப்பாடுகளை கண்காணிப்புக் குழுவிடம் செய்திருக்கிறோம்.

அரசு, படையினருக்குத் தேவையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்துவருகிறது. பயிற்சிகளை வழங்குகின்றது. அது வழமையான ஒரு விடயமே. வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரை 40 ஆயிரத்திற்கும் அதிகமான படையினர் அங்கு நிலை கொண்டுள்ளனர். அங்கு இடம்பெறும் சீண்டல் நடவடிக்கைகளுக்குப் பதில்நடவடிக்கை எதனையும் எடுக்காமல் அதிகபட்ச பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு பதில் பாதுகாப்பமைச்சர் என்ற வகையில் படையினரை நான் கேட்டுக்கொண்டுள்ளேன்.

அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயற்பாடுகளே வடக்கு - கிழக்கில் இடம்பெறுகின்றன. யுத்தமொன்றிற்கான சமிக்ஞையை புலிகள் வெளிப்படுத்துகின்றனர். ஆனால், அரசு இந்தச் சதிக்கும் பலியாகாது- இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ-க)

## படையினர்-புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணக்கப்பாடுகளை படைத்தரப்பு அமுல்படுத்தத் தவறிவருவதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டி வருகின்றனர். இதன் காரணமாக இப்படியான சந்திப்புக்களில் கலந்துகொள்வதில் அர்த்தமில்லை என அவர்கள் கருதுகின்றார்கள். இடைநிறுத்தப்பட்டுள்ள இச்சந்திப்பை மீண்டும் தொடங்குவதற்கான முயற்சிகளில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தற்போது ஈடுபட்டு வருகின்றது. அண்மையில் மட்டக்களப்பிற்கு வருகை தந்திருந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் இதுதொடர்பாக இரு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

படைத்தரப்பு இப்படியான சந்திப்புகளில் ஏற்படும் இணக்கப்பாடுகளை அமுல்படுத்துகின்றதா இல்லையா என்பதை அரசதரப்பு அறிந்துகொள்ள வேண்டும் எனவும் -

இதற்காகவே அரசதரப்பிலிருந்து ஆகக் குறைந்தது இரண்டு பிரதிநிதிகளாவது இப்படியான சந்திப்புகளில் கலந்துகொள்ள வேண்டும் எனவும் - கோரிக்கையை புலிகள் முன்வைத்துள்ளதாகத் தெரியவருகின்றது. (ஐ)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகள் முடிவடைந்ததும் திட்டத்தை அதிகார சபை வழங்கும் -

அத்திட்டங்கள் சம்பந்தப்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கப்படும். அந்த நிறுவனங்களும் அதிகாரசபையும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட இணங்கப்பட்டிருக்கிறது -

உடன்படிக்கை கைச்சாத்தானதன் பின்னர் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் கட்டடப்பணிகளை ஆரம்பிக்கும்.

இந்த வீடுகள் தவிர சேதமடைந்த எஞ்சிய வீடுகளுக்கு தலா இரண்டரை லட்சம் ரூபா உதவியாக வழங்கப்படும் -

அழிந்த, சேதமுற்ற வீடுகளின் உரிமையாளர்களுக்கு - பாதிக்கப்பட்டவர்களுக்கு - ஒன்றில் வீடுகள் கட்டியோ, புனரமைத்தோ கொடுக்கப்படும். சேதம் குறைந்த வீடுகளுக்கு தலா இரண்டரை லட்சம் ரூபா உதவித் தொகையாக வழங்கப்படும் -

ஒன்றில் நிதி உதவி வழங்கப்படும் அல்லது தொண்டு நிறுவனங்களால் வீடுகள் புனர்நிர்மாணம் செய்துகொடுக்கப்படும். இரண்டு வகை உதவிகளும் பாதிப்புற்ற எவருக்கும் வழங்கப்படமாட்டாது - இவ்வாறு விரித்து விளக்கினார் அரச அதிபர் கணேஷ். (அ-ஐ-3)

## தமிழர் அவலத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

தேசிய எழுச்சிப் பேரவையின் கோட்டக் கிளைகள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றன என்றும் -

அனைத்துக் கோட்டத்துக்குட்பட்ட பிரதிநிதிகளையும் கொண்ட கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை நடத்தப்படவுள்ளது என்றும் -

தேசிய எழுச்சிப்பேரவையின் பொதுச்செயலாளர் சூ.சிறில் தெரிவித்தார். (ஓ-3-111)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் எழிலனிடம் விசாரித்தனர்.

எழிலன் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரிவித்த விளக்கம் வருமாறு:-

எமது கட்டுப்பாட்டுப் பகுதியான பள்ளிக்குடியிருப்பில் எமது போராளிகள் வழமையான மோட்டார் தாக்குதல் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். இந்தப் பயிற்சியின்போது ஏவப்பட்ட ஷெல்கள் யாவும் எமது பகுதிகளுக்குள்ளேயே வீழ்ந்தன. அவை வீழ்ந்த இடங்கள் தொடர்பான விவரங்கள் எம்மிடம் உள்ளன.

எந்தவொரு ஷெல்லும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விழவில்லை. அதை உறுதியாகக் கூறமுடியும்.

படையினர் குறிப்பிட்டுள்ள ரக மோட்டார்களை நாம் பயிற்சியில் பயன்படுத்தவில்லை. எமது மோட்டாரின் ரகம் வேறு.

எம்மீது வீண்பழி போடுவதற்காகத் தேவையற்ற வீண் பிரசாரங்களைப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர் - என்றுள்ளது. (ஓ-3)

## 25 பாடசாலைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுனிசெவ் அமைப்பும் -

குடத்தனை றோ.க.தமிழ் கலவன் பாடசாலையை றோட்டறிக் கழகமும் -

தர்வையடி ஆர்.சி.தமிழ் கலவன் பாடசாலையை சுவிஸ் அபிவிருத்திக் கூட்டு ஸ்தாபனமும் -

புனரமைக்க விருக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புனரமைக்கப்படவுள்ள பாடசாலைகள் விவரம் வருமாறு:-

அலம்பில் றோ.க.பாடசாலை, அம்பலவன் பொக்கனை ம.வி., முல்லைத்தீவு ம.வி. ஆகியன ஜேர்மன் அரசாலும் -

செம்மாலை ம.வி., அலம்பில் உடுப்புக்குளம் ம.வி., வட்டுவாய்க்கால் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, முள்ளிவாய்க்கால் மேற்கு ஜி.ரி.எம். பாடசாலை ஆகியன நோர்வே அகதிகள் நிறுவனத்தாலும் -

கள்ளப்பாடு ஜி.ரி.எம்.பாடசாலை, முல்லைத்தீவு றோ.க.தமிழ் கலவன் பாடசாலை, சிலாவத்தை ஜி.ரி.எம்.பாடசாலை, வட்டுவாகல், ஜி.ரி.எம். பாடசாலை ஆகியன யுனிசெவ் அமைப்பாலும் -

முல்லைத்தீவு ஜி.ரி.எம்.பாடசாலை, முல்லைத்தீவு கிழக்கு முள்ளிவாய்க்கால் அ.த.க.பாடசாலை ஆகியன ஒக்ஸ்பாம் நிறுவனத்தாலும் - புனரமைக்கப்படவிருக்கின்றன. (ஐ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு மலர்

## பல நூற்றாண்டுகளாக வைத்தியத் துறையில் சாதனை படைத்த யாழ்ப்பாணத்துப் பாட்டிமார்



பண்டிகை மற்றும் பெருவிழாக் காலங்களில் தமிழ்மக்களின் அன்றைய வாழ்வியலுடன் சம்பந்தப்பட்ட சிறப்புக் குரியவற்றையும் பாரம்பரியங்களையும் இளம் சந்ததியினருக்கு உதயன் ஊடாக அறிமுகம் செய்து வைப் பவர் மூத்தபத்திரிகையாளரும், எழுத்தாளருமான செல்லப்பா நடராசா.

அத்தகைய சிறப்புத் தொடர்களில் ஒன்று இக்ககட்டுரை. இயற்கை எமக்குத் தந்த தலைசிறந்த செல்வங்களில் தாவரங்களும் அடங்கும். அவை மனிதனுக்குத் தரும் அத்தனை பயன்களையும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே அறிந்து அவற்றைத் தக்கமுறையில் பாவித்து வந்தனர் தமிழ்மக்கள். அவற்றில் சிலவற்றைப் புத்தாண்டு தினமான இன்று தமக்கேயுரியபாணியில் தருகிறார் உதயனின் அதிதி எழுத்தாளர்

**செல்லப்பா நடராசா**

இயற்கையோடு இணைந்து நமது வாழ்வியல்புகளை அமைத்துக்கொண்ட பெருமை கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தமிழ்மக்களுக்குரியதாகும்.அவர்கள் தமது வீட்டு, தோட்ட, பனம் வளவுகளிலிருந்து மிக மிக இலகுவாகப் பெறக்கூடியதாகவிருந்த செடி, கொடி, மரங்களின் இலை, பட்டை, வேர்களின் மருத்துவப் பயன்பாட்டின் மூலம் தமது உடல் நலத்தைப் பெரிதும் பேணிக்கொண்டனர். ஆண்டவன் மக்களை என்று படைத்தானோ அன்றே அவர் தம் நல்வாழ்வுக்காக மூலிகைகளையும் படைத்தான் என்பது ஐதீகம்.

எடுத்தற்கெல்லாம் மருத்துவர்களை நாடி ஓடும் பழக்கமோ, வழக்கமோ அன்று எவரிடத்தும் இல்லாதிருந்தது. தேகாரோக்கியம் பேண எமது முன்னோர்கள் தினசரி கைக்கொண்ட வாழ்வியல்புகள் இன்றும் அனைவராலும் பின்பற்றக்கூடியவை. இன்றைய ஆங்கில வைத்திய நிபுணர்கள் சாதிக்கின்றவற்றில் பலவற்றை அன்று வாழ்ந்த எமது பாட்டிமார்கள் இயற்கையோடு இணைந்த தமது கை வைத்தியத்தின் மூலம் மிக மிக இலகுவாகச் சாதித்திருக்கிறார்கள். அவர்களின் வைத்திய முறைகளில் ஒரு சதமேனும் செலவுமில்லை, பக்கவிளைவுகளுமில்லை. மாறாக உடலை ஓம்புவதற்கான சிறந்த வழிவகைகளே அவற்றுள் மிகுந்திருந்தன. இலை, பட்டை, வேர்களின் அந்தக்கால மருத்துவப் பயன்பாட்டை இங்கு சிறிது நோக்குவோம்.

### ஒதிசு

நாங்கள் கிட்டிப்புள் அடித்துப் பனந்தோப்புக்கள் தோறும் ஓடி ஆடி விளையாடிய காலத்தில் சில வேளைகளில் எமது காற்பெருவிரலையோ அல்லது அதற்கடுத்த விரலையோ கற்கள் பதம் பார்த்து சிதறப்பண்ணி விடுவதுண்டு. அவ்வித சந்தர்ப்பங் களில் நசியுண்டு சிதைந்து சிதறிவிட்ட எமது நுனி விரல்களுக்குப் பாட்டிமார்கள் ஒதிசம் பட்டையை இடித்து வைத்துக்கட்டிவிடுவார்கள். நோ, ரணம் எல்லாம் வெகுசீக்கிரத்தில் குணமடைந்து பாதிப்புக் குள்ளான விரல்களும் வழமைபோலாகி விடுவ துண்டு.

### புளியம் இலை

இன்று போல சுகாதார வசதிகள் இல்லாதிருந்த அந்தக்காலத்தில் மாரிகாலங்களில் சிறுவர்களுக்குக் காற்பாதங்களில் நீர்ச்சிரங்கு ஏற்பட்டு விடும். விரல் இடுக்குகள் புண்ணாகிவிடும். பாதங்கள் வீங்கி நடக்கமுடியாத நிலையும் ஏற்படும். அவ்வேளைகளில் புளி இலைகளை அவித்த நீரால் பாதங்களைக் கழுவிய பின் அதே புளி இலைகளை பாதங் களின் மேலும் கீழும் வைத்துக்கட்டியும் விடுவார் கள். பாதங்களில் ஏற்பட்ட விக்கமும் வற்றி சிரங்குப்புண்களும் குணமாகிவிடுவதுண்டு.

## மரங்களின் இலைகள், பட்டைகள், வேர்கள் அவர்களின் மருத்துவப் பொருள்கள்

### தொய்யில்

இன்று நாம் வழமையாக வாங்கும் கீரை அன்றைய எமது பாட்டிமார்களால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாகும். அவர்கள் அறக்கீரை, தயிர்வளை, சோனகக்கீரை, சாரணக்கீரை முதலாம் பலவித கீரைவகைகளை கமநிலங்களில் இருந்து பெற்றுக் கொண்டனர். தொய்யில் எனப்படும் இவை அனைத் தும் சேர்ந்த கீரைக்கறியின் சுவைக்கு நிகராக வேறு எதையும் கூறமுடியாது. இத்தகைய மூலிகைகள், கீரைகள், செடிகள், கொடிகளை உண்ணும் ஆட்டின் பாலையே காந்தி அடிகளும் தமது வாழ்நாளில் பெரிதும் விரும்பினார். ஒருசமயம் காந்தி அடிகள் லண்டன் செல்கையில் அவருக்குப் பால் கொடுக்கும் ஆடும் லண்டன் கொண்டு செல்லப்பட்ட தென்பது வரலாறு .

### வெற்றிலை

கர்ப்பிணிப்பெண்களின் சுகநலத்திற்கும், அழகிய குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்கும் வெற் றிலை சிறந்த மூலிகையாயிற்று. வெற்றிலையுடன் குங்குமப்பூவை தினந்தோறும் மாலைவேளை களில் சுவைக்கும்படி பாட்டிமார் கர்ப்பிணிகளை வற்புறுத்துவர்.

### வேப்பிலை

அதிக உஷ்ணமான காலங்களில் வரக்கூடிய பொக்குளிப்பான், சின்னமுத்து போன்ற நோய்களால் பீடிக்கப்படுவோரின் படுக்கைகளில் வேப்பம் இலைகளைப் பரப்பி வேப்பிலை கொண்டே அவர்களை விசிறியும் விடுவதும் ஓர் அரிய வைத்திய முறை. இவ்வேளைகளில் வேப்பிலையின் மருத்து வப் பயன்பாடு பெரிதும் உணரப்படுவதுண்டு. வேப்பிலை சர்வ கிருமிநாசனி என்பது இன்றும் அனைவரும் அறிந்ததே.

மகப்பேறடைந்த தாய்மார்களை எமது அன்றைய பாட்டிமார்கள் வேப்பம்இலை, வேப்பம்பட்டை, பாவட்டை இலை, நொச்சிஇலை, ஆவரசு, பருத்தி இலை ஆகியவற்றை முதல்நாள் மாலையே அவித்து ஊறவிட்ட நீரில் மறுநாள் காலை நீராட்டுவார். இவ்விதம் சிலவாரங்கள் ஒன்று விட்ட ஒருதினம் குளிப்புக்கள் நிகழும். தாய்மார்களும் உடல் நோ உபாதைகள் எல்லாம் நீக்கித் தமது கட்டுக் கோப்பான உடலழகையும் தேகாரோக்கியத்தையும் பேணிக்கொள்வர். பாட்டிமாரின் கைவண்ணத்தால் அவர்கள் மீண்டும் குமரி போலாகிவிடுவர்.

பிறந்த குழந்தைகளின் தொப்புள் புண் காய்வதற்கு முற்றிய வேப்பமரப் பொருக்கின் உட்புறத்திலிருந்து பெறப்படும் செந்தூரம் போன்ற துகள்கள் பயன்படுத்தப்பட்டன அந்தக்காலம். தொற்றுநோய்க்கிருமிகளின் தாக்கம் அறவேயின்றித் தொப்புள் மிக விரைவாகக் காய்வதற்கே இந்தச்சிகிச்சை முறையாகும்.

### சீந்தில் இலை

சிறுகுழந்தைகள் கிரந்தியால் உபாதைகளுக்குள்ளாவதுண்டு. உடனே குழந்தைகளை வைத்தியரிடம் கொண்டு செல்லப்படுவதில்லை. பாட்டிமார் காலை வேளையில் குழந்தைகளுக்கு உடல்முழு வதும் மருத்தெண்ணை பூசி அதே எண்ணெய் தடவி வாட்டிய சீந்தில் இலைகளை உச்சந்தலையில், நெற்றி, நெஞ்சுப்பகுதி முழுவதும் பதித்துப் பனைஓலைத் தடுக்கில் பழனி ஆண்டவர் கோலத்தில் கிடத்திவிடுவார்கள். குழந்தையும் சிலமணி

X ஆம் பக்கம் பார்க்கவும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு மலர்

## நினைவழியாச் சித்திரை

தென்றல் வீசும் தேன் நிலம்
திரைகள் விலக்கும் சித்திரைப் புத்தாண்டு
மின்னல் கீறும் தாய் நிலம்
மேடுகள் அகற்றும் சித்திரைப் புத்தாண்டு

கன்னித் தமிழ் ஆளும் நிலம்
கவலைகள் நீக்கும் சித்திரைப் புத்தாண்டு
கனனித் தமிழ் வாழும் நிலம்
காவியம் பூக்கும் சித்திரைப் புத்தாண்டு

சூரியன் வாழ்த்தும் சுதந்திர நிலம்
சுடரும் பூக்களின் சித்திரைப் புத்தாண்டு
நேரம் பார்க்கும் தமிழர் நிலம்
நினைவில் விழிக்கும் சித்திரைப் புத்தாண்டு

-நல்லை அமிழ்ந்தன்












Digitised by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு மலர்

## பிறந்தது புத்தாண்டு!

போர் ஒழிந்து பொறுமையாய் வாழ
சீர் பெற்று சிறப்புடன் வாழ்ந்திட
ஊர் திரும்பி உரிமையுடன் வாழவே
தீர்வு ஒன்று தருமே பிறந்த புத்தாண்டே!

பல ஆண்டுகள் பல துன்பங்கள்
பல ஆண்டாய் பட்ட அவலங்கள்
புலம் பெயர்ந்தே படும் வேதனைகள்
பறந்திடும் ஆண்டாய் பிறந்ததே புத்தாண்டு!

பாழாகிப் போன பழைய ஆண்டிற்கு
புதுமையாய் எமக்கென பிறந்த இவ்வாண்டில்
பலநூறு அகதிகளின் பலவகைத் தொல்லைகள்
பறந்திட ஏதுவாய் பிறந்தது புத்தாண்டு!

புத்துயிர் தந்து புகழ் விளங்கவே
புதுமைகள் பல புரிந்திட இங்கே
தீமைகள் யாவும் தரணியில் ஒழியவே
புதுப் பொலிவுடன் பிறந்தது இப் புத்தாண்டு!

ஆறுமுகம் தங்கரத்தினம்.




செல்வா எலக்ரோ பிளேற்றிங்
ஸ்தாபனத்தார்
அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றார்கள்.

- உங்களுக்கான எலக்ரோ பிளேற்றிங் அனைத்தும் இந்திய நிபுணர்களின் விசேடமான நேரடிப் பார்வையின் கீழ் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
- ஒட்டோ உதிரிப்பாகங்கள், சகலவித மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் அனைத்தும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

செல்வா எலக்ரோ பிளேற்றிங்
120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ☎:021 222 2873
(C/41751)





பாரினில் அமைதி பற்றிப் பரப்பிட பிரகாசித்து வந்திடும் இத்திருநாளில் அனைவருக்கும் எம்மினிய புதுவருட நல்வாழ்த்துக்கள்!

இலத்திரனியல் மற்றும் அழகுசாதன அன்பளிப்புப் பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

டொட் என்ரபிறைஸ்
02, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்)
☎:021 222 3098, 021 222 7622
Fax:021 222 3098
1,12, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
(C/41718)





அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம்மினிய புதுவருட நல்வாழ்த்துக்கள்!

உங்கள் தேவைகளுக்கு எங்களிடம்....
- ★ ஆங்கில மருந்து வகைகள்
- ★ பால்மா வகைகள்
- ★ குழந்தைகளுக்கான ஊட்டச்சத்துக்கள்
- ★ பாடசாலை மாணவர்க்கு அப்பியாசப் புத்தகங்கள், பென்சில், பேனா மற்றும் கல்வி உபகரணங்கள்
- ★ குளிர்பான வகைகள் இவற்றுடன்
- ★ Kid Card ★ Mobile Card
- ★ Kodak Film Roll ★ Konica Film Roll

PIRABAA PHARMACY 315(37), Stanley Road, Jaffna.
பிரபா பார்மஸி அன் குரோசறீஸ்
மற்றும் அழகுசாதனப் பொருள்கள், இன்னும் இன்னோரன்ன பொருள்கள்
315, ஸ்ரான்லி வீதி
(ஆரியகுளம் சந்திக்கு அண்மையில்), யாழ்ப்பாணம்.
(C/41722)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு மலர்

அனைவருக்கும் சித்திரைப் புது வருட நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும் !

**சொலெக்ஸ்**
பல், மூக்குக் கண்ணாடி அகம்



உங்கள் கண்களைப் பரிசோதித்து கவர்ச்சிகரமான பிறேம்களில் கண்ணாடியினைப் பொருத்திப் பெற்றுக்கொள்ளலாம். நவீன ரக சன் கிளாஸ்களை மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். சங்குப் பற்களை அழகாகக் கட்டவும், மிதப்புப் பற்களைக் கிளிப்பொருத்தி இலகு முறையில் சீர்செய்து கொள்ளவும்.

516.ஆஸ்பத்திரி வீதி.(O.P.D. முன்பாக). யாழ்ப்பாணம்.

கிளை நிறுவனம்:- பிரதான வீதி. முதலாம் குறுக்குத்தெரு.நெல்லியடி.
☎0777 286029.

(C/41726)

## புதிய தீர்வு வந்திடுமோ!

புத்தம் புதுமலராய்
புத்தாண்டு பிறந்ததுவாம
புத்துணர்ச்சி நாம
கொள்ளப்
புதுவழிகள் காட்டிடுமோ ?
புதுமைகள் பல மலிந்த

புதுயுகத்தில் நாம இன்று
புத்தொளி பெற்றுப்
புதுவாழ்வு காண்பதற்குப்
புதிதாகவோர் தீர்வும
வந்திடுமோ?

**நயினை விஜயன்**



New SHAHANAA TEXTILES

இன்று பிறந்திருக்கும் புத்தாண்டில் அனைவரும் மகிழ்ச்சியடைய எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

NST
நியூ சகானா ரெக்ஸ்ரைல்

இல.100. பெரியகடை. மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம். ☎ 077 6147418

No.100, Grand Bazaar, Power House Road, Jaffna.
Tel:- 077-6147418


(C/41727)

**நித்திய கல்யாணி** நகை மாளிகை

எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

தங்க நகையுலகில்... நம்பிக்கை, நாணயத்துடனான நித்திய சேவையாலும், நியாயமான முறையாலும் நன்நம்பிக்கை பெற்று, நகையுலகிலேயே தனியுலகு படைத்து நிற்கிறது....

ஓடருக்கு நகைகள்
அசல் 22 கரட்டில்
உத்தரவாதத்துடன் குறித்த
தவணையில் செய்து
கொடுக்கப்படும்.



205/4, கஸ்தூரியார் வீதி (ராஜா கட்டடத் தொகுதி), யாழ்ப்பாணம். T.P: 021 4590214, 0777 111415

(C/41730)

இல்லம் சிறக்க! உள்ளங் குளிர! ஈடிணையற்ற எழில்மிகு புதுயுக புடைவைத் திலுசுகளை உங்கள் விருப்புக்கேற்ப உவந்தளிக்கும் ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ ஸ்தாபனத்தார் மங்கலம் பொங்கும் சித்திரைப் புது வருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார்கள்!

**ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ**

இல.13.14. பெரியகடை வீதி. யாழ்ப்பாணம்.
Tel:222 3139



நம்பிக்கையான
நாணயமுள்ள
நகை வர்த்தகர்கள்
நல்ல முறையில்
உத்தரவாதத்துடன்
நகைகளைச் செய்து
கொடுப்பவர்கள்

புத்தொளி வீசும் புதுவருட நன்னாளில் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!

**செல்வி** நகை அகம்

1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(தரம் தேடுவோர் தவறாமல் நாடுமிடம்)



(C/41714)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு மலர்

## உறவுகளை வளர்ப்பதற்கு உபாயம் கூறும் புத்தாண்டு

சித்திரைப் புத்தாண்டை நாம் வருடா வருடம் கொண்டாடி வருகின்றோம். இந்நாள் எமக்கு ஒரு மங்களகரமான நாளாகும். பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற மரபிற்கமைய புத்தாண்டில் புதிய விடயங்களைச் சகலரும் எதிர்பார்ப்பது வழக்கம். புத்தாண்டு புலருமுன் வருடம் பிறக்கும் நேரத்தையும் விசேட புண்ணிய காலத்தையும் சங்கிரம தோஷத்தையும் பஞ்சாங்கத்திலே பார்த்து அங்கு உள்ள அறிவுறுத்தலின்படி நடந்து கொள்ளல் நன்று.

புத்தாண்டுப் பண்டிகையைப் புதுவருடம் என்றும் வருடப்பிறப்பு என்றும் வழங்குவர். சித்திரை மாதத்து முதல்நாளில் சூரியன் மேடராசியில் சஞ்சரிக்கத் தொடங்குகிறது. பன்னிரு ராசிகளில் மேடம் முதலில் வருவது. எனவே, இந்நாளை ஒரு சுபதினமாகவும் விசேட நாளாகவும் கொண்டாடுகின்றனர். இக்காலத்தில் பகலும் இரவும் ஒரே அளவாக நிலவும் என்ப தும் ஒரு விசேடமாகும்.

சித்திரை மாதம் முதல் வெப்பம் அதிகரிக்கும். வெப்பத்தைச் சகித்துக்கொள்வதற்கும் நாம் பழகிக்கொள்ளுதல் வேண்டும். எனவே, புத்தாண்டுப் பண்டிகை நாளில் நம்மைப் பழகிக் கொள்வதற்கான பல நிகழ்ச்சிகள் நடைபெறுதல் வழக்கம்.

ஆகவே, புத்தாண்டுக்கே உரித்தான மருத்து நீரை நாம் நோக்குவோம். மருத்துநீரானது தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, விஷ்ணுகிராந்தி, சீதேவியார், செங்கழுநீர், வில்வம் இலை, அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பிலி, சுக்கு முதலிய விசேட திரவியங்களை நன்னீரில் காய்ச்சிப் பெறப்படுவதே ஆகும். மருத்துநீரை நாம் பெறும்போது சிவாச்சாரியருக்குத் தட்சணை கொடுத்து அவரின் ஆசியைப் பெற்று வாங்குதல் உத்தமம்.

புத்தாண்டு ஆரம்பிக்கும் நாளில் நாம் நீராடுவதன்முன் மருத்துநீரைச் சிரசில் மாத்திரமன்றி உடம்பின் ஏனைய பாகங்களிலும் தேய்த்துக் கொள்ளுதல்வேண்டும். மருத்துநீர் வெப்பத்தைத் தணிப்பதோடு, சங்கிரமதோஷ நிவர்த்திக்கும் பெரிதும் உதவுகிறது.

இதன்பின் புத்தாண்டுக்கான புத்தாடை அணியும் வைபவம் இடம்பெறும். புத்தாடை உடுக்கும்போதும் அதனை அணிந்த பின் அதன் அழகையும் கண்டு சகலரும் மகிழும் நிலையை நாம் காணலாம்.

புத்தாண்டு பிறக்கும் முன் வீடு, கோயில் முதலானவை கழுவிமெழுகப்படும். அத்துடன், வெள்ளை அடிக்கப்படும். நிறமை பூசப்படும். மாவிலை, தோரணங்கள் கட்டப்படும். வண்ண வண்ணக் கோலங்களும் போடப்படும். இவற்றால் எங்குமே அழகு ததும்பும்.

புத்தாண்டில் புத்தாடைகளையோ தோய்த்து உலர்ந்த ஆடைகளையோ அணிந்த பின்பே புத்தாண்டுப் பொங்கல் ஆரம்பமாகும். இல்லங்களிலே புத்தாண்டுப் பொங்கலானது சூரியோதயத்தை ஒட்டியே நடைபெறுகின்றது. குடும்பத் தலைவி பசும்பாலை விட்டுப் பொங்குவாள். பால் பொங்கும் திசை கண்டு சகலரும் இன்புறுவர். சிறுவர், சிறுமியர் வெடி, மத்தாப்புக் கொளுத்தி மகிழ்வர். அடுத்து குடும்பத் தலைவன் பாசிப் பருப்புடன் கலந்த அரிசியைப் பொங்கற் பானையுட் போடுவார். பின் பொங்கல் செய்யப்பட்டதும் இல்லத் தலைவர் கிழக்கு முகமாக நின்று பொங்கல் பானையைக் கீழே இறக்குவார்.

புத்தாண்டுக்கான வழிபாடு இனி ஆரம்பமாகும். சூரியபகவானுக்கான படையல், பூஜை அறையில் உள்ள சுவாமிகளுக்கான படையல் என்பனவெல்லாம் வைத்து இவற்றுடன் குத்து விளக்கு, பூரண கும்பம், அஷ்ட மங்கலப் பொருள்கள் என்பன வைக்கப்படும். மஞ்சள் பிள்ளையார் நடுநாயகமாக வீற்றிருப்பார். இவ்வேளையில் நாம் வழிபாடுசெய்து ஆண்டு முழுவதும் நமக்கு நல்ல காலமாக நிலவுதல் வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

அடுத்து கோயில் வழிபாடு ஆரம்பமாகும். சகலரும் தத்தமது இஷ்ட தெய்வ வழிபாடுகளைக் கோயிலுக்குச் சென்று நிறைவேற்றுவர். கோயில் தரிசனம் இனிதே நிறைவெய்தியதும் வீடுவந்து சுற்றத்தாருக்கும் உற்றார்,உறவினர்க்கும் பொங்கல், சிற்றுண்டி என்பன அவர்களின் வீட்டில் வழங்கப்படும். பின்பு வீட்டில் எல்லோரும் புத்தாண்டு உணவை உட் கொள்வர்.

புத்தாண்டுக்கான மதியபோசனத்திற் சிறப்பான ஓர் அம்சம் இடம்பெறும். சித்திரை மாதத்திலே பூத்துக்குலுங்கி அழகுடன் நறுமணம் வீசும் வேப்பம்பூ பச்சடியாகத் தயாரிக்கப்படுகின்றது. கவலைகள், துன்பங்களைச் சகித்துக்கொள்ள வேண்டும் என்னும் கருத்தில் அன்று கசப்பான வேப்பம்பூவைச் சம்பல்செய்து உணவிற் கலந்து கொள்கின்றோம். கசப்பையும் இனிப்பாகக் கருதப்பழகினால் துன்பங்களையும் சகிக்கப் பழகிக்கொள்ளலாம். அத்தோடு, மதியபோசனத்தில் தித்திப்பு, உறைப்பு, கசப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, புளிப்பு முதலான அறுசுவை உண்டி புத்தாண்டில் முக்கியமான தொன்று.

அறுசுவையோடு கூடிய உணவை மகிழ்ச்சியோடு உண்டு, தானதருமஞ்செய்து மற்றவரையும் மகிழ்வித்தபின் சிறுவர் முதல் பெரியவர் வரை எல்லோரையும் மகிழ்விப்பதற்காக நல்ல வேளையில் பஞ்சாங்கம் பார்த்து குடும்பத் தலைவர் வெற்றிலையிலே பாக்கு, நெல், பூ, பணம் என்பன வைத்து வீட்டில் உள்ளவர்களுக்கும் ஏனையோருக்கும் கொடுப்பது கைவிசேஷம் ஆகும்.

அடுத்து ஏழைகளுக்கு இரங்குதலும் எல்லோருக்கும் உதவிசெய்தலும் இப்பண்டிகையில் ஒரு விசேட அம்சம். அத்தோடு, புதுவருடம் என்பதனால் ஆண்டுக்குரிய கணக்குகளைப் புதிதாக எழுதிக் கொள்வர். வியாபார நிறுவனங்கள் சுப வேளையில் பிள்ளையார் சுழிபோட்டுப் புதுக்கணக்கு எழுதும் வழக்கமும் மாணவ, மாணவியர் நல்லநேரத்தில் தமது பாடங்களைப் படிக்கத் தொடங்குவதும் புத்தாண்டிலே ஆகும்.

மாதா, பிதா, குரு போன்றோர் தெய்வத்துக்குச் சமமானவர்கள் ஆவர். ஆகவே, புத்தாண்டில் இவர்களை வணங்கி அவர்களின் ஆசியைப் பெறுவது எமது இன்னொரு மரபாகும்.

மற்றும் இத்தினத்திலே உறவினரது வீடுகளுக்கும் நண்பர்களது வீடுகளுக்கும் சென்று விருந்துண்டு பரஸ்பர உறவுகளை வளர்த்துக் கொள்வதும் நமது வழக்கம் ஆகும்.

இப்புத்தாண்டிலே அன்றுதொட்டு விளை யாட்டு முக்கிய இடத்தை வகித்து வருகின்றது. போர்த் தேங்காய் அடிப்பது, கிட்டி அடித்தல், சடுகுடு, தாச்சி மறித்தல் என்பன வருடப்பிறப்பில் இடம்பெறும் பாரிய விளையாட்டுக்களாகும்.

ஆகவே, மேற்கூறிய விதிமுறைகளைக் கையாண்டு, பிறக்கும் புத்தாண்டில் பழையன யாவற்றையும் விட்டொழித்து, புத்தாண்டைப் புதிய நறுமணம் வீசும் மலராக எண்ணி, ஆண்டு முழுவதும் நமக்கு வாழ்வில் நறுமணம் வீச வேண்டுமெனப் பிரார்த்தனை செய்வோமாக.

**சியாமினி**












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு மலர்



## வாழ்விலொளி ஏற்றிடும் பார்த்திப புத்தாண்டே, வா வா!

செந்தமி ழின்மேன்மை சிறந்திடும்
செந்தமிழீழத் திருப்பெரு நன்னாட்டில்
சேறுபூசிடுங் கொடியவடுவது வாம்யுத்தம்
சிதறியேயழித்தது வெம் செல்வங்களை யெல்லாம்
சிலகாலம் யுத்தத்தில் மூழ்கிய இத்திருநாடு
சிலவாண்டு யுத்தமும்போரு மின்றிக்கிடந்திற்று
பிறக்குமிப் புத்தாண்டு நம்தமிழரெல்லாம்
சிறப்பாகவாழ வாழ்விலொளி யேற்றிடவேண்டும்!
பிறந்திடுமிப் பார்த்திபப்புத் தாண்டில்
தடைப்பட்ட பேச்சுக்க ளதுமீண்டும் தொடங்கிட
நாட்டினிலே சாந்தியொடு சமாதானமும் பெருகிட
மக்கள் மனதிலேயமைதி பொங்கிட
வையகத்தி லுயிரினங்கள் யாவுமகிழ்ந்திட
ஒளியின்றியிருள் சூழ்ந்துகிடக்கும் - நம்
பிரசித்தி பெற்ற ஆலயங்களி லொளியேறிட
இப்பார்த்திபவருடமதில் இறைவனருள் புரியவேண்டும்!

-தெல்லியூர் சி.ஹரிகரன்.


அன்பர்கள், ஆதரவாளர்கள்,நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இதயம் கனிந்த
புதுவருட நல்வாழ்த்துக்கள் !



உங்களுக்கு வேண்டிய
- அழகு சாதனப்பொருள்கள்
- அன்பளிப்புப் பொருள்கள்
- இலத்திரனியல் பொருள்கள்
- மின்சாரப்பொருள்கள் .
- வீட்டுப்பாவனைப் பொருள்கள்

இத்தனையும் மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
ஓரிடமாகப் பெற்றிட ..

மயூரா அன்பளிப்பு அகம்
14.நவீன சந்தை (வெளிப்புறம்).மின்சாரநிலைய வீதி.யாழ்ப்பாணம்.தொ.பே 021 222 2084

(C/41723)

அன்பர்கள் அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

- காலத்தால் அழியாத
- கற்பனைக்கும் எட்டாத
- எழில் குன்றா அற்புதப்படைப்புக்கள்

பார்ப்பவர் கண்களில் பரிசிடும்
அசல் ரகங்கள்,குறிப்பிட்ட
தவணையில் தரமாகவும்
நியாயமாகவும்
பெற்றிட நாடுங்கள்



சாரங்கன் நகைமாடம் அன்ட் சென்ரர்
இல 45,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 222 6059

சாரங்கா நகை மாடம்
157/1. கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
☎ 222 2480.6972

(C/41724)



நீடித்த நிலையான சமாதானம்
நிலைத்திட அனைவருக்கும் எம்
இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள் !

V.S.P பரிமளா ஸ்ரோர்ஸ் லங் ஓயில்

உணவுத்தேவைகளுக்குச்
சுத்தமாகத்
தயாரிக்கப்படுவது.

26 A,மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.222 2785

FedEx Express
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
திருமுருகன் கொம் நெற்
WESTERN UNION பணப் பரிமாற்றம்

Inland & I.D.D Calls, Internet-Browsing & Email, Fax, Photo Copy,Computer typing & Printing,
Designing-Cards, Laminating, CD-Writing, Binding,Parcel Services, Bus-Van-Flight Ticketing Services,
& Computer-Hand phone Accessories,

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560 Fax - 021 222 7310

E.mail :- thirumuruglan@lycosmail.com



அன்பர்கள், நண்பர்கள்,ஆதரவாளர்கள் அனைவருக்கும் குதூகலமான
சித்திரைப்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

சிங்கப்பூர் ஜுவல்லறி
SINKAPOORE JEWELLERY
93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே 021 - 4590260

(C/41715)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு மலர்




## சித்திரையாய் வருக நீ மகிழ்வுடனும்

வண்ணத் தமிழ் பேசி
சிட்டுக் குருவிகளாய்
நாம் வாழ அழகுத் தமிழ்
நங்கையவள் பூவோடும்
பொட்டோடும் வாழ –
நாட்டினிலே மக்கள் மீது
இராணுவ அராஜகம் –
கெடுபிடிகளற்ற பற்பல
சுதந்திரச் செய்திகளைப்
பண்புள்ள சமூகமது படித்து
இன்புற – மகிழ்வோடு
சித்திரையில் முத்திரை
பதிக்க நீ பிறந்திடும்
இவ்வேளையிலே
தெய்வங்கள் அருள்புரிய –
அமைதியை நிலைநாட்ட –
வேண்டும் எனப்
பிரார்த்திக்கின்றேன்!

து.ஜெயரூபன்,
கந்தரோடை.















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு மலர்

## வாழ்த்திடு சித்திரையே!

தேன் நிலவு
திரை விலக்கி
என் நிலத்தின்
எழுத்துக்கள் படித்திட
தோன்றிடும் புத்தாண்டே
புகழோடு தோன்றுக
வாழ்ந்திடும் நாள்களை
வாழ்த்திடு சித்திரையே!
தென்றலில் குளித்து




திசைகளை முத்தமிட்டு
கன்னல் தமிழும்
கலகலக்கும் சிங்களமும்
என்றும் மகிழ்ந்திட
இதயங்கள் இணைந்திட
வந்திடு சித்திரையே
வாழ்த்திடு சித்திரையே

**வித்தியாசன்.**
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு மலர்

மங்கல வாழ்வு தரும் புத்தாண்டு வருகவே!

தமிழ் மக்களுடைய வாழ்க்கையிலே விழாக்களும் பண்டிகைகளும் முக்கிய இடம் பெறுகின்றன.சைவ சமயத்தவர்கள் புதுவருடப்பிறப்பை பரம்பரை பரம்பரையாக சிறப்பாக கொண்டாடி வந்துள்ளனர். நல்லன பல நடைபெறும் என்ற நம்பிக்கையுடனும், தமது எதிர்பார்ப்புக்கள் வெற்றிகரமாகக் கைகூடும் என்ற மகிழ்வுடனும் புத்தாண்டைக் கொண்டாடினர். புதுவருடத்தைக் கணித்துக்கொள்வதில் மதரீதியான கருத்து வேறுபாடுகள் உள. தமிழ் மக்கள் விசேடமாக சைவ மக்கள் மேட ராசியிலிருந்து மீனராசிவரை சூரியன் சஞ்சரிக் கும் காலங்களை பன்னிரு மாதங்களாக வகுத்து ஒரு வருடமாகக் கணித்துள்ளனர். ஆங்கில ஏப்ரல் மாத நடுப்பகுதியில் சித்திரை மாதப்பிறப்புடன் புதுவருடம் ஆரம்பமாகிறது. புதுவருடத்தைக் கொண்டாடும் நிலையில் இல்லங்களைப் புதுப்பொலிவு பெறச்செய்து, மங்களகரமாகக் காட்சியளிக்கும் முறையில் கோலமிட்டு, விளக்கேற்றி, மாவிலை தோரணம் தொங்கவிட்டு பொங்கி, விருந்துண்பது வழக்கம். கடந்த வருடத்தில் எமக்கு ஏற்பட்ட துன்பங்கள், கஷ்ட, நஷ்டங்கள், பகை என்பன நீங்கி வாழ்க்கையை சீரிய நெறியில் அமைக்கப் புத்தாண்டு ஏற்ற சந்தர்ப்பமாக அமைகி றது.

புத்தாண்டை தொடர்ந்து சில தினங்களுக்குப் புத்தாண்டு தொடர்பான பல

தொடர்ச்சி: XII ஆம் பக்கம் பார்க்க













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு மலர்

## பல நூற்றா...

(I ஆம் பக்கத் தொடர்ச்சி.........)

நேரம் கையைக் காலை அடித்து விளையாடியபடி கிடக்கும். இவ்வித சிகிச்சை முறையால் குந்தையின் தொண்டைக் கரகரப்பு, இழுப்பெல்லாம் சில நாள்களில் தணிந்து ஈற்றில் குணமாகி விடுவதுண்டு. இது சீந்தில் இலையின் மகத்துவமாகும்.

### கற்பூரவள்ளி

குழந்தைகளுக்குச் சளி உபாதை ஏற்படும் சந்தர்ப் பங்களில் வளவில் வளர்த்து வைத்திருக்க கூடிய கற்பூரவள்ளி இலைச்சாறு பெரிதும் கைகொடுத்துதவும். கற்பூரவள்ளி கற்பூர வாசனை உடையது.

### கறுத்தப்பூக்கொடி

சின்னன் சிறிசுகளை நீராட்டும் போது அவற்றிற்குத் தலையில் கறுத்தப் பூக்கொடி இலைச் சாற்றைப் பிரட்டி நீராட்டி பாட்டிமார் குழந்தைகளின் உடல்நலம் பேணுவர்.

### செவ்வரத்தை

வளர்ந்த குழந்தைகளுக்கு செவ்வரத்தம் இலைச் சாற்றை வைத்துத் தோயவார்த்து அவர்களை ஆரோக்கியமான முறையில் வளர்த்தெடுப்பதும் எமது பாட்டிமாரின் கைவண்ணமாகும்.

### தூதுவளை

வீட்டில் எவருக்குக் காய்ச்சல் வந்தாலும் கொத்த மல்லியுடன் தூதுவளை இலையை அவித்துக் குடிநீரைப் பருகக் கொடுப்பர். இருமல் குணங் காணவும் தூதுவளை மருந்தாகப் பயன்படுத்தப் பட்டது. சளி உபாதைக்கும் அதுவே சிறந்ததோர் நிவாரணியுமாயிற்று.

### சண்டி

அன்றைய குடாநாட்டு மக்கள் வளவுவேலிகளிலும். கிணற்றடிகளிலும் நாட்டி வளர்த்திருக்கக் கூடிய சண்டியின் இலையைச் சமையல்செய்து உணவில் சேர்த்துக்கொண்டனர். சண்டி இலையைச் சுண்டித் தின்றால் அண்ட வாய்வு அன்றே தீரும் என்பது எமது பாட்டிமாரின் பழமொழியாகும்.

### சிறு குறிஞ்சா

சர்க்கரை வியாதியால் எமது முன்னோர்கள் அவதிப்பட்டது கிடையாது. காரணம் அவர்கள் தமது வளவுகளில் சிறு குறிஞ்சாச்செடிகளை வளர்த்து அவற்றின் இலைகளையும் உணவுடன் சேர்த்துக் கொண்டமையேயாகும்.

### கறி முருங்கை, முசுட்டை

அதிக இரும்புச் சத்துடைய கறிமுருங்கை இலை களையும், பொன் சத்துடைய முசுட்டை இலைகளையும் பால்கறியாகச் சமைத்து உணவுண்டமையால் கருங் காலிக் கட்டை போன்ற தேகமுடையவர்களாக அன்றைய குடாநாட்டு மக்கள் விளங்கிய காலம் இன்று சரித்திரமாகி விட்டது.

### மொசு மொசுக்கை

மொசு மொசுக்கை இலைகளையும் முள் முருக்கை குருத்துத் தளிர்களையும் உட்கொண்டால் இருமல், சளி, நெஞ்சு உபாதைகள் பறந்தோடிவிடும் என்பதும் எமது பாட்டிமார்களின் வாகடந்தான்.

### வண்டுகொல்லி

வயிறு அப்படி இப்படிச் சிறிது சிக்கலாக இருந்தால் ஒரு கைப்பிடி வண்டு கொல்லி இலைகளை எடுத்து வதக்கி இரவுணவுடன் சேர்த்துக் கொண்டால் மறுநாள் காலையில் சுகபேதியாகி வயிறு பஞ்சுப்பெட்டி போலாகிவிடும் என்று எனது பாட்டி அடிக்கடி சொல்லக் கேள்விப்பட்டி ருக்கிறேன்.

### பாவல் இலை

எவராவது தானப்புழுக்கடியால் அவஸ்தைப்பட நேர்ந்தால் அத்தகையோருக்குக் கைகண்ட பாட்டி வைத்திய முறை ஒரு பிடி பாவல் இலைச்சாற்றுடன் அதேயளவு தேங்காய்ப் பாலைக் கலந்து காலையில் பருகக் கொடுப்பதாகும். கடிக்குக் காரணமான துர்நீரெல்லாம் நீர் நீராக வயிற்றில் நின்றும் அகன்று விட கடியும் பூரண குணமாகிவிடும் என்பது எனது அனுபவமுமாகும்.

### முடக்கொத்தான்

வீட்டில் ரசம் வைக்கையில் சிறிதளவு முடக்கொத்தான் இலைகளை அதற்குள் போடுவது அந் தக்காலத்து வழமை. கட்டுமுடக்கு வாதப்பிடிப்புக்கு அத்தான் எனப் பாட்டிமார் முடக்கொத்தானுக்குப் பொருள் கண்டனர்.

### கறிமுல்லை

குழம்புப் பாற்சொதி வைக்கையில் அதற்குள் சிறிதளவு கறிமுல்லை இலைகளைப்போடுவதும் அன்றைய சமையல் முறையாகும். ஜீரண சக்தியை அதிகரித்து வயிற்றுப்பொருமல் வாய்வுக் கோளா றுகளை இல்லா மற்செய்யும் பொருட்டே குடாநாட்டு மக்களால் இவ்வித சமையல் முறைகள் கையாளப்பட்டு வந்துள்ளன எனலாம்.

### சாறணை

எமது பாட்டிமார்களின் சமையல் முறை இன்றுள்ள சமையல் முறைகளை விட மாறுபட்ட தாகும். சைவ, அசைவக் கறிவகைகளைச் சமைக்கையில் தேங்காய், மிளகாய், மல்லி, சீரகம், மிளகு, மஞ்சள், பூடு ஆகிய வற்றைப் பச்சையாக அம்மியில் வைத்துக்கூட்டாக அரைத்தே பாட்டிமார் பாகம் பண்ணுவதுண்டு.

சரக்குக்கூட்டை அரைக்கையில் அதனுடன் ஒரு சிறுதுண்டு சாறணை வேரையும் சேர்த்துக் கொள் வார்கள். சாறணை எந்தவிதமான உணவையும் இலகுவாக சமிபாடடையச்செய்து வயிற்றையும் பாதுகாக்கும் திறன் கொண்ட மூலிகையாகும்.

### நன்னாரி

ஒவ்வொரு மூலிகையும் பன்முக மருத்துவப் பயன் பாட்டை உடையவை. நன்னாரி போட்ட தேநீர் ஒரு காலத்தில் குடாநாட்டு வீடுகளில் பரிமாறப்பட்ட துண்டு. மலையாளத்தாருடைய சில தேநீர்க் கடைகள் அந்தக் காலத்தில் நன்னாரி வேர்போட்ட தேநீருக்குப் பிரசித்த மானவை. அதன்சுவையும் நறுமணமும் அலாதி யானவை. நன்னாரியும் சிறந்ததோர் மூலிகையேயாகும். இன்றுள்ள எவருமே நன்னாரியின் மகிமையை அறிய மாட்டார்கள்.

இவ்வித மூலிகைகளில் எல்லாம் மருத்துவப் பயன்பாட்டுடன் ஊட்டச் சத்துக்களும் மிகுந்துள்ளன.

இன்று வீடுகளில் ஒழுங்காக நீரூற்றி வளர்க்கப்படும் செடி, கொடிகளில் ஒன்றாவது மூலிகைச் செடியோ, கொடியோ அல்ல. அனேகமானவை பூவுக்குத் தன்னும் உதவாதவையே. யாரோடு நோவோம், யார்க்கெடுத்து ரைப்போம்?

கையால் கிழிக்க வேண்டிய பனங்கிழங்கை ஆப்பெடுத்துக் கிழித்தவன் கதையாவே எமது வாழ்வி யல்புகள் எல்லாம் மாறிவிட்டன.

இன்று கூட தூதுவளை, முடக்கொத்தான், பிரண்டை, சண்டி, மொசுமொசுக்கை, முல்லை, கறிமுருங்கை, சாறணை, முசுட்டை ஆகியவற்றை வீடுகள்தோறும் வளர்க்க முடியும். ஆனால் இன்று இவற்றை ஒருவரும் வளர்க்கமாட்டார்கள். ஏனெனில் நாகரிகம் மெத்த நல்லாய் கூடிப்போய்விட்டது.

**************










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு மலர்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

நாற்பது வருட காலமாக
தளபாட விற்பனையில்
தற்போது முன்னணியில்
திகழ்பவர்கள் மங்களா
தளபாட நிலையத்தினரே!

மங்களா
தளபாட நிலையம்
153, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
☎021 222 3080, 0777 261076,0777 286071
(C/41740)

எமவர் வாழ்வில் அமைதி ஓர் நிலைபெற ஆரவாரித்து வரும்
சித்திரைப் புத்தாண்டை வருக வருக என
வரவேற்று,அன்பர்கள்,ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமதினிய புதுவருட நல்வாழ்த்துக்கள்!

❋ சகல விதமான கேக், ஐஸ்கிறீம், குளிர் பானங்களைத் தயாரிப்பதற்கான பொருள்கள்.
❋ கைத்தொழில் மூலப்பொருள்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் ஆயுர்வேத மருந்துச்சரக்குகள், அறோவ்ட் மா ஆகிய அனைத்தையும் பெற்றிட

ஸ்ரீ காந் எசன்ஸ் அன் குறோசறீஸ்
16A, கே.கே.எஸ் வீதி (சத்திரத்துச் சந்தி),
யாழ்ப்பாணம். ☎2219
(C/41731)

அனைவருக்கும் எமது இதயம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

விக்னேஸ்வரா நகைப் பூங்கா
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்
205/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021-4590022
10B,34D, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. தொ.பே.: 024-222 1857, 024- 222 1910
457, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு.06 தொ.பே.: 011-2559535
முடிப்பிள்ளையார் நகைப் பூங்கா இல.167, யாழ் சாலை, கிளிநொச்சி
021 - 459 0022 024 - 222 1857.024-2221910 011 - 255 9535

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புது வருட நல்வாழ்த்துக்கள்!

மேசைத் தொலைபேசி
அதிரடி விலையில்
IDD லோக்கல் இணைப்புக்கள் உடன் எப்பிர தேசத்திற்கும் தெளிவான முறையில் வீடுகளில் பூட்டித் தரப்படும்.

1 வருட உத்தரவாதம் உண்டு
IDD 25/= மட்டும்
விலை 13,500/= மட்டும்

| அழைப்புக்களுக்கான கட்டண விவரம் | |
|---|---|
| மாதாந்தக் கட்டணம் | 150/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (பகல்) | 11/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (இரவு) | 6/= |
| உள்வரும் அழைப்பு 2 நிமிடம் இலவசம் அதன்பின்னர் (பகல்) | 4/= |
| உள்வரும் அழைப்பு (இரவு) | முற்றிலும் இலவசம் |

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத் தருகின்றோம். அத்துடன், அன்ரனா மூலம் இயங்குகின்றது. மொபிடெல் இணைப்பு ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணை நிறுவனம். கையிருப்பு முடியும் முன் உடனே விரையுங்கள்.

மேலதிக விவரங்களுக்கு:
பவர் செலூலர் ரேடிங் கம்பனி
Office: இல. 185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 7070, 0712 399 220, 0777 281 521.
Shop: இல. 205/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/41737)

விக்கினம் தீர்க்கும் விநாயகர் அருளால் இன்றைய சித்திரைப் புத்தாண்டுத் திருநாள் மகிழ்ச்சியுடன் திகழ எமது நல் வாழ்த்துக்கள்!

யப்பான் தயாரிப்புக்களான
❋ M.D. - 90 மற்றும் சுப்பகப்
றீக் கொண்டிசன், மோட்டர்சைக்கிள்கள்

❋ அவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
❋ பற்றறி வகைகள்
❋ அஸிட் வகைகள்
❋ சோலர் வகைகள்

இவையனைத்தையும் ஓரிடமாகப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்:
அருள் விநாயகர் மோட்டோர்ஸ்
இல.108,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம். கிளை :- இல.262,கண்டிவீதி,சாவகச்சேரி.
அருள் விநாயகர் ரேடர்ஸ்
இல.106,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம். 5558
(C/41734)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு மலர்

VIII ஆம் பக்கத் தொடர்ச்சி ☞



நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. மனிதநேயத்துடன் வாழவும், பெரியோர்களை போற்றவும், கலாசாரப் பண்புகளைப் பேணவும், தான தர்மங்கள் செய்யவும் புத்தாண்டு ஏற்ற சந்தர்ப்பமாகிறது. தாய், தந்தையர், ஆசிரியர், சிவாசாரியார் ஆகியோரிடமிருந்து ஆசி பெறுவது ஒரு சிறந்த நிகழ்ச்சியாக அமைகிறது. அடுத்ததாக,நாள் வேலை, வியாபாரம் ஆரம்பித்தல், புதிய வகுப்புகளை தொடங்குதல், கணக்குப் பதிதல் என்பன சுப வேளையில் ஆரம்பிக்கப்படுகிறது. முதன்முதலாக நல்ல தினத்திலே பெரியவர்களிடம் கைவிசேஷம் பெறும் நிகழ்ச்சியும் இடம்பெறுகிறது.

உறவினர்,நண்பர்களை அழைத்து உணவு பரிமாறுவதும், ஆதரவு அற்றவர்களுக்கு அன்னதானம் செய்வதும் நீண்ட காலமாகக் கைக்கொள்ளப்பட்டுள்ளது. உறவினர்கள்,நண்பர்கள் இல்லங்களுக்குச் சென்று உறவாடி, உரையாடி மகிழ்தல் என்பன வருடம் முழுவதும் மக்களிடையே நல்லுறவைப் பேண வழிவகுக்கின்றன.

புத்தாண்டு மாலை சிறுவர்கள் பல விளையாட்டுக்களில் ஈடுபடுவர். பெரும்பாலும் போர்த்தேங்காய் அடித்து விளையாடும் வழக்கம் மிக அண்மைக் காலம் வரை நிலைத்திருந்தது. எனவே வருக புத்தாண்டே ! அமைதியான வாழ்வு தருவதாய் என வாழ்த்திப் போற்றுவோமாக !










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org